கோகுலம்

GOKULAM

அக்டோபர் '93 ரூ.3.00



மேகனா காட்டில் மெடல் மழை!



கோகுலம்

1993
அக்டோபர்
மாத இதழ்
மலர் : 11
இதழ் : 9

உயிர்களிடத்தில் அன்பு
வேணும் - தெய்வம்
உண்மையென்று
தானறிதல் வேணும்.
- பாரதியார்.

அருமைச் சிறுவர் சிறுமியரே,

அனைவருக்கும் அன்பு வணக்கம்.

புதிய தொடர்கதையைப் பாராட்டி ஏராளமாகக் கடிதங்கள் வருகின்றன. இதில் அதிசயப்படக்கூடியது எதுவும் இல்லை. வானொலியின் வாயிலாக ஏற்கெனவே இலட்சக்கணக்கான குழந்தைகளின் மனம் கவர்ந்த அனுபவம் உள்ளவர் அல்லவா கூத்தபிரான்?

விருதுநகரில் இருந்து ஒரு தம்பி, தபால்கார்டு ஒன்றில் இரண்டு பக்கமும் எறும்பு அளவு கையெழுத்தில், 'கோகுலம் வாழ்க' என்று எழுதி அனுப்பியிருக்கிறான். இதைச் செய்தியாக கோகுலத்தில் வெளியிட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டிருக்கிறான்! இப்படி எல்லோரும் எழுதி அனுப்பி, கோகுலத்தில் அதைச் செய்தியாக வெளியிட வேண்டும் என்று ஆரம்பித்தால், மற்ற விஷயங்களுக்கு இடம் வேண்டாமா? இதற்கெல்லாம் காரணம் தங்கள் மனம் கவர்ந்த கோகுலத்தில் எப்படியாவது தங்கள் பெயர் வெளிவர வேண்டும் என்ற அளவில்லாத ஆர்வமே என்பதை என்னால் உணர முடிகிறது. நீங்கள் ஏதாவது ஒரு நல்ல செயலைச் செய்து, அதைப் பற்றி எழுதியனுப்பினால் கூட கண்டிப்பாக உங்கள் பெயருடன் கோகுலத்தில் வெளியிடுவோம். எங்கே பார்க்கலாம்?



ஆகஸ்ட் இதழில் வெளியான ஒரு பாடல் ஏற்கெனவே பாடப் புத்தகத்தில் எட்டு ஆண்டுகளுக்கு முன் வந்து விட்ட ஒன்று என்பதைக் குறிப்பிட்டு ஏராளமான தம்பி தங்கைகள் எழுதியிருக்கிறார்கள். கோகுலம் ஆசிரியரை வேண்டுமானால் ஏமாற்றி விடலாம். ஆனால், அதன் பல்லாயிரக்கணக்கான வாசகர்களை யாருமே ஏமாற்ற முடியாது. அதனால், உங்கள் சொந்தக் கற்பனையாக இருந்தாலே ஒழிய, பெயர் வர வேண்டும் என்ற ஆசையில் இன்னொருவர் எழுதி வெளியிட்ட எதையும் அனுப்பி விடாதீர்கள். இது கண்டுபிடிக்கப்பட்டு விட்டால் எத்தனை தலைகுனிவு?

இம்மாதம் காந்தியடிகளின் 124-வது பிறந்த நாள் வருகிறது. சத்தியம், அஹிம்சை, தியாகம், மனிதாபிமானத்தால் மட்டுமே மனித குலத்திற்கு ஏற்படுகின்ற பிரச்னைகளுக்கு நிரந்தரத் தீர்வு காண முடியும் என்று வலியுறுத்தி, வாழ்ந்தும் காட்டிய தேசபிதா அவர். அவரது அறிவுரைகள் இன்று இந்தியா உட்பட எல்லா நாடுகளுக்கும் வழிகாட்டக்கூடிய ஒரு கை விளக்காக மாறி வருவதைக் கண்டு அதிசயப்படாமல் இருக்க முடிவதில்லை. அவரைப் போற்றி வணங்குவதுடன், அவரது கொள்கைகளையும் பின்பற்றி வாழ முயற்சி செய்வோம்.

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

அன்புடன்,

ரேவதி

(கௌரவ ஆசிரியர்)

கோகுலம்

இந்த இதழில்



திருட்டுத் தேங்காய் - பக். 48

ஹைடர் ஜக்கு - பக். 17





பாண்டியனைத் திருத்திய பாடல் போட்டி - பக். 52



பீனிக்ஸ் பறவை - பக். 77



நடத்து ஊர்வலத்தை - பக். 29

நீச்சல் சாதனையாளர் மேகனா நாராயண் பேட்டி!

மேகனா காட்டில் மெடல் மழை!

ஜூலை மாதம் நாளேடுகளைப் படித்தவர்களும், தொலைக்காட்சியைப் பார்த்தவர்களும் மேகனா நாராயண் என்ற பெயரை மறந்திருக்க முடியாது. நீச்சலின் எல்லாப் பிரிவுப் பந்தயங்களிலும் தொடர்ந்து பதக்கங்களை வென்றபடியே இருந்து எல்லோர் மனதிலும் இடம்பெற்ற ஜூனியர் சேம்பியன்தான் மேகனா நாராயண். இந்தியாவின் நீச்சல் வரலாற்றில் தனக்கென ஓர் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ள மேகனா இப்பொழுது பெங்களூர்வாசி.

''இப்போ வசிப்பது பெங்களூராக இருந்தாலும் நாங்கள் சென்னையைச் சேர்ந்தவங்கதான். மயிலாப்பூரில் வசித்தவங்கதான். வேலை நிமித்தம் பூனாவுக்குப் போனோம். பெங்களூருக்கு வந்து ஆறு வருஷம் ஆச்சு'' என்று தங்கள் குடும்ப வரலாற்றைக் கூறி நம்மை வரவேற்கிறார் மேகனாவின் அம்மா.

அகில இந்திய அளவுக்கு உயர்ந்துவிட்டிருக்கும் மேகனா எந்தவிதமான அலட்டலும் இல்லாமல் நம்மை வரவேற்கிறார். பால்வடியும் சிரித்த குழந்தை முகம். துறுதுறுவென்று சுறுசுறுப்பைக் காட்டும் கண்கள். 'இந்தச் சின்னப் பெண்ணா நேஷனல் சேம்பியன் அளவுக்கு உயர்ந்திருக்கும் சாதனையாளர்!' என்ற வியப்போடு நாம் பார்க்கிறோம்.

''நான் பிறந்தது பூனாவில். பதினாறு வயதாகிறது. படிப்பது பெங்களூர் மவுண்ட் கார்மல் காலேஜில். புகுமுக வகுப்பு'' என்கிறார் மேகனா.

''நீச்சலில் இன்று நேஷனல் சேம்பியன் அளவுக்கு உயர்ந்திருக்கிங்களே, இந்தச் சாதனையை உங்களால் எப்படிச் செய்து காட்ட முடிந்திருக்கிறது?''

''எங்க அப்பா பெங்களூரில் உள்ள MICO தொழிற்சாலையின் ஜெனரல் மேனேஜர். விளையாட்டில் ஈடுபாடு கொண்டவர். எங்க அம்மாவுக்கும் விளையாட்டில் ஈடுபாடு அதிகம். அதனால் பூனாவில் இருக்கும்போதே எனக்கு நீச்சல் கற்றுக் கொடுக்க ஆரம்பித்து விட்டார்கள்.''

● ரஜினி செல்வ[illegible]



● ஷைஜினி ஜெ[illegible]



● அம்மா மற்றும் தம்பியுடன் மேகனா





● வெற்றிக் களிப்பில்...

''ஆமாம். இங்கே பெங்களூருக்கு வந்ததும் மொஹிதே மற்றும் பிரதீப் குமார் ஆகியவர்களின் கண்காணிப்பில் மேகனாவை தீவிரப் பயிற்சி பெற வைத்தோம்'' என்றார் மேகனாவின் அம்மா.

''நான் 91-ஆம் ஆண்டு நடைபெற்ற தேசிய நீச்சல் போட்டிகளிலேயே நிறைய பிரிவுகளில் வெற்றி பெற்று ஆறு தங்கம், இரண்டு வெள்ளி, ஒரு வெண்கலப் பதக்கம் பெற்றிருக்கிறேன். அதோடு இரண்டு சாதனைகளையும் முறியடித்திருக்கிறேன்'' என்றார் மேகனா, அடக்கத்துடன்.

''பயிற்சி எல்லாம் எப்படி? தினமுமா? எத்தனை மணி நேரம்?''

''கடுமையான பயிற்சி. வெயில், மழை, பனிக்காலமாக இருந்தாலும் சரி. தினம் தவறாது காலை ஆறு முதல் எட்டு மணி வரை மறுபடியும் மாலை நாலரை மணியிலிருந்து எட்டரை மணி வரை நீச்சல் குளத்தில்தான் வசித்து வருகிறேன். புது வருடம், பொங்கல், தீபாவளி, ஒரு நாள் கூடத் தவறியதில்லை. நீச்சல், நீச்சல்தான்! நீச்சலைத் தவிர வேறு சிந்தனையே கிடையாது. இதில் சாதனை படைத்து உலக அரங்கில் உயர்ந்து விட வேண்டும் என்ற இலட்சியம் என்னை அயர விடாது தீவிரப் பயிற்சி பெறத் தூண்டியது. அதோடு எனக்கு நீச்சலின் எல்லா நுணுக்கங்களையும் சொல்லிக் கொடுத்து என்னை உயர வைத்துள்ள பெருமைக்கு மொஹிதே அவர்களின் தனி கவனத்தையும் கூற வேண்டும். இவைதான் எனது வெற்றிக்குக் காரணமானவை.''

சொல்லி முடித்த மேகனா, 'தான் கூறியவை சரிதானா' என்று ஒப்புதல் பெற அம்மாவின் முகத்தை நோக்கியது அவரது குழந்தை மனத்தையே காட்டியது.

''நீச்சல் தவிர வேறு என்னென்ன பிடிக்கும்? படிக்க நேரம் இருக்கா?''

''படிப்பில் எல்லாவற்றிலும் தொண்ணூறுக் குறையாது வாங்குவேன். மவுண்ட் கார்மல் கல்லூரியில் எனக்கு இடம் கிடைத்தது கூட 'மெரிட்'டில்தான். ஸ்போர்ட்ஸ் கோட்டாவில் அல்ல. தபால்தலை சேகரிப்பதில் ஆர்வம் உண்டு. மேற்கத்திய இசை பிடிக்கும்.''

''வெளிநாட்டுக்குப் போனதுண்டா?''

● அபிஜித்



''ஒரு முறை ஜெர்மனிக்குப் போயிருக்கிறேன். அங்குள்ள பயிற்சியாளர்களிடம் மேலும் புதிய நுணுக்கங்களைக் கற்றுக் கொண்டேன். போன இடக்

தில் கூட சில போட்டிகளில் கலந்து கொண்டு பரிசு வாங்கி வந்தேன்.''

''நீச்சல் வீரர்களில் யார் யாரைப் பிடிக்கும்?''

''அமெரிக்காவைச் சேர்ந்த ஜேனட் ஏவியன்ஸைப் பிடிக்கும். இந்தியாவில் லோரின் வர்கீஸைப் பிடிக்கும்.''

''இப்போ நடந்து முடிந்த போட்டி களில் உங்கள் சாதனை என்ன?''

''இந்த முறை நேஷனல் ஜூனியர் சேம்பியன் ஷிப் போட்டிகளில் எல்லாப் பிரிவுகளிலுமாக மொத்தம் பன்னி ரண்டு தங்கப் பதக்கங்களைப் பெற் றேன். தனியாக வாங்கினவை மட்டும் பத்து தங்கம். அதோடு ஒரு நேஷனல் ரிகார்டையும் செய்திருக்கிறேன்.''

இருநூறு மீட்டர் பட்டர்ஃபிளை பந்தயத்தில் இதுவரை சாதனையாளராக இருந்த பூவா சௌத்திரியின் சாத னையை முறியடித்ததைத்தான் மேகனா குறிப்பிட்டார்.

''உங்கள் இலட்சியம் என்ன?''


''இப்பொழுது ஹாங்காங்கில் நடைபெற இருக்கும் 'ஏஷியா பசிபிக்' போட்டிகளில் கலந்து கொள்ளக் கிளம்பிக் கொண்டிருக்கிறேன். இதில் வெற்றி பெறுவதுதான் உடனடி இலட்சி யம். அடுத்தது ஏஷியன் கேம்ஸ். பிறகு சர்வதேசப் போட்டிகள்.''

மேகனா என்பது பங்களாதேஷில் உள்ள ஒரு நதியின் பெயராம். நீச்சல் வீராங்கனைக்குப் பொருத்தமான பெயரே. மேகனாவின் தம்பி நகுல்கூட நீச்சல் விளையாட்டுக்காரன்தான். ஹைதராபாத்தில் அண்மையில் நடை பெற்ற 'சௌத் சோன்' போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்றிருக் கிறான்.

முன்பெல்லாம் மகாராஷ்டிரம்தான் நீச்சல் துறையில் முன்னணியில் இருந் தது. இன்று நிலைமை மாறி வருகிறது. கர்நாடகா - நேஷனல் அளவில் நீச்சலில் முதலிடத்தைக் கைப்பற்றி வருகிறது. மேகனா தவிர, சதீஷ்குமார், அபிஜீத், அனுபமா ஹுயிஸ், சஜனி ஷெட்டி, ரஜனி செங்கப்பா போன்றவர்கள் எதிர் காலத் தாரகைகள். ஸ்வர்ணலதா என்ற பதினான்கு வயதுச் சிறுமி டிரயத்லான் போட்டியில் தேசிய அளவில் தங்கம் பெற்றவள். சங்கீதாவின் பல சாதனை கள் இன்னமும் முறியடிக்கப்பட வில்லை. அண்மையில் நடைபெற்ற 20-ஆவது ஜூனியர் நேஷனல் சேம்பி யன் ஷிப் போட்டியில் கர்நாடகம் பெற்ற பதக்கங்கள் 72. (தங்கம் 36 + வெள்ளி 21 + வெண்கலம் 15). காரணம் எல்லாப் பெரிய பள்ளிகளிலும் நீச்சல் குளமும், திறமைமிக்க பயிற்சியாளர் களும் இருப்பதுதான். இவை தவிர நீச்சலுக்கான நீர் நிலைகள் நிறைய இருக்கின்றன.

ஊக்கம் தரும் பெற்றோர்கள், உன் னதமான பயிற்சியைத் தரும் கோச்கள், கடுமையாக உழைக்கும் இலட்சிய வேகம், வாய்ப்பு எல்லாம் பெற்றிருக் கும் மேகனா வெகு விரைவில் தனது இலட்சியத்தை அடைந்து, சர்வதேச அளவில் இந்தியாவுக்குப் புகழ் சேர்ப் பார் என்று உறுதியாக நம்பலாம். பல்லா யிரக்கணக்கான கோகுலம் வாசகர்சார் பில் நமது அட்வான்ஸ் வாழ்த்துகள்.

பேட்டி : அமுதவன்



பிரமிடு தெரியுமா?

எகிப்துக்கு வந்த ஆதிகால கிரேக்கர் கள் பிரமிடுகளைப் பார்த்த பொழுது, அது கோதுமையால் செய்யப்பட்டுக் கேக் போன்று இருப்பதாகக் கூறிச் சிரித்தனர். கிரேக்க மொழியில் கோதுமை கேக் எனப் பொருள்படும் 'பிரமிடு' என இதற்குப் பெயரிட்டனர்.

- மு. பூபாலன்.

புனித ஜார்ஜ் கோட்டை

தற்சமயம் தமிழக சட்டசபை அங்கத்தினர்களும், அமைச்சர்களும் அமர்ந்து பணியாற்றும் இடமான சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டை, இந்தியாவின் மிகப் பழமையான பிரிட்டிஷ் கட்டடங்களில் ஒன்று. சென்னை நகரின் சரித்திரமே இக் கோட்டையிலிருந்துதான் ஆரம்பமாகிறது என்று கூடச் சொல்லலாம்.

கி.பி. 1639- ஆம் ஆண்டில் கிழக்கு இந்தியக் கம்பெனியார் வியாபாரம் செய்வதற்காக ''பிரான்ஸ்டே'' என்பவர் ஐந்து கிலோ மீட்டர் நீளமும் இரண்டு கிலோ மீட்டர் அகலமுள்ள ஓர் இடத்தை கடற்கரைக்கு எதிரே வாங்கிப் போட்டார். அவரும், கிழக்கிந்தியக் கம்பெனியின் முதலாளியான ''ஆண்ட்ரூகோகன்'' என்பவரும் சேர்ந்து இந்தியத் தொழிலாளர்களின் உதவியோடு இந்த இடத்தில் ஒரு சிறு தொழிற்சாலையைக் கட்டி முடித்தனர். கட்டி முடித்த நாள் ஏப்ரல் 23, 1640. அது புனித ஜார்ஜின் நாளாகும். ஆகவே அந்த இடத்துக்கு புனித ஜார்ஜ் கோட்டை என்று பெயர் சூட்டினர்.



1640 முதல் 1749 வரை இந்தத் தொழிற்சாலையும், அதைச் சுற்றிலும் கட்டடங்களும் கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்தன. 1783-ஆம் ஆண்டு பாட்ரிக் ரோஸ் என்பவர் கோட்டையின் பல பகுதிகளைக் கட்டி முடித்தார். அப்போது கோட்டையின் பரப்பளவு 100 ஏக்கர். இதைக் கட்டி முடிக்க 75 லட்ச ரூபாய் (அந்தக் காலத்தில்) செலவாயிற்றாம்! இக் கோட்டையில் தங்குபவர்களுக்குத் தேவையான குடிநீரைத் தருவதற்கு பெரிய கொள்கலன்கள் (cisterns) கட்டப்பட்டன. இவற்றில் 6000 பேருக்குத் தேவையான குடிநீரை, நான்கு மாதங்களுக்கு சேமித்து வைத்துக் கொள்ளலாம். அக் கொள்கலன்கள் இப்போது இல்லை.

பாட்ரிக் ரோஸ் கட்டுவித்த இக் கோட்டையில் 1920 வரை பல புதிய கட்டடங்கள் அங்குமிங்கும் எழுந்தன.

இன்றைய தமிழ்நாடு சட்டமன்றத்தின் இரண்டாவது மாடி, இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே கட்டப்பட்டது. என்றாலும், இதற்கான அடித்தளம் 19-ஆம் நூற்றாண்டிலேயே போடப்பட்டது. குறிப்பாக தலைமைச் செயலகக் கட்டடத்தின் முதல் மாடியில் பிரம்மாண்டமாக நின்று கொண்டிருக்கும் கறுப்பு நிறத் தூண்களின் கதை சுவையானது.

இத்தூண்கள் 1732-ம் ஆண்டு கட்டப்பட்டன. சார்னகைட் என்ற கல்லால் கட்டப்பட்ட இத்தூண்கள் முதலில் கோட்டை சதுக்கத்திலேயே (Fort Square) அமைக்கப்பட்டன. (கோட்டை சதுக்கம், தற்சமயம் பரேட் கிரௌண்டாகக் காட்சியளிக்கிறது.) இக் கோட்டையை 1746-ஆம் ஆண்டு கைப்பற்றிய பிரெஞ்சுக்காரர்கள், இத்தூண்களை பாண்டிச்சேரிக்கு எடுத்துப் போய் விட்டார்கள். 1762-ஆம் ஆண்டு மீண்டும் இத்தூண்கள் சென்னை கோட்டைக்கு வந்து சேர்ந்தன. 1910-ல்தான் இத்தூண்கள் செக்ரடேரியட் கட்டடத்தின் முதல் மாடியில் பொருத்தப்பட்டன.

புனிதஜார்ஜ் கோட்டையின் மிகப் பழைய கட்டடங்களில் புனிதமேரி தேவாலயமும், தற்சமயம் கோட்டை மியூசியமாக உள்ள கட்டடமும் குறிப்பிடத்தக்கவை.

புனிதஜார்ஜ் கோட்டையிலுள்ள மற்ற சரித்திர கால இடங்கள், கிளைவ் ஹவுஸ், வெல்லஸ்லி ஹவுஸ் (இது கட்டப்பட்ட காலம் கி.பி. 1798) போன்றவை. கிளைவ் ஹவுஸில், ராபர்ட் கிளைவும் அவர் மனைவியும் வசித்தார்கள். இங்கிருந்துதான் வெல்லஸ்லி, திப்புசுல்தானுக்கு எதிராகப் போர் செய்யத் திட்டமிட்டார்.

கிளைவ் ஹவுஸுக்கு வடக்கேயுள்ளது பரேட் கிரௌண்டு. ஒரு காலத்தில் கார்ன்வாலிஸ் பிரபுவின் மிகப் பெரிய சிலை (14½ அடி உயரம்) இங்குதான் நின்று கொண்டிருந்தது. இது இப்போது கோட்டை மியூசியத்துக்குள் இருக்கிறது.

இன்று சென்னை நகருக்கு அழகு சேர்க்கும் முக்கிய சின்னமாக இது கம்பீரமான தோற்றத்துடன் கடற்கரைச் சாலையை ஒட்டிப் பரந்திருக்கிறது.

– தக்கோலம், அ. முஸ்தபா.



"சீடை, முறுக்கு நிறைய இருக்கே, யாரை காவலுக்கு வைக்கலாம்?"

"யாராவது பல்லில்லாத பாட்டி கிடைக்கிறாங்களா பாரு!"

– க. இராமலிங்கம்.



குருவிக் குடும்பம்

குருவி ஒன்று மல்லிகைக்
கொடியில் வந்து இருந்தது.
'கொத்த ஏதும் தா' என்று
கொஞ்சிக் கொஞ்சிக் கேட்டது.

குறுநெல் அரிசி தூவினேன்
கொத்திக் கொண்டு பறந்தது;
கூட்டில் இருக்கும் குஞ்சுகளுக்குக்
கொடுப்பதற்கு விரைந்தது.

ஐந்து குஞ்சு கூட்டிலே,
ஐந்தும் பிஞ்சுக் குஞ்சுகள்!
கொஞ்சம், உணவு பிந்தினால்,
கூச்சல் போடும் குழந்தைகள்.

அம்மாக் குருவி வந்ததும்
ஐந்தும் வாயைத் திறந்தன!
முதலில் திறந்த வாயிலே
குருவி உணவை வைத்தது!

குருவி மீண்டும் வந்தது.
குறுநெல் கொத்திச் சென்றது!
குஞ்சு ஒன்றின் வாயிலே
ஊட்டி விட்டு மீண்டது!

வந்து வந்து குறுநெல்லை
வாயால் அம்மாக் குருவியார்
கொத்திக் கொத்திக் கொண்டுபோய்க்
கொடுத்துப் பசியைப் போக்கினார்.

குறுநெல் தின்ற குஞ்சுகள்
வயிறு நிரம்பி விட்டதால்
கூச்சல் போட்டுக் குதித்தன!
குருவி அம்மா சிரித்தது!

– வ. இராசையா, கொழும்பு

பிராணிகளுக்காகப் பரிந்தவர்

கொளுத்தும் வெயில். வெளியே தலை காட்டப் பயப்படும் நேரம். சாலையில் பாரம் ஏற்றப்பட்ட ஒரு மாட்டு வண்டி. மலை போல் சுமை வண்டியில் ஏற்றப் பட்டிருக்கிறது. சாலையில் ஒரு மேடான இடம். பாரத்தை இழுக்க முடியாது மாடு திணறுகிறது. வண்டிக்காரர் விடுவதாக இல்லை. சாட்டைக் குச்சியால் மாட்டை அடி அடி என்று அடிக்கிறார் சற்றும் இரக்கமில்லாது. மாட்டின் வாயில் நுரை தள்ளுகிறது. அந்த நேரத்திலும் அது நன்றி உணர்வோடு தனது எஜமானுக்கு உழைக்க நினைத்து இழுக்க முயல்கிறது. ஆனால் அதனால் முடிவதில்லை. அது வேண்டுமென்றே சண்டித்தனம் செய்வதாக வண்டிக்காரர் நினைத்து, வாலைப் பிடித்து முறுக்குகிறார்.

இப்படிப் பட்ட கொடுமையான காட்சிகளை நாம் அடிக்கடி சாலைகளில் பார்க்கிறோம். ''ஏம்ப்பா, இத்தனை பாரம் ஏற்றியிருக்கிறாயே? மாட்டால் இந்த மேட்டில் இதை இழுக்க முடியுமா?'' என்று நாம் கேட்டால் பதில் என்ன வரும் தெரியுமா?

''சரிதான் போய்யா உன் வேலையைப் பார்த்துக்கிட்டு. வண்டி என்னுது. மாடு என்னுது. அதுக்குத் தவிடு, தண்ணி வைக்கிறவன் நான். அதுக்கு எத்தனை சுமை ஏத்தணும்னு எனக்குத் தெரியும்'' என்றுதான் காட்டமான பதில் வரும்.

இப்படி விதண்டாவாதம் பேசும் வண்டிக்காரருடன் என்ன செய்ய முடியும்? பேசாமல் திரும்பி விடுவோம். ஆனால் மனதிற்குள், ''இப்படி அநியாயமாக வாயில்லா ஒரு ஜீவனைக் கொடுமைப்படுத்துகிறார்களே, இதைக் கேட்பார் இல்லையா? இந்த அநியாயத்திற்கு ஒரு வழி பிறக்காதா?'' என்று ஏங்குவோம்.

இந்த ஏக்கத்தைத் தீர்த்து வைக்கத் தோன்றியதுதான் பிராணி நலச் சங்கம் என்கிற SPCA. இப்படி அளவுக்கு மீறிய சுமைகளை ஏற்றி மாட்டை வதைக்கும் காட்சியை எங்கேயாவது நாம் கண்டால் உடனே SPCA-வுக்குத் தெரிவிக்கலாம்.

இந்த எஸ்பிசிஏவை யார் தொடங்கினார்கள்? எப்பொழுது தொடங்கினார்கள்?

பிராணிகளுக்குக் கொடுமை இழைக்கப்படுவதைத் தடுக்கும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த சங்கத்தைத் தொடங்கிய பெருமைக்கு உரியவர் ஹென்றி பர்க் என்ற அமெரிக்கர்.

நியூயார்க் நகரவாசியான ஹென்றி பர்க், அமெரிக்காவின் தூதராக ரஷ்யாவுக்குப் போனார். போன இடத்தில் மாஸ்கோவில், தான் பயணம் செய்த கோச் வண்டியின் குதிரையை, வண்டி ஓட்டி இரக்கமில்லாது அடித்துக் கொடுமைப்படுத்தியது அவர் மனதைத் தொட்டது. நியூயார்க் நகரில் விலங்குகளும், பறவைகளும் கொடுமைப்படுத்



தப்படுவதைக் கண்டு ஏற்கெனவே அவர் மனம் கலங்கியிருந்தார். வேட்டைப் பிரியர்களும், குறிதவறாது துப்பாக்கி சுடும் திறமை பெற்றவர்களும், புறாக்களை வானத்தில் பறக்க விட்டு சுட்டு வீழ்த்தி மகிழ்வார்கள். நாய்களையும், சேவல்களையும் சண்டையிட வைத்து பந்தயம் கட்டுவார்கள். இப்படி விலங்குகளும், பறவைகளும் கொடுமைக்கு ஆளாக்கப்படுவதைத் தடுக்க நம்மால் இயன்றதை உடனே செய்ய வேண்டும் என்ற வேகம் மனத்தில் எழுந்தது. பதவியை உதறி விட்டு அமெரிக்கா திரும்பினார்.

ஹென்றிபர்க், தனது அமெரிக்க நண்பர்களுடன் ஆலோசித்து, பிராணிகளைக் கொடுமைப்படுத்துவதை ஒரு குற்றமாக எடுத்துக் கொண்டு வழக்குப் பதிவு செய்யக்கூடிய ஒரு சங்கத்தை (ASPCA) 1866 ஆம் ஆண்டு நியூயார்க்கில் அதிகார முறைப்படி ஆரம்பித்தார்!

சங்கத்தை ஆரம்பித்த காலத்தில் அதன் கொள்கை செயலாக்கும் தொண்டர், தலைவர் எல்லாமே தான் ஒருவராக நின்று மனம் தளராது ஹென்றிபர்க் செயலாற்றினார். நாள் முழுவதும் நகரைச் சுற்றிச் சுற்றி வந்து எங்காவது விலங்குகளோ, பறவைகளோ கொடுமைக்கு ஆளாகின்றனவா என்று பார்த்து, கொடுமை புரிந்தவர்களை நீதிமன்றத்திற்கு அழைத்து வந்து வழக்குப் போட்டு அபராதம் கட்டிப் பணிய வைத்தார். இருப்பினும் அவரது உண்மையான இலட்சியத்தை மக்கள் அதிகமாக உணரவில்லை. அவர் தொந்தரவு செய்யும் விதண்டாவாதக்காரர் என்றே எல்லோரும் எள்ளி நகையாடினர்.

ஒருமுறை ஆமைகள் நிறைந்த வியாபாரக் கப்பல் ஒன்று, விற்பனைக்காக ஆமைகளை ஏற்றி வந்தது. வாங்க வருபவர்களின் கவனத்தைக் கவர உயிருள்ள ஆமைகளின் கால்களில் துளையிட்டு, கயிற்றில் தோரணமாகக் கட்டியிருந்தார்கள். இதைக் கண்டு மனம் பதைத்த ஹென்றிபர்க், இது தண்டனைக்குரிய கொடுமையான செயல் என்று வழக்குத் தொடுத்தார். வழக்கில் ஹென்றிபர்க்


கிற்கு நியாயம் கிடைக்கவில்லை. ஆனால், இந்த வழக்கு பற்றி பத்திரிகைகளும், செய்தித்தாள்களும் நிறைய எழுதி, படங்களையும் வெளியிட்டு, ஹென்றிபார்க்கின் இயக்கத்திற்குத் தங்களை அறியாது விளம்பரம் தேடித் தந்தன. அவரைப் பற்றியும் அவரது இலட்சியம் பற்றியும் மக்கள் உயர்வாக எண்ண ஆரம்பித்தார்கள். தாங்களாகவே அவரது இயக்கத்தில் இணைந்து தொண்டாற்ற பலர் முன்வந்தனர்.

எஸ்பிஏவின் செயல்பாடே தொண்டுதான். இதில் செலவுக்குத்தான் வழி இருந்ததே தவிர, வருமானத்திற்கு வழி இல்லை. நிதி இல்லாமையால் ஹென்றிபர்க் மனம் நொந்தார். உண்மையாகவே இது உயர்ந்த தொண்டு என்றால் இதை நடத்தப் போதுமான நிதி உதவியைப் பெற இறைவன் மனமிரங்கி வழிகாட்ட வேண்டும் என்று வேண்டிக் கொண்டார்.

நல்ல செயல்கள் இறைவனால் வாழ்த்தப்படுபவை என்பதை நிரூபிக்க, பிரெஞ்சுக்காரர் ஒருவர் மூலமாக உதவி வந்தது. அவர் ஹென்றிபர்க்கின் இலட்சியத்தை நன்கு அறிந்தவர். அவருக்கு உதவ வேண்டும் என்பதற்காக இறக்கும் போது தனது சொத்தில் ஒரு லட்சம் டாலரை இந்த எ.எஸ்.பி.ஏ. வுக்கு எழுதி வைத்தார்.

ஹென்றிபர்க்கின் தொண்டு, இயக்கமாகவே மாறிப் பரவியுள்ளது இன்று இந்தியா உட்பட உலக நாடுகள் எல்லா வற்றிலும் இதற்குக் கிளைகள் இருக் கின்றன.

சொல்வாய் சேவலே!




கூறித்த வேளை கூவிடும்
'கொக்க ரக்கோ' சேவலே!
குறித்த நேரம் விழிக்க நீ
கற்றுக் கொண்டது எப்படி?

வீட்டில் உள்ள கடிகாரம்
விலையில் மிகுதி யானது
ஓட்டம் நின்று போனது;
ஒலித்தல் இன்றி ஓய்ந்தது!

நடக்கப் போகும் தேர்விலே
நல்ல மதிப்பெண் வாங்கணும்!
விடியற் காலை எழுந்துமே
வீட்டில் பாடம் படிக்கணும்!

இனிப்பு வாங்கித் தருகிறேன்!
இரட்டை ஊதல் தருகிறேன்!
எனக்கும் அந்தக் கலையினை
இயம்ப வேண்டும் நீயுமே!

- புலேந்திரன்.



மரமோ மரம்!

உலகில் மனிதன் தோன்றும் முன்னே மரங்கள் தோன்றி விட்டன. ஆயிரக்கணக்கான ஆண்டு வயதான சில புராதன மரங்கள் இன்னும் பூமியில் உள்ளன. அந்தப் பழம்பெருமைமிக்க மரங்களையெல்லாம் உரிய நாட்டினர் பொக்கிஷமாகப் பாதுகாத்து வருகிறார்கள். இப்படிப் பாதுகாக்கப்படும் பழைமையான மரங்கள் ஆறு உள்ளன. இவை பற்றிய செய்திகள் சுவையானவை.

லம்பார்டி என்னும் பள்ளத்தாக்கில் உள்ள ''ஸோமர்ஜைப்ரஸ்'' என்னும் மரம் கிறிஸ்து பிறப்பதற்கு நாற்பது ஆண்டுகளுக்கு முன்பே நடப்பட்டதாம். இப்போது அதன் வயது எவ்வளவு என்பதை நீங்களே கணக்குப் போட்டுப் பாருங்களேன்.

இங்கிலாந்தில் 'கென்ட்' பிரதேசத்தில் ப்ராபர்ன் நகரில் உள்ள 'யூ' என்ற மரத்தின் வயது 3,000 ஆண்டுகளாகும்.

உலகில் பழமையான மற்றொரு மரம் ஸ்ரீலங்கா அனுராதபுரத்திலுள்ள அரச மரமாகும். அசோகரின் மகள், இளவரசி சங்கமித்திரை கி.பி. 288-ல் புத்தமதக் கொள்கைகளைப் பரப்பும் நோக்கத்தோடு இலங்கை அரசன் திஸ்ஸாவைச் சந்திக்க வந்த போது அவள் நினைவாக இம் மரம் நடப்பட்டதாம்.

ஆசியா மைனரை அடுத்துள்ள கடலில் இருக்கும் டர்க்கிஷ் தீவின் தலைநகரான காஸில் உள்ள மரம் ஒன்று 2000 ஆண்டுகளுக்கு முன் நடப்பட்டது. மருத்துவ அறிஞர் ஹிப்போக்ரேட்ஸ் அம்மரத்தடியில்தான் மாணவர்களுக்குக் கல்வி கற்பித்தாராம்! ஆனால் இது ஹிப்போக்ரேட்ஸ் வாழ்ந்த காலத்திற்கு 400 ஆண்டுகளுக்கு முன்பே இருந்ததாம்.

மற்றொன்று, விதுவேவியாவில் உள்ள 2000 வயதான ஓக் மரம். இது ஐரோப்பியாவிலேயே மிக வயதானது. சமீபத்தில் இது பழுதுபட்ட போது மருத்துவ விஞ்ஞானிகள் மரத்திலிருந்த வேண்டாத சாற்றை நீக்கி மரத்துக்கு உயிரூட்டினர். இன்றும் அது பத்திரமாகப் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

மெக்ஸிகோவில் ஆயிரக்கணக்கில் வயதான ஒரு பிரம்மாண்டமான மரம் உள்ளது. சமீபத்தில் அதன் அருகே ரோடு போட நினைத்த போது அதை வெட்ட மனமின்றி, அதன் நடுவில் அகலமாய் காரும், லாரியும் நுழையும்படி குடைந்து ஏற்பாடு செய்து விட்டனர். சுரங்கப்பாதையில் நுழைந்து போவது போல வாகனங்கள் இதில் செல் கின்றன. இதனால் இம்மரம் பட்டுப் போகாதிருக்கத் தகுந்த சிகிச்சை தொடர்ந்து அளிக்கப்படுகிறது.

– ந. கமலக்கண்ணன்

எங்கள் ஊரில் நடந்தது!

தொடாமல் வா!

என் நண்பனுக்கு மூக்கில் அடி பட்டிருந்தது. அதற்கு அறுவை சிகிச்சை செய்ய வேண்டி மருத்துவமனை சென்றான். டாக்டர், ''நாளை காலை பத்து மணிக்கு அறுவை சிகிச்சை வைத்துக் கொள்ளலாம் என்றார். அதோடு சாப்பிடாமல் வர வேண்டும் என்பதற்காக, ''நாளை தண்ணீர் கூடத் தொடாமல் காலை எட்டு மணிக்குள் மருத்துவமனைக்கு வர வேண்டும்'' என்று சொல்லியனுப்பினார்.

நண்பன் அதை அப்படியே அர்த்தம் எடுத்துக் கொண்டு, காலையில் அப்பா கூறியும் கேட்காது பல் கூட விளக்காமல் மருத்துவமனைக்குச் சென்றான். அனைவரும் அவனைப் பார்த்துச் சிரித்தனர். பல் துலக்கி முகம் கழுவி வரச்சொல்லி டாக்டர் அனுப்பி விட்டார். அப்புறம் தான் அறுவை சிகிச்சை நடத்த ஆயத்தம் செய்தனர். இன்றும் கூட காலையில் பல் துலக்கச் செல்லும் போது நண்பன் நடந்து கொண்டதை எண்ணி எங்களுக்குச் சிரிப்பு வந்து விடுகிறது.

- எம். விவேக்குமார்.



கையில் சட்டை

எங்கள் வகுப்பாசிரியா வினாக் களுக்கு விடை கூறாவிட்டால் நிறைய அடிப்பார். அன்றும் அவ்வாறே ஒ மாணவனின் சட்டையைப் பிடித்து கொண்டார். விக்கல் வரவே ஒருவ யால் டம்ளரில் தண்ணீர் குடிக்கலானா விடை கூறாத அம்மாணவனோ அ ருடைய அடிக்குப் பயந்து மெதுவ சட்டையின் பட்டன்களைக் கழ விட்டு வகுப்பறையை விட்டு வெளி

பெரிய கண்டம்

எங்கள் வரலாறு ஆசிரியர் காலாண் டுத் தேர்வுக்கான விடைத்தாள்களைத் திருத்திக் கொண்டிருந்தார். திருத்திக் கொண்டிருந்த ஆசிரியர் தனக்குள் சிரித் துக் கொண்டார். இதைப் பார்த்து எங்களுக்கெல்லாம் குழப்பம். என்ன வென்று ஆசிரியரிடம் கேட்கலாம் என் றால் பயம் வேறு. இருந்தாலும் பயத் தைவிட்டு விட்டு, கேட்டு விட்டோம். உடனே ஆசிரியர் அந்த விடைத்தாளை எங்களிடம் கொடுத்தார். அதைப் படித் தவுடன் எங் களாலும் சிரிப்பை அடக்க முடியவில்லை. காரணம் உலகிலேயே



ஓடிவிட்டான். தண்ணீரைக் குடித்து முடித்த ஆசிரியர் கையில் பார்த்தால் சட்டை மட்டும்தான் இருந்தது! அம்மாணவனின் செய்கையை நினைத்துத் தன்னை மறந்து சிரித்துவிட்டார். நாங்களும் சிரித்தோம். அன்று முதல் ஆசிரியர் யாரையும் அடிப்பதில்லை.

- வி.எம். தெய்வா.



இடைச் சொல்

நான் ஏழாம் வகுப் பில் படித்துக் கொண்டிருந்த போது எங்கள் தமிழாசிரியர் இலக்கணப் பாடம் நடத் திக் கொண் டிருந்தார். அப் பொழுது ஆனந்தன் என்ற மாண வனை நோக்கி, ''இடைச் சொல் என்றால் என்ன'' என்று கேட்டார். அதற்கு அவன், ''இருவர் பேசிக் கொண்டிருக் கும் போது நாம் போய் அவர்களிடம் குறுக்கிட்டு ஏதாவது சொன்னால் அதற்கு இடைச் சொல் என்று பெயர்'' என்று கூறினான். எங்கள் வகுப்பே சிரிப் பலையில் மூழ்கியது.

- எஸ். தட்சணாமூர்த்தி.



மிகப் பெரிய கண்டம் ஏது என்ற கேள்விக்கு ''எமகண்டம்'' என்ற பதில் இருந்தது அந்த விடைத்தாளில்!

- க. பாபுராஜ்.

இரகசியம்

எங்கள் வகுப்பு மாணவன் அலெக் சாண்டர் அடிக்கடி ஏதாவது குறும்பு செய்து கொண்டே இருப்பான். அடிக் கடி வீட்டில் யாருக்கும் தெரியாமல் 'மெயின்சுவிட்சை' ஆஃப் செய்து விட்டு 'கரெண்ட் கட்' ஆகிவிட்டது என்று பொய் சொல்வான். அவர்களும் நம்பி விடுவார்கள்.

இப்படித்தான் ஒரு நாள் 'மெயின் சுவிட்சை' ஆஃப் செய்து விட்டு மறந்து



போய்ச் சென்று விட்டான். அது கோடை காலம். வீட்டில் ஃபேன் ஓடாமல் இருக்க முடியாது. அலெக்சின் அம்மா பக்கத்து வீட்டில் கரண்ட் இருப்பதை அறிந்து தன் வீட்டில்தான் ஏதோ கோளாறு என்று எலெக்ட்ரீசியனைக் கூட்டி வந்தார்கள். ஏமாற்றுப் பேர்வழி யான எலக்ட்ரீசியன் ஏதோ செய்வது போல் நடித்து மெயின் சுவிட்சை மட்டும் போட்டுவிட்டு பத்து ரூபாய் ரிப் பேருக்கான செலவாக வாங்கிச் சென்று விட்டான். அலெக்சுக்கு அப்போதுதான் உண்மை தெரிந்தது. அன்றிலிருந்து அவன் அந்தக் குறும்பு வேலையை விட்டு விட்டான். வீட்டில் உண்மை யைச் சொல்லவே இல்லை. சொன்னால் தான் செம்மையாக அடி விழுமே!

- இ. ரமேஷ்குமார்.

பழனி மட்டும் ஏறு

பழனி போகிற வழியில் ஓர் ஊரில் வண்டி நின்றது. உடனே கண்டக்டர், ''பழனி மட்டும் ஏறு என்றார். உடனே ஓடி வந்து ஒருவர் ஏறினார். கண்டக்டர் அவரிடம் வந்து ஐந்து ரூபாய் கொடுங் கள்'' என்றார். உடனே அவர் ''எப் பொழுதும் மூன்று ரூபாய் தானே? இன் றைக்கு மட்டும் ஏன் ஐந்து ரூபாய்?'' என்று கேட்டார். கண்டக்டர், ''நீ எந்த



ஊரு?'' என்று கேட்டார். ''பழனிக்கு பக்கத்தில் உள்ள ஊர்'' என்றார் அவர். ''நான் பழனி மட்டும் தானே ஏறச் சொன்னேன்?'' என்றார் கண்டக்டர். ''என் பெயர் பழனிதாங்க'' என்றார் அவர். உடனே எல்லாரும் சிரித்தனர் - கண்டக்டர் உட்பட.

- டி. சரவணபிரபு.



''ஏண்டா, பரீட்சையில எல்லா கேள்வி யும் எழுதினேன்னு சொன்னியே, அப்புறம் எப்படி ஃபெயிலானே?''

''எல்லா கேள்வியும் எழுதினேன்னு தானே சொன்னேன்? ஆனா அதுக்கெல் லாம் பதில் எழுதினேன்னு சொல்ல லையே.


- ஆர். சௌந்தர்ராஜன்.


ஹைடர் ஜக்கு
வேதாளம் வீழ்ந்தது!

கதை : உதயசாய் படம் : ஏ.டி. தியாகராஜன்


ஹைடர் ஜக்கு, மாற்று கிரகத்தைச் சேர்ந்த நல்லவன். அசாதாரண சக்தி பெற்ற மாயச் சிறுவன். தவறு செய்பவர்களைத் தண்டித்து, நல்லவர்களுக்கு உதவும் ஜக்குவின் அருமைத் தோழன் ராமு. ஒரு நாள்...





கரண்டும் இருக்கு! லைட் எரியாதது!
சாப்பிட்டாச்சு ராமு...
ராமுவோட யார் பேசறது?
இது ராமுவின் அறை. ஜீனோவை தொந்தரவு செய்யாதீர்!
என்னது! அதிசயமா இருக்கே! நானும் தொட்டுப் பார்க்கிறேன்!
பலமாக ஷாக் வாங்கிய எலக்ட்ரீஷியன்—
அம்மாடி! தொலைஞ்சேன்!
ராமு அம்மா தொட்டப்போ நான் மின்சாரம் சாப்பிட்டுக்கிட்டிருந்தேன். அதனால் அவங்களுக்கு ஷாக் அடிக்கல. இப்போ சாப்பிட்டு முடிச்சிட்டேனே. தாக்கிடுச்சு!
ராமுவின் அறைக்குள்—
ராமு..!
தேனருவி



என்ன ஆச்சு?
புது ஆபத்து வருதுன்னு என் எலக்ட்ரானிக் மூளை சொல்லுது!
ஆமா. சுவற்றுகிரக கொலை மனிதன் அருகே எங்கோ இறங்கியிருக்கிறான்!
நீயே பயப்படும் படி ஆபத்தா?
அவனால நம்ம ஊர் ஜனங்களுக்கு ஆபத்து நேரலாம்னு தோணுது.
நீ கூடத்தான் வேற்று கிரகம்...
ஆனா நான் மத்தவங்களுக்கு உதவும் நல்லவனாச்சே! இப்ப வந்திருக்கிறவன் அப்படியில்லை! கிளம்பறேன்.
நானும் வரேன். தனியாப் போய் என்ன பண்ணுவே?
இது அழிக்கும் எலக்ட்ரானிக் சக்தி உடையது. உன்னால் சமாளிக்க முடியாது.
எனக்கு அறிவு இருக்கு. அது போதும் அதை அழிக்க!
அறிவு ராஜாவே கிளம்பு!
அத்தையை சம்மதிக்க வைத்து ராமுவும் கிளம்பினான்.
ஏறிக்கிட்டேன் ஓட்டு வண்டியை!


ராமு உட்கார, ஜக்கி நிற்க பறந்தது.
இரும்புத் தான் சவாரி ஜோர்! ஜோர்! இதைப் போல சவாரி உண்டா பார் பார்!
ஏன் எலக்ட்ரானிக் உடல் தகிக்கிறது! அருகே தான் வேதாளம் இருக்கிறதும்! அதோ பார்!
மலை முகட்டில் வேதாளத்தின் பறக்கும் தட்டு!
அதன் அருகே எலக்ட்ரானிக் சக்தி மிக்க நெற்றிக்கண் வேதாளம்!
உஸ்...ஸ்
உஸ்ஸ்...
புலி வேதாளத்தைப் பார்த்தது.
புது மிருகம். நல்ல இரை.
புலி வேதாளத்தின் மேல் பாய்ந்தது.
உர்ர்ர்...
வேதாளத்தின் நெற்றிக்கண்ணில் இருந்து பாய்ந்த எலக்ட்ரானிக் கதிர்கள் புலியை வீழ்த்தின!


வேதாளத்திற்கு நான்கு காதுகள். போர்த்திக் கொண்டு இரவில் நகருக்குள் வந்தது! ரோந்து போகையில் -
உஸ்..உஸ்... உஸ்..உஸ்...
ரெண்டு திருடங்க; ஒரே போர்வைக்குள் ஒளிஞ்சு போறாங்க..!
புடிக்கலாம். நல்ல ஜோக்!
எருமை வேஷம் போட்டு ஏமாத்தறான்!
வேதாளம் திரும்பி நெற்றிக் கண்ணைத் திறக்கவும் ஒருவன் கதறினான்!
ஐயோ! வேதாளம்!
இன்னொருவன் ஜீப்பில் ஏறித் தப்ப முயல -
கதிர்வீச்சு வேதாளம்! மறைச்சா போதும்!
ஆனால் கதிர்வீச்சுக்கு ஜீப்பும் பலியானது!
ஆ! ஐயோ!
வேதாளம் வெறியை விதைத்தது! எங்கும் பீதி! அழுகுரல்!
என்ன கொடுமை! பயங்கரம்!
இதை அழிக்க உடனே ஏதாவது பண்ணணும்!


நான் முயற்சி செய்யறேன்.
எனக்கும் எலெக்ட்ரானிக் உடம்புதான். பார்க்கலாம்.
வேதாளம் தன் கதிர் வீச்சை வீச ஜக்குவும்....
.....பாதிக்கப் படுகிறான்!
எனக்கே இப்படின்னா, மனிதர்கள் எப்படிப் பதறுவாங்க!
ஜக்குவின் திண்டாட்டம் ராமுவைப் பதறவைக்கிறது.
ஜக்கு! உனக்கே பாதிப்பா!
வேதாளம் ராமுவின் பக்கம் திரும்ப –
கதிர்வீச்சு ராமுவைத் தாக்கப் பாய்ந்துவர, அவன் நகர்ந்து தப்பிக்கிறான்!
நல்ல காலம்! ஆண்டவன் புண்ணியத்துல தப்பிச்சேன்!


ஜீப்பின் உடைந்த பாகங்க ளிடையே விழுந்த ராமு-
அட! இது ஜீப்பின் கண்ணாடி! இதை வைத்தே...!
ராமுவின் மூளை வேலை செய்தது! கண்ணாடியை வேதா ளத்தை நோக்கித் திருப்புகிறான்!
பயன் இருக்குமா? கடவுளே கருணை செய்...
கண்ணாடியில் பாய்ந்த கதிர் வீச்சு, திரும்பிப் பிரதிபலித்து வேதா ளத்தையே தாக்க கிறது!
உஸ்ஸ்...
வேதாளம் தவிக்கிறது! அப்பாடி அழிந்தது!
வேதாளம் அழிந்ததும்-
மந்திரமும் இல்ல, மாயமும் இல்லே! கண்ணாடியைக் காட்டி, கதிர்வீச்சு அதன் மேலேயே திரும்பும்படி பண்ணினேன். அதன் கதை முடிஞ்சது!
ராமு என்ன மாயம் பண்ணினே?
அறிவைப் பயன் படுத்தி அழிச்சேன்னு சொல்லு! வாழ்க ராமு!
இல்லே! வாழ்க கண்ணாடி!

டேய் நாட்டுப்புறம்!

நிகில் கம்ப்யூட்டரின் முன் அமர்ந்தான். மானிட்டரில் 'வெல்கம்' வந்தது. ஆசிரியர் அவனுக்கு கொடுத்திருந்த 'ப்ரொக்ராமை' டைப் செய்ய ஆயத்தமானான். அந்தக் கம்ப்யூட்டரை அப்பா அவனுக்குப் பிறந்த நாள் பரிசாக வழங்கியிருந்தார். நிகிலுக்குத் தன்னுடைய கம்ப்யூட்டரைப் பற்றி அதிகப் பெருமை உண்டு. அதில் வடிவமைக்கப்பட்டிருந்த 'ஸ்பீச் ஸிந்தஸைசரின்' உதவியால் அவனிடம் கரகரப்பான குரலில் பேசவும் செய்யும்.

திரையில் தெரிந்த ஒளிப் புள்ளிகளையும் மீறி ஏதோ நிழலாடியது. திரும்பினான். கதவோரமாக ஒளிந்து கொண்டு தலையை நீட்டியபடி நின்றிருந்தான் இருளன். அவன் அவர்கள் வீட்டு வேலைக்காரன். மலைவாசிச் சிறுவன். அவனும், அவனுடைய அழுக்குத் தோற்றமும் ஏனோ நிகிலுக்குக் கோபம் வரச் செய்தது. வெடுக்கென கீபோர்டைத் தள்ளினான்.

''டேய் நாட்டுப்புறம். என்னடா பண்றே ஒளிஞ்சிண்டு? போடா'' கோபத்துடன் கத்தினான் நிகில்.

திடுக்கிட்டு பயந்து போன இருளன் கையில் வைத்திருந்த தேநீர் கோப்பையைத் தவற விட்டு விட்டு ஓடினான். கீழே விழுந்த கோப்பை நல்லவேளை உடையவில்லை. கம்பளம் விரித்திருந்த தரையில் தேநீரைக் கொட்டி விட்டு, ஒரு சுழல் வட்டம் அடித்து நின்றது. நிகிலுக்கு இன்னமும் கோபம் தணியவில்லை.

''டேய் நாட்டுப்புறம்! இந்த சாணி மூஞ்சிக்கு கம்ப்யூட்டர் வேற பார்க்கணுமாக்கும்? இன்னொரு தடவை எட்டிப் பாரு தொலைச்சுப்புடுவேன்.'' மனத்திற்குள் திட்டியபடி கம்ப்யூட்டரைப் பார்த்தான். அது இன்னமும் 'வெல்கம்' கூறியபடியே இருந்தது. அவனிடம்



இருந்து அடுத்த கட்டளை வரும் வரை அது அப்படித்தான் இருக்கும். இருளன் மேலிருந்த கோபத்துடன் பட்டன்களைத் தட்டினான். திரையில் எந்த மாற்றமும் இல்லை. படபடப்புடன் மீண்டும் பட்டன்களைத் தட்டினான். மாற்றம் இல்லை. அவனுடைய கட்டளையை அது ஏற்றுக் கொள்ளவில்லை. திரையில் தெரிந்த 'வணக்கம்' அவனுக்கு எரிச்சலை உண்டாக்கியது. அந்த இருளன் நாட்டுப்புறத்தின் பார்வை பட்டவுடனேயே இப்படியாகி விட்டதே? சரியான கொள்ளிக் கண்! வாய் விட்டுத் திட்டினான். திரையைப் பார்த்துப் பரிதவித்தான். என்ன செய்வது? அவனுக்குப் புரியவில்லை. அவனுடைய எட்டாம் வகுப்பு கம்ப்யூட்டர் அறிவிற்குக் கட்டளையிட மட்டும்தான் தெரியும். கம்ப்யூட்டரை ரிப்பேர் பார்க்கவா முடியும்? அதுவோ எலெக்ட்ரானிக் பொருள். விலையும் அதிகம். எல்லாம் இருளன் நாட்டுப்புறத்தால்

கே.பி. சாந்தி

வந்த வினை! திரும்பவும் கோபம் வந்தது.

"நிகில் என்ன ஆச்சு? கம்ப்யூட்டரைப் பார்த்து முழிக்கிறாய்? ஏதாவது பிரச்னையோ?" - தோளைத்தட்டிக் கேட்டார் அப்பா. நிகிலிடமிருந்து தயக்கமாக பதில் வந்தது.

"நான் இடுகிற கட்டளையை ஏத்துக்கவே மாட்டேங்குது அப்பா."

"அப்படியா! நான் பார்க்கட்டுமா...?" - அப்பா பின் இணைப்புகளைப் பரிசோதித்தார்.

"நிகில், இங்கே பார், கீ போர்டுக்கும் கம்ப்யூட்டருக்கும் இடையேயான இணைப்பு துண்டிக்கப்பட்டு இருக்கிறது. இப்ப சரியாகி விடும்," என்றபடி அதைச் சரிசெய்தார்.

"இருளன் மேலிருந்த கோபத்தில் கீ போர்டைத் தள்ளி விட்டாய் அல்



லவா? அந்த வேகத்தைத் தாங்காது கழன்றிருக்கும்'' - தொடர்ந்து பூடகமாகக் கூறினார் அப்பா.

''அவன் நல்ல பையன் நிகில். நாணயமானவன். கடுமையான உழைப்பாளி. அவனை விரட்டாதே.''

''அவனுடைய கிழிஞ்ச ட்ரஸ், அசிங்கமான பார்வை, இதையெல்லாம் பார்த்தாலே எனக்குப் பிடிக்கவில்லை. அவன் சுத்தமாக இல்லை. எனக்கு அருவருப்பா இருக்கு. பாக்டீரியா சுரங்கம்'' என்றான் நிகில் வெறுப்புடன்.

''நீதான் அவனுக்குச் சுத்தத்தைச் சொல்லித் தரணும். சுத்தம் சுகம் தரும் என்பதைக் கற்றுக் கொடுக்கணும். உங்கிட்டே இருக்கிற பழைய உடைகளை அவனுக்குக் கொடு. அவனும் சுத்தமாக இருப்பான்'' என்றார் அப்பா. இந்த அப்பா ஏன் இப்படி அந்தக் கந்தல் பையனை ஆதரிக்கிறாரோ புரியவில்லையே! என்னமோ நான்தான் அசுத்தமாக இருப்பது போல உபதேசம் வேறு செய்கிறார். நிகிலுக்கு சிந்தனை வேறுவிதமாக ஓடியது.

''போங்க டாடி! எனக்கு அவனைப் பார்க்கவே பிடிக்கவில்லை. இதில பேசணுமாம். என்னால முடியாது'' முகத்தைச் சுளித்தபடி கூறினான் நிகில்.

''நான் சொல்றதைச் சொல்லிட்டேன். நீ வசதியானவன். இப்படித்தான் வாழணும்னு தீர்மானிக்கலாம். ஆனால் அவனுக்கு வாழறதே ஒரு போராட்டம்தான். வேளைக்கு உணவு கிடைத்தால் போதும்னு இருக்கிறவங்க, அவங்கிட்ட நீதான் எடுத்துச் சொல்லிப் புரிய வைக்கணும். ஏனெனில் நீ படித்தவன். புரிகிறதா?'' என்று கூறிவிட்டு அகன்றார் அப்பா. ஆனாலும், நிகிலால் இந்த விவாதத்தை ஏற்க முடியவில்லை. அவன் போய், அந்த பட்டிக் காட்டானிடம் பேசறதாமே? நடக்கக் கூடிய காரியமா என்ன? தலையை அசைத்து மறுத்து விட்டு நடந்தான் நிகில்.

அன்றைக்கு நிகிலின் சிநேகிதர்கள் வீட்டிற்கு வந்தார்கள். அவனை ஆற்றங்கரைக்கு அழைத்தனர். நிகிலும், அவர்களுடன் சென்றான். அந்த ஊரில் காட்டாறுதான் ஓடியது. காட்டாற்றில் காவிரி போன்ற ஜீவநதிகளைப் போல வருடம் முழுவதும் நீர் இருக்காது. மலையில் இருந்து வரும் உபரி நீர் சேர்ந்து ஆறு போல ஓடும். மலை உச்சியில் மழை பெய்தால், திடீரென்று வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும். எனவே, அந்தக் காட்டாற்றில் சிறுவர்கள் குளிப்பதைத் தடை செய்திருந்தார்கள். ஆனால், நிகில்தான் 'சாகஸ வீரன்' ஆயிற்றே! நண்பர்களை வியக்க வைக்கும் ஆவலால் ஆற்றில் இறங்கி நீச்சலடித்தான். நண்பர்கள் வாய் பிளந்தனர். அதைப் பார்த்த நிகில் மேலும் நீந்தி, நடு ஆற்றை அடைந்தான்.

திடீரென கரையில் கூச்சல் கிளம்பியது. திடுக்கிட்ட நிகில் திரும்பினான். அங்கே, தொலைவில் மரங்கள், பாறைகளை அடித்துக்

''இன்னிக்கு பரிட்சை எப்படி எழுதினே?''


''நல்லா எழுதியிருக்கேம்மா. முதல் அஞ்சு கேள்வியும்... கடைசிப் பத்து கேள்வியும் தவிர!''

''குட்! மொத்தம் எத்தனை கேள்வி கேட்டவங்க பரிட்சையிலே?''

''பதினைஞ்சு கேள்விம்மா!''

- ஐயர்ஜி





கொண்டு காட்டாற்றில் வெள்ளம் வந்து கொண்டிருந்தது. நிகில் பயத்தில் உறைந்து போனான். ஆனால் அவன் பயப்படுகிறான் என்று வெள்ளம் நின்று விடுமா என்ன? கரையில் நின்ற நண்பர்கள் கத்த கத்த, நிகிலை வெள்ளம் அடித்துக் கொண்டு சென்றது.

முதல் அரை மணி நேரம் செய்வதறியாமல் நிகில் திகைத்து விட்டான். அதற்குள், வெள்ளம் அவனை ஊரை விட்டு வெகு தொலைவிற்கு உருட்டிக் கொண்டு சென்றது. அவன் மனத்தில் உறுதியுடன், தளராமல் போராடி ஒரு மரக் கொம்பைப் பிடித்துக் கொண்டு காட்டில் கரை ஏறினான். சுற்றியிருந்த மரம், செடிகள் அவனைப் பயப்படுத்தின. கடவுளே இப்போது என்ன செய்வது? என்று திகைத்து நின்றான்.

உண்மையில் அவன் மூழ்கி இறந்திருக்க வேண்டும். நல்லவேளையாகப் பிழைத்து விட்டான். காட்டாற்றில் நீச்சலடித்த தனது முட்டாள்தனத்தை எண்ணி நொந்து கொண்டு ஒருவழியாக சமாளித்து நடக்கத் தொடங்கினான். ஏற்கெனவே மேல் சட்டை இல்லை. மீதமிருந்த கால் சட்டையையும் காட்டுச் செடிகள் கிழித்தன. சேறும், சகதியுமான வழி வேறு அவனை மேலும் அலங்கோலப்படுத்தியது. இந்த இக்கட்டில் இருந்து அவன் தப்பியாக வேண்டும். கந்தசஷ்டி கவசம் சொல்லியபடி நடக்க ஆரம்பித்தான்.

இருட்ட ஆரம்பித்த வேளையில், தூரத்தில் தெரிந்த ஒளிப் புள்ளிகள் அவனுக்கு நம்பிக்கை அளித்தன. அவை கட்டாயம், மின் விளக்குகளாகத்தான் இருக்கும். அவ்வாறெனில், அருகில் ஊர் ஏதேனும் இருக்க வேண்டும். அவன் விரைவாக நடக்க எண்ணினான். ஆனால், பசியினாலும், பாறைகளில் அடிபட்ட வலியினாலும் நடக்க முடியவில்லை. திணறியபடி பாதையைப் பார்த்தான்.

அங்கே, சாலையில் ஒரு கார் வருவது தெரிந்தது. நிகிலுக்கு உற்சாகம் வந்தது. கையைக் குறுக்கே நீட்டி நிறுத்தினான். கார் நின்றது. அவர்களுடன் பேசத் தயாரானான். ஆனால் அதற்குள்...

''ஏண்டா பிச்சைக்காரப் பயலே, நாட்டுப்புறமே! காரை நிறுத்தினே? இடியட்! இதுபோல காரை நிறுத்தினா உதைதான் வாங்குவே. டிரைவர் காரை எடுங்க.'' காருக்குள் இருந்த சிறுவன்

காட்டுக் கத்தலாகக் கத்தினான். கார் கிளம்பியது.

நிகிலுக்கு அழுகையே வந்து விட்டது. அவன் பிச்சைக்காரனாமே? குனிந்து உடைகளை ஆராய்ந்தான். உண்மைதான். மோசமாகவே இருந்தான். அந்தக் 'கார் பையன்' திட்டியது தான் அவனை வருத்தப்படுத்தியது. ஆனால், திட்டிய வார்த்தைகள் மட்டும் நிகிலுக்கே உரியன. எத்தனை முறை இதே வசைமொழிகளால் இருளனைத் திட்டியிருக்கிறான்? அவனுக்கு ஒன்று மட்டும் புரிந்தது. அவனுடைய அந்தத் தவறுக்காகத்தான் கடவுள் தண்டனை கொடுத்திருக்கிறார்.

மனத்தில் அடிவாங்கிய நிகில், தளர்ந்து விட்டான். மேலும் நடக்க முடியாமல் தடுமாறினான். தலைசுற்றியது. ஊரை அடையும் முன்பே மயங்கி நடு ரோட்டில் விழுந்தான்.

சூடான தேநீர் அவன் உதடுகளில் பட்டு உணர்வூட்டியது. பால் கலவாத அந்தத் தேநீரே அவனுக்கு அமிர்தமாக இருந்தது. கண் திறந்தான். அது ஒரு குடிசை.

'ஏன் ராசா எப்படி இருக்கு?' கேட்ட பாட்டி கூட 'டர்ட்டி'தான். ஆனால் அவளை இப்போது நிகில் அசிங்கமாக நினைக்கவில்லை. அவன்தான் அன்பின் தூய்மையைப் புரிந்து கொண்டு விட்டானே? இருளன் கூட அன்பானவன் தான். அவன் பரீட்சைக்குப் படிக்கும் பொழுது கண்விழித்து தேநீர் தயாரித்துத் தருவான். இன்னும் எவ்வளவோ...!

யாரோ ஒருவர் அவனைக் கொண்டு, அவனுடைய வீட்டில் சேர்த்தார். அம்மா நிகிலைக் கட்டிக் கொண்டு அழுதாள்.

''இனி ஒருபோதும் இதுபோன்ற தவறுகளைச் செய்ய மாட்டேம்மா'' நிகில் அழுதான். அருகில் வந்த அவன் தந்தை கிண்டலாகக் கேட்டார்.

''நிகில், கடைசியில் ஏதோ ஓர் பாக்டீரியா கரங்கம்தான் உன்னைக் காப்பாற்றியது. அப்படித்தானே?''

''இல்லை டாடி. இனி அப்படியெல்லாம் சொல்ல மாட்டேன். உண்மையில் டர்ட்டி நான்தான். அழுக்கான மனது எனக்குத்தான். அவர்கள் உடை அழுக்காக இருந்தாலும் தூய்மையான இதயம் உடையவர்கள். அன்பு தூய்மையானது தானேப்பா? இருளனிடம் மன்னிப்பு கேட்கப் போகிறேன். நீங்கள் சொல்லியபடி, சுத்தம் பற்றி அவர்களுக்குக் கற்றுக் கொடுப்பேன். வெறுக்க மாட்டேன்'' உறுதியாகக் கூறினான் நிகில்.

நிகில் கூறியதை ஒளிந்திருந்து கேட்ட இருளன், மகிழ்ச்சியுடன் ஓடினான், மழை பெய்து உண்டாகியிருந்த சகதியை மிதித்தபடி.

''இருளா, அப்படி மிதிக்கக்கூடாது. காலில் சேற்றுப் புண் வரும்'' என்று கத்தியபடி அவன் பின்னேயே நிகிலும் ஓடினான் - சகதியைத் தாண்டியபடிதான்!

"பாப்பா... உங்க ஸ்கூல் என்னிக்குத் திறக்கறாங்க?"

"சாவி கிடைக்கிற அன்னிக்கு மாமா!"

- ஐயர்ஜி





"கண் டாக்டருக்குக் கால் எடுத்து விட்டால் என்ன ஆவாரு?"

"கண்டக்டர் ஆவாரு!"

- பி. கோவிந்தசாமி

நடத்து உன் ஊர்வலத்தை!



பிள்ளையார் பொம்மைகளின் ஊர்வலம் தொடங்கும் நேரம் வந்தது. அனைவரும், அவரவர் வீட்டில் பூசை செய்த பிள்ளையார் பொம்மைகளைத் தலையில் சுமந்தவாறு ஊர்வலத்தில் பங்கேற்க, வந்து கூடத் தொடங்கினர்.

தனிப்பட்டவர்கள் தவிர, தெருவாரியாகவும் இதரச் சங்கங்கள் சார்பிலும் போட்டி போட்டுக் கொண்டு, பெரிய பெரிய பொம்மைகளைச் செய்திருந்தனர். அவற்றை மாட்டு வண்டிகளிலும் தள்ளு வண்டிகளிலும் வைத்து அலங்கரித்திருந்தனர். அந்த வண்டிகள் எல்லாம், ஊர்வலத்தின் முன் பகுதியில் வரிசைப்படுத்தி நிறுத்தப்பட்டிருந்தன.

அப்போது அங்கு வந்தார் ஒருவர். அவர்தான் அந்த ஊர்வலத்துக்குத் தலைமை தாங்கி நடத்திச் செல்ல இருந்தார்.

சற்றுத் தூரத்தில் சிலர் கூடி நின்று, ஏதோ வாக்குவாதத்தில் ஈடுபட்டிருந்தது தெரிந்து அவர் அங்கு விரைந்தார்.

கூட்டத்தின் நடுவில் ஒரு சிறுவன் நின்று கொண்டிருந்தான். கூட்டத்தினர் அவனை வாயில் வந்தபடி திட்டிக் கொண்டிருந்தனர். அதற்குள் ஒருவர், ''போடா இங்கிருந்து...'' என்று கழுத்தில் கை வைத்து எட்டித் தள்ளினார்.

நல்லவேளை. அவன் கீழே விழவில்லை. அந்தப் பெரியவர் அவனைத் தாங்கிப் பிடித்துக் கொண்டார்.

''என்ன நடந்தது இங்கு? ஏன் எல்லாரும் இவனை விரட்டித் தள்ளுகிறீர்கள்?'' என்று அவர் வினவினார்.

அவரைக் கண்டதும் அனைவரும் பயந்து ஒதுங்கி நின்று விட்டனர்.

ஜானகி மணாளன்

தனக்கு ஆதரவாகப் பேச ஒருவர் கிடைத்து விட்டார் என்றதும், அச் சிறுவன் உணர்ச்சிவசப்பட்டு, அழத் தொடங்கி விட்டான்.


''அழாதே தம்பி! நடந்தது என்ன...? சொல்...'' என்றவாறு, அப்

''ஏன்...'' என்றார் பெரியவர்.

சிறுவனிடம் உடனே பதில் இல்லை. அவன் தயங்கினான்.

''பயப்படாதே... சொல்... இவர்கள் என்ன சொன்னார்கள்...?'' பெரியவர் அவனை ஊக்கப்படுத்தினார்.

அச் சிறுவன் பயந்த பார்வையுடன் சுற்றி இருந்தவர்களைப் பார்த்தவாறு சொன்னான்.



பெரியவர் ஆதரவுடன் அவனை அணைத்துக் கொண்டார்.

அவன் அழுது கொண்டே சொன்னான். ''ஐயா! இது என் வீட்டில் நானே செய்து, பூசை செய்த பிள்ளையார். இதையும், இந்த ஊர்வலத்தில் கொண்டு வந்து, கடலில் போட வந்தேன். ஆனால் இவர்கள், 'இந்த ஊர்வலத்தில், எல்லாருடனும் நான் சேர்ந்து வரக் கூடாது' என்று தடுக்கிறார்கள்...''

''நான் தாழ்ந்த சாதிக்காரனாம்... ஹரிஜனமாம்... என் பொம்மையும் ஹரிஜனப் பிள்ளையாராம்... அதனால், இவர்கள் நடத்தும் இந்த ஊர்வலத்தில் இதை எடுத்து வரும் உரிமை எனக்குக் கிடையாதாம்...''

சிறுவன் விக்கி விக்கி அழத் தொடங்கி விட்டான்.


பெரியவர் அவனை ஆறுதலாக அணைத்துக் கொண்டார். ''அப்படியா

சொன்னார்கள்? நீ அழாதே...'' என்றதும், மெல்ல மெல்ல அவன் அழுகை ஓய்ந்தது.

''மனிதனிடம் தான், 'அந்தச் சாதி, இந்தச் சாதி' என்று பாகுபாடு பார்க்கிறீர்கள் என்றால், கடவுளிடம் கூடவா 'ஹரிஜனப் பிள்ளையார், வைசிகப் பிள்ளையார்' என்று பாகுபாடு பார்ப்பது? இந்த அநியாயத்தைக் கேட்பார் இல்லையா? இதை நான் அனுமதிக்க மாட்டேன். பிள்ளையார் பொம்மையைத் தன் வீட்டில் வைத்துப் பூசை செய்வதற்கு உரிமை உடைய எல்லோருக்கும் அதை ஊர்வலத்தில் சுமந்து வர உரிமை உண்டு. இவனும் மனிதன்தானே... ஏன் இப்படியெல்லாம் நடந்து கொள்கிறீர்கள்...?'' என்று கூட்டத்தினரைக் கடிந்து கொண்டார் அந்தப் பெரியவர். கோபப் பார்வையால் அவர்களைச் சுட்டெறித்தார்.

''நாங்கள் செய்தது தவறுதான். எங்களை மன்னித்து விடுங்கள்...'' என்றனர் கூட்டத்தினர்.

பெரியவர் அச் சிறுவனைப் பார்த்துச் சொன்னார் : ''தம்பி! இதற்காக ஏன் நீ அழுகிறாய்? இந்தப் பிள்ளையார் பொம்மையுடன் நீ என் பின்னாலேயே வா...''



அவர் ஊர்வலத்தின் முன் பகுதிக்குப் போனார். சிறுவனும் பின்தொடர்ந்தான்.


சுற்றி நின்றவர்கள், 'அப் பெரியவர் என்ன செய்யப் போகிறார்' என்பதை திகைப்புடன் பார்த்துக் கொண்டிருந்தனர்.

பெரியவர் ஊர்வலத்தின் முதல் பிள்ளையார் வண்டி அருகில் போய் நின்றார். அந்தச் சிறுவனைப் பார்த்துச் சொன்னார் : ''தம்பி! அவர்கள் உன்னை இந்த ஊர்வலத்தில் வரக் கூடாது' என்றுதானே சொன்னார்கள்... நான் உன்னை என்ன செய்கிறேன், பார்...'' என்றவாறு, அவனைத் தன் கையாலேயே தூக்கி, அந்த முதல் வண்டியின் மேல் ஏற்றி, உட்கார வைத்தார்.

''நீ இங்கேயே உட்கார். உன் பிள்ளையாரையும் பக்கத்திலேயே வைத்துக் கொள். உன்னைச் சரிசமமாக நடத்தாதவர்களை விட, இப்போது நீ உயர்ந்து விட்டாய். நடத்து ஊர்வலத்தை! இந்த ஊர்வலத்தையே இப் போது நீதான் தலைமையேற்று நடத்திச் செல்கிறாய்... மகிழ்ச்சிதானே?'' என்றார் பெரியவர்.

அச் சிறுவன் வாயெல்லாம் பல்லாகப் பூரித்தான்.

சிறுவனுக்கு இழைக்கப்பட்ட அநீதியைக் கண்டு பொங்கியெழுந்து, தகுந்த விதத்தில் பரிகாரம் கண்டு மகிழ்ந்த அந்தப் பெரியவர் யார் தெரியுமா? அவர்தான் இந்திய மக்களால் 'லோகமான்யர்' என்று பெருமையுடன் போற்றப்படும் பாரத விடுதலைப் போராட்ட வீரர் பாலகங்காதர திலகர்!



ஜி. எம். டி. என்பது என்ன?

ஜி. எம். டி. என்பதன் முழு விளக்கம் 'Greenwich Mean Time' என்பதாகும். இதைத் தமிழில் 'கிரீன்விச் நேரம்' என்று கூறுகிறோம். கிரீன்விச் என்பது லண்டனுக்கு அருகிலுள்ள ஒரு இடத்தின் பெயர்.

பல்வேறு நாடுகளில் இடத்திற்கு இடம் நேரம் (மணி) வேறுபட்டதால் பல குழப்பங்கள் ஏற்பட்டன. இதைத் தவிர்க்க ஓர் ஏற்பாட்டை உருவாக்க பல நாட்டு அறிஞர் பெருமக்களும் முயன்றனர். பல கருத்துகள் பரிசீலனைக்கு வந்தன. பூமியைக் கற்பனைக் கோடுகளைக் கொண்டு பிரித்து, அதற்கு எண் கொடுத்தால் எளிதாக இருக்கும் என்ற கருத்து வைக்கப்பட்டு பரிசீலிக்கப்பட்டது. இது நல்ல கருத்து என்று பல அறிஞர்களாலும் ஏற்கப்பட்டது. இந்தக் கோடுகள் தான் தீர்க்கரேகைகள் என அழைக்கப்படுகிறது.

1884 – ஆம் ஆண்டில் வாஷிங்டனில் சர்வதேச வானவியல் அறிஞர்கள் மாநாடு கூடியது. இந்தக் கற்பனைக் கோடு கருத்தை இந்த மாநாடு விரிவாகப் பரிசீலித்து, இதை ஏற்க முடிவு செய்தது. இதை எங்கிருந்து தொடங்குவது என்பது பற்றி அறிஞர்கள் ஆராய்ந்தனர். லண்டனுக்கு அருகில் உள்ள கிரீன்விச் என்னும் இடத்தைத் துவக்கப்புள்ளியாக – பிரதம தீர்க்க ரேகையாகப் (Prime Meridian) கொள்வதென அனைவரும் தீர்மானம் செய்தனர். உலகத்தை 24 கால மண்டலங்களாகப் பிரிக்கவும் ஒப்புக் கொள்ளப்பட்டது. இதன்படி ஒரு கால மண்டலத்திலிருந்து மற்றொரு கால மண்டலத்திற்குச் செல்லும் போது ஒரு மணி நேரம் கூடும் அல்லது குறையும்.

இதன் விளைவுகள் என்ன தெரியுமா? ஒவ்வொரு மண்டலமும் 15 டிகிரி வளைவு தூரம் உடையது. அதாவது ஒரு டிகிரிக்கு 4 நிமிடம். கிரீன்விச்சில் 0 (பூஜ்யம்) டிகிரி ஆரம்பிக்கிறது. ஆக ஒரு நாடு எந்த தீர்க்கரேகையில் இருக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டால் அங்கு நேரம் என்ன என்பதைக் கணக்கிட்டு விடலாம். ஆனால் இது பெரிய நாடுகளில் ரயில், விமான, வானொலி நேரங்களில் குழப்பத்தை உண்டு பண்ணும் என்பதால் 'பொது நேரம்' (Standard Time) ஒன்றை ஒவ்வொரு நாடும் உருவாக்கிக் கொண்டது.

எடுத்துக்காட்டாக இந்தியா $82\frac{1}{2}$ டிகிரி தீர்க்க ரேகைக்கு மத்தியில் ஓடுவதால் அந்த நேரத்தைப் பொது நேரமாக இந்தியா அறிவித்துள்ளது. ஜி. எம். டி. நேரத்திற்கும், இந்திய நேரத்திற்கும் உள்ள வேறுபாடு $5\frac{1}{2}$ மணியாகும். கிரீன்விச்சில் பகல் 12 மணி ஆகும் போது இந்தியாவில் மாலை $5\frac{1}{2}$ மணி ஆகியிருக்கும்.

கிரீன்விச்சை நேர் மத்தியில் கொண்ட பூஜ்ய மண்டலத்தில் தொடங்கி 12 வது மண்டலத்தை நேர் மத்தியில் பிரிப்பது 180 வது தீர்க்கரேகை. இந்த 180 வது தீர்க்கரேகை ஓடும் இடத்தை 'சர்வதேச நாள் எல்லை' அல்லது 'சர்வதேச நாள் கோடு' (International Date Line) என்கிறார்கள். இதை ஒருவர் கடக்கும் திசையைப் பொறுத்து அவர் ஒரு நாளை இழப்பார் அல்லது கூடுதலாகப் பெறுவார். இதற்கு இடப்புறம் ஒரு கிழமையாகவும், தேதியாகவும் வலப்புறம் ஒரு கிழமையாகவும் தேதியாகவும் இருக்கும். இந்தக் கோடு பெரும்பாலும் பசிபிக் பெருங்கடல் வழியாகச் செல்கிறது. கிழக்கில் இருந்து மேலை நாட்டிற்குச் செல்லும் ஒரு கப்பலோ, விமானமோ இக்கோட்டைக் கடந்தால் ஒரு நாள் குறைந்து விடும். அதற்கு மாறாக மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்தால் ஒரு நாள் கூடி விடும்.

– கிருஷ்ணா முத்துராமலிங்கம்.





போற்றத் தகுந்த புண்ணியவான்!

அகிம்சா மூர்த்தி யாருங்க?
அண்ணல் காந்தி தானுங்க!
மகாத்மா என்பதும் அவர்தாங்க;
மனித தெய்வமும் அவர்தாங்க!

அடிமைத் தளையை அறுத்தெறிய
அகிம்சை ஒன்றே வழியென்றார்
விடுதலை கிடைக்கும்; சாத்வீகம்
வெல்லும் ஒருநாள் நிஜமென்றார்!

இத்தரை போற்ற வாழ்ந்த மகான்;
எளிமைக் கோலம் கொண்ட மகான்!
புத்தன், ஏசு, காந்தியென
போற்றத் தகுந்த புண்ணியவான்!

- எ. எஸ். உமாமகேஸ்வரி.



அபிராமியின் அட்டிகை

4. பெற்றோர் எங்கே?

அபிராமி தன்னைப் பற்றியும், தன் அம்மா அப்பாவைப் பற்றியும், சுற்றுலாவிற்குத் தன்னை அவர்கள் ஆசையுடன் அனுப்பி வைத்ததையும் சொல்லி நிறுத்தினாள்.

கதை கேட்டுக் கொண்டிருந்த குயிலி, ''அபிராமி, உன் அப்பா, அம்மா எவ்வளவு நல்லவங்க! நீயும் பெரிய பணக்காரப் பெண்ணு. எவ்வளவு வசதியா நீ வாழ்ந்திருக்கணும்! பாவம்! அனாதையா இப்படி எங்க கூட அன்பு இல்லத்துக்கு வந்து சேர்ந்திருக்கியே பாவம்!'' என்றாள் உணர்ச்சி பொங்க.

''அதனால் என்ன, 'சாமி கைவிட்டுடுமா?.... அப்பா, அம்மா இல்லைன்னா என்ன? நாம்ப எல்லாரும் இல்லையா? அந்தக் குறையே தோன்றாது அபிராமியைப் பார்த்துப்போம்' என்றார் சக்ரவர்த்தி.

''சரி சரி, நல்ல ஐடியா!'' என்றார்கள் குழந்தைகள் மகிழ்ச்சியுடன்.

'ஆமா, சுற்றுலா போனே... அப்புறம் என்னாவாச்சு சொல்லு?' என்று இழுத்தாள் குயிலி.

''சொல்றேன்... ஒருவாரம் சுற்றுலா. புராதனக் கோயில்கள், புண்ணிய நதிகள், அருங்காட்சியகங்கள், பண்ணைகள், விளையாட்டு மைதானங்கள்னு பல ஊருக்குப் போயி எல்லா இடங்களையும் பார்த்தோம்.

நிறைய பொம்மைகள், வளையல்கள் கைப் பைகள், ரெடிமேட் ஆடைகள், தரை விரிப்புன்னு

கூத்தபிரான்

விதம் விதமா எல்லாரும் வாங்கினாங்க. நான் மட்டும் எங்கம்மா, அப்பா எனக்கு ஆசையா கொடுத்த பணத்திலே டீச்சரின் உதவியோட அம்மாவுக்கு ஒரு நல்ல புடைவை, ஜாக்கெட், அப்பாவுக்கு ஒரு ஷர்ட் துணின்னு வாங்கி அழகா பேக் பண்ணி, பேர் எழுதி எடுத்துக்கிட்டு வந்தேன். ஏன் தெரியுமா? சுற்றுலா முடிஞ்சு ஊர் திரும்பற அன்னிக்கி அம்மா, அப்பாவின் வெட்டிங் டே. பரிசுகளை ஸஸ்பென்ஸா வெச்சிருந்து, கொடுத்து சந்தோஷப்படுத்தி, ஆசீர்வாதம் வாங்க துடிச்சுக்கிட்டு வந்தேன்'' என்றாள் அபிராமி.

''பள்ளி காம்பவுண்டுக்குள் பஸ் நுழைந்தது. பெற்றோர்கள், உறவினர்கள் கூட்டம். முண்டியடித்து ஒவ்வொருத்தராக, டாடி, மம்மி, அங்கிள், கிராண்ட்பா என்று செல்லமாகக் கூப்பிட்டுக் கொண்டு வேகமாக இறங்கினார்கள். நானும் ரொம்ப ஆசையோட, வேகமாக இறங்கினேன். சுற்றிச் சுற்றிப் பார்த்தேன். என்னோட அம்மா, அப்பாவைக் காணும்! என்னடாயிது! எத்தனை பிரியமா, சுற்றுலாவுக்குப் போக வழியனுப்பி வெச்சாங்க? திரும்பி வரும் போது, வரவேற்க வரலையேன்னு நினைச்ச போது மனசுக்கு ரொம்ப வருத்தமாப் போச்சு.''

''பெட்டி, பை, கூடை எல்லாத்தையும் நானே தூக்க முடியாம தூக்கிக்கிட்டு, வீட்டை நோக்கி நடந்தேன். அப்பாவுக்கு என்னாச்சு, அம்மாவுக்கு என்னாச்சுன்னு நினைச்சபடியே சென்றேன். தெருக் கோடிக்கு வந்தேன். அங்கிருந்தாவது என் அப்பா, அம்மா, ''வா அபிம்மா''ன்னு என்னை வரவேற்க மாட்டாங்களான்னு என் மனசு கிடந்து தவிச்சுது. பாதித் தெரு தாண்டி இருப்பேன். என் வீட்டைப் பார்த்தேன். தீப் புடிச்சு எரிஞ்சு போன வீடு மாதிரி கரிப் புகை படிஞ்சு, இடிஞ்சு காணப்பட்டது! வாசல்லே போலீஸ் ஜீப். கார்கள். ஜனங்கள் கூட்டமா கூடியிருந்தாங்க.''

''எனக்கு ஒண்ணுமே புரியல்லே. கை, கால்கள் எல்லாம் நடுங்க ஆரம்பிச்சுது. மெதுவா என் வீட்டுக் கிட்டே வந்தேன். பக்கத்து வீட்டு அங்கிள், எதிர் வீட்டுப் பெரிய அங்கிள், ஆண்ட்டி, எல்லாரும் ஓடிவந்து என்னைக் கட்டிக் கொண்டு, 'ஓ'ன்னு அழ ஆரம்பிச்சாங்க.

''என்னாச்சு? வீட்டு வாசல்லே போலீஸ். வீட்டின் கேட்டு பூட்டியிருக்கு! எல்லாம் எரிஞ்சு போயிருக்கு. என் டாடி, மம்மி எங்கே?

''டாடி! மம்மி!'ன்னு சத்தமா கூப்பிட்டேன். இன்னும் இரண்டு, மூன்று பேர்'', ''கண்ணு! இப்போதான் வர்றியாம்மா...? உனக்கு இப்படியாயிடிச்சே'ன்னு என்னைக் கட்டிக் கொண்டு அழுதாங்க.

'என்னாச்சு'... எல்லாரும் ஏன் அழறீங்க. என் டாடி, மம்மி எங்கே? ஏன் போலீஸ் வந்திருக்கு? இங்கே என்ன நடந்திருக்குன்னு சொல்லுங்கன்னு அழுதேன். துடித்தேன்.

அப்போதான் என் டாடியோட நெருங்கிய ஆபீஸ் பிரண்டு தீபன் என்கிறவர்', போலீஸ் காரங்களோட ஜீப்பிலே வந்து இறங்கினார். அவரைப் பார்த்ததும் 'அங்கிள், அங்கிள்னு ஓடிப் போய்க் கட்டிக்கிட்டேன்.



''அம்மா அபிராமி, மனதை தைரியப் படுத்திக்க. தீவிரவாதிகள் உங்க வீட்டைக் கொள்ளை அடிச்சு, உன் அப்பா, அம்மாவைக் கொன்னுட்டு, வீட்டுக்கும் நெருப்பு வெச்சுட்டுப் போயிட்டாங்க'ன்னு அவர் சொன்னார்.

''எனக்கு இடி விழுந்த மாதிரி இருந்தது. ''டாடி, மம்மி''ன்னு கத்திண்டு கீழே விழுந்து புரண்டேன். எல்லாருமா சேர்ந்து என்னைத் தூக்கி உட்கார வைத்து, ஆறுதலும் சமாதானமும் சொல்லிய வண்ணமாக இருந்தார்கள். அத்தனை எளிதில் சமாதானம் ஆக முடியுமா?



''டாடி, மம்மி''ன்னு எவ்வளவு நேரம் அழுது புரண்டேன்னு எனக்கே தெரியாது.

''நீடன் அங்கிள் என்னை போலீஸ் உயர் அதிகாரிகளுக்கு, இவதான் அபிராமி... சுந்தரத்தோட ஒரே பெண்ணுன்னு அறிமுகப்படுத்தினார். ''அப்படியா! மனதைத் தேற்றிக் கொள்ளும்மா''ன்னு என்னை அணைத்து ஒரு போலீஸ் அதிகாரி என் கண்ணீரைத் துடைத்தார்.

போலீஸ் அதிகாரியிடம் நீடன், ''ஸார்! அபிராமிக்கு நான் கார்டியனா இருந்து பார்த்துக்கிறேன். அதுக்கு நீங்க அனுமதி கொடுக்கணும்''ன்னு வேண்டிக்கிட்டார். அதுக்கென்ன.... 'நீங்க ஒரு லெட்டர் கொடுத்தாப் போதும்'னு சொன்னார் போலீஸ் அதிகாரி.

நீடன் அங்கிள், என்னை ''வாம்மா போகலாம்னு'' அழைத்தார்.

''எங்கேன்னு?'' அழுதுக்கிட்டே கேட்டேன்.

''என் வீட்டுக்குத்தான். நான் உன்னைப் பார்த்துக்கிறேன். கவலைப்படாதேன்னு சொல்லி, என் பெட்டி, படுக்கை, கூடையெல்லாம் எடுத்துக் கிட்டார்.

''அங்கிள் என் வீட்டுக்குள்ளே நான் போக முடியாதா?'ன்னு கேட்டேன்.

''அந்த வீட்டிலே என்னம்மா இனிமே இருக்கு? எல்லாந்தான் கருகிப் போச்சே! என் வீட்டுக்குப் போகலாம். வாம்மான்னு அழைத்தார் அவர்.

''நான் பிறந்து வளர்ந்த வீட்டைத் திரும்பித் திரும்பிப் பார்த்தபடியே தீபன் அங்கிளின் வீட்டுக்குப் புறப்பட்டேன். எத்தனை சந்தோஷமா பள்ளிச் சுற்றுலாவுக்குப் போனேன்!

''திரும்பி வர்றதுக்குள்ளே எத்தனை பெரிய புகம்பம் ஏற்பட்டுப் போச்சு!

இந்த உலகத்திலே நான் மட்டும் தனிமைப் படுத்தப்பட்டு ஒண்டியா எங்கேயோ போய்க்கிட்டு இருக்கிற மாதிரி மனசிலே ஒரு பயம் ஏற்பட்டது.

அழுதபடியே வந்த என்னைப் பார்த்ததும் தீபன் அங்கிளின் மனைவி, 'வாம்மா... வா, முதல்லே உள்ளே போயி குளிச்சு வேற டிரஸ் போட்டுக்கிட்டு வா. அப்புறம் சாப்பிடலாம். என்ன செய்யறது! இந்தச் சின்ன வயசிலே இப்படி வருத்தப்படும்படி ஆகிவிட்டதே! எது வந்தாலும் தாங்கிக்கிற மன உறுதியைக் கொடுன்னு சாமியை வேண்டிக்கோ. துணிவை மனசுலே வளர்த்துக்கோ. உறுதியாக இரு. நாங்களும் இருக்கோம்னு சொல்லி அழைச்சுக்கிட்டுப் போனாங்க.

''எப்படிக் குளிச்சேன். எப்படி வேற டிரஸ் மாத்திக்கிட்டேன்னு எதுவும் எனக்கு தெரியாது. சாப்பிட அழைத்தார்கள். சாப்பிடப் பிடிக்குமா? தீபனின் இரண்டு குழந்தைகளும், 'வாங்க அக்கா' கொஞ்சமாவது சாப்பிடுங்கன்னு சொல்லி கையைப் பிடித்து இழுத்துக் கிட்டுப் போனாங்க.''

அபிராமியின் சோகம் எல்லோரையுமே பாதித்து விட்டது போலும், எல்லோரும் மௌனமாக இருந்தார்கள். மீண்டும் அபிராமியே தொடர்ந்தாள் :

''புது இடம். பழைய இடத்தின் நினைப்பை மறந்துட முடியுமா? என் மனசு என்ன பாடு பட்டது தெரியுமா? தீபன், அவர் மனைவி, குழந்தைகள் எல்லோரும் எனக்கு மாறி மாறிக் தைரியம் கூறினார்கள். என் துயரத்தை மறக்கத் தங்களால் இயன்றது அனைத்தையும் செய்து புது நம்பிக்கை ஊட்டினார்கள்.''

அபிராமி தன்னைப் பற்றி இன்னும் நிறையக் கூற மாட்டாளா என்ற ஆவலுடன் எல்லோரும்காத்திருந்தார்கள்.

''அது சரி, தீபன் வீட்டிலே அத்தனை அன்பும் பரிவும் அவர்கள் காட்டியும் கூட நீ ஏன் அவர்களைப் பிரிந்து இங்கே வந்து சேர்ந்தே? எப்படி!'' என்று கேட்டாள் குயிலி.

''சொல்கிறேன்!'' என்ற அபிராமி தன் கதையைத் தொடர்ந்தாள்.

(தொடரும்)

'கருகிப் போச்சா! கவலை வேண்டாம்!'

வங்கி மேற்பார்வையாளரிடம் ஒருவர் வந்தார்.

''ஐயா, தீ விபத்தில் என் பணம் கருகிப் போச்சு. நீங்கதான் உதவி செய்யணும்'' என்று புலம்பி கருகிப் போயிருந்த கற்றை ரூபாய் நோட்டு களையும் நீட்டினார்.

வங்கி மேலாளர் தொட்டால் உதிர்ந்து போவது போல இருந்த அவற்றை அதி ஜாக்கிரதையாக வாங்கினார். அந்த அளவுக்கு அவற்றை நெருப்பு சேதப்படுத்தியிருந்தது!

ஒன்றா, இரண்டா! நூறு நூறு ரூபாய்கள் என்ன கருகிவிட்டிருந் தன!

'நோட்டின் எண்கள் தெரிந்தாலல்லவா பதில் நோட்டுகளைக் கொடுக்க முடியும்?'

சாதாரணமாக மற்ற அதிகாரிகள் மறுத்து விட்ட சூழ்நிலையில் இந்த மேலாளர் மட்டும், வித்தியாசமாக நடந்து கொண்டார்.




''கொடுத்து விட்டுப் போங்கள். பிறகு வாருங்கள், சொல்கிறேன்'' என்று மனம் நொந்து போயிருந்த வாடிக்கையாளருக்கு நம்பிக்கை அளித்தார்.

வங்கி மேலாளர் கருகிய நோட்டுகளின் எண்களை விஞ்ஞான ரீதியாகக் கண்டு பிடிக்கத் தீர்மானித்தார். சில நாட்கள் தீவிரமாக இருந்து சிரமப்பட்டு, அத்தனை எண்களையும் கண்டு பிடித்தார்.

இந்தச் சம்பவம் 1909 - ல் பர்மாவில் நடந்தது. அந்த மேலாளர் யார் தெரியுமா?

சர். சி.வி. ராமனேதான்!

– ஏ. ஹரிகிருஷ்ணன்



கோபி எப்ப வருவான்?

கண்ணனும் கோபியும் சகோதரர்கள். கண்ணன் மூத்தவன். கோபி இளையவன். இருவரும் எப்போதும் பாம்பும் கீரியும் போல அடித்துக் கொள்வார்கள்.

அம்மா எவ்வளவு தான் தடுத்தாலும் அவர்களது கச்சேரி தினந்தோறும் ஓயாது நடக்கும். இருவரும் ஒரே பள்ளியில் படிப்பதால் பள்ளியிலும் இவர்களது சண்டை தொடரும்.

அப்பா இல்லாத பிள்ளைகள், ஒழுங்காக வளர வேண்டுமே என்று அம்மா மிகவும் கவலைப்பட்டாள்.

கோடை விடுமுறை விட்டார்கள்.

''அம்மா! நாளையிலிருந்து எனக்குக் கோடை விடுமுறை. இனிமே யாரு கூட நான் விளையாடுறது?'' என்றான் கண்ணன் சோகமாக.

''ஏன்! உன் தம்பி கோபியோட விளையாடேன்?'' என்றாள் அம்மா.

இந்த விடுமுறையிலாவது இருவரும் சண்டை போட்டுக் கொள்ளாமல் விளையாடட்டுமே என்ற ஆசை அம்மாவுக்கு.

ஆனால், அம்மா நினைத்ததற்கு நேர் மாறாக நடந்தது. முன்பை விட இருவரும் பலமாக மோதிக் கொண்டது தான் மிச்சம்.

மறுநாள் அவர்களது மாமா தஞ்சாவூரிலிருந்து வந்தார். அம்மா இருவரைப் பற்றியும் கூறி வருந்தினாள்.

''இருவரையும் சிறிது நாட்கள் பிரித்து வைத்தால் திருந்த வாய்ப்பு உண்டு'' என்றார் மாமா.

அதன்படி, அடுத்த நாள் அம்மா கோபியை மாமாவுடன் தஞ்சாவூருக்கு அனுப்பி வைத்தாள்.

கண்ணனுக்கு ஓரிரு நாட்களில் தனிமை போரடிக்கத் தொடங்கி விட்டது. எதுவுமே பிடிக்கவில்லை. சாப்பிட மறுத்தான். விளையாடப் பிடிக்கவில்லை. 'கோபி எப்போது வருவான்?' என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

அம்மாவிடம் சென்று, ''கோபி எப்பம்மா வருவான்?'' எனக்குத் தனியாகவே இருக்கப் பிடிக்கவில்லை!'' என்றான்.

அம்மா அவனை மிருகக் காட்சி சாலைக்கும், மியூசியத்திற்கும் அழைத்துச் சென்றாள். சினிமாவுக்கும் போனார்கள். இருந்தாலும், அவன் எதிலும் பிடிப்பு இல்லாமல் தண்டக் கடனே என்று பார்த்து விட்டு வந்தான்.

அன்று மதியம், தபால்காரர் ஒரு கடிதத்தைப் போட்டார். தபால் தன் பெயருக்கு வந்திருப்பதைக் கண்ட கண்ணன், அதைப் பிரித்துப் படிக்கலானான். கோபிதான் எழுதியிருந்தான்.

கடிதத்தில், தனக்கும் தனியாக இருக்கப் பிடிக்கவில்லையென்றும் மாமா பல கதைப் புத்தகங்களும் பொம்மை களும் வாங்கிக் கொடுத்தும், அண்ணனில்லாது போரடிப்பதாகவும் மிகவும் வருந்தி எழுதியிருந்தான். விரைவில் ஊர் திரும்புவதாகவும் கடிதம் முடிக்கப் பட்டிருந்தது.

கடிதத்தில் குறிப்பிட்டபடி கோபி இரண்டு நாட்கள் கழித்து ஊர் திரும்பினான். அண்ணனுடன் சேர்ந்து விளையாடினான்.

அம்மாவே அவர்களது ஒற்றுமையைக் கண்டு வியந்தாள்.

இப்போது கண்ணனும் கோபியும் சண்டை போடுவதே இல்லை.

– கி. சிவா.

ராஜுவுக்கு என்ன ஆச்சு?



அன்று ஞாயிற்றுக் கிழமை. மாலை நேரம்.

''ராஜு கடைக்குப் போய் புழுங்கல் அரிசி வாங்கி வாயேன். இட்லிக்கு ஊறப் போடணும். இந்தா பணமும் பையும்'' என்றாள் அம்மா.


''போம்மா என்னால் முடியாது. இன்னிக்கி பட்டம் விடற போட்டி. நான் எப்படி ஜெயிக்கிறதுன்னு கவலையா இருக்கேன். நூலு மாஞ்சா ஏத்தணும். எத்தனை வேலை இருக்கு? என்னால முடியாது'' என்று ராஜு தன் வேலையிலேயே மும்முரமாக இருந்தான். அதன் பிறகு பையனைக் கெஞ்சிப் பய னில்லை என்பதை உணர்ந்த அம்மா பையை எடுத்துக் கொண்டு நடந்தாள்.

மறுநாள் -

ராஜு தீப்பெட்டியில் 'வாக்கி டாக்கி' செய்து கொண்டிருந்தான். அம்மா அவசரம் அவசரமாக ஓடி வந்து, ''ராஜுக் கண்ணா, ரேஷன் கடையில் பாமாயில் போடுறாங்களாம். கொஞ்சம் போய் க்யூவில் நில்லு. இதோ நொடி யில் சமையல் வேலைகளை முடிச் சிட்டு நானே வந்து உன் இடத்தில் நின்று எண்ணெய் வாங்கறேன்'' என்று கெஞ்சி னாள்.

ராஜுவுக்கு வந்ததே கோபம்.

''உனக்கு வேற வேலையே இல் லையா அம்மா? எப்பப் பார்த்தாலும், அங்கே போய் அதை வாங்கி வா. இங்கே போய் இதை வாங்கி வா. பால் வாங்கி வா. மிஷினுக்குப் போய் மாவரை. இப்படிச் சொல்லிச் சொல் லியே வேலை வாங்குறதே உனக்குப் பொழுதாப் போச்சு. என்னால முடி யாது. நான் 'காமிக்ஸ்' வாங்க 'லைப்ரரி'க்குப் போகணும்'' என்று கூறியவன் தீப் பெட்டியை எடுத்துப் புத்தக அலமாரியில் வைத்து விட்டு, செருப்பை மாட்டிக் கொண்டு சென்று விட்டான்.



''பதிமூணு வயசுப் பையனுக்கு வரும் கோபத்தைப் பாரு'' என்று அலுத்துக் கொண்டாள் அம்மா.

தெருவில் நடந்து போய்க் கொண்டிருந்த ராஜு ஓர் இடத்தில் சட்டென்று நின்றான். வீதியின் ஓரத்தில் இருக்கும் பங்களா ஒன்றில் 'போகன்விலா' செடிகளை வெட்டி அந்த வீட்டுத் தோட்டக்காரன் காம்பவுண்டுக்கு வெளியே எறிந்து கொண்டிருந்தான்.

தோட்டக்காரன் வெட்டி எறிந்த செடியின் கிளைகளை எல்லாம் ஓர் ஏழைச் சிறுவன் - ராஜுவின் வயதுதான் இருக்கும் - சேகரித்துக் கொண் டிருந்தான். போகன்விலா முட்கள் அவ்வப்போது அந்தச் சிறுவனின் உள்ளங்கைகளைக் குத்தின. சிறுவன் அதைப் பொருட்படுத்தாது வெட்டிய செடிகளைச் சேகரிப்பதிலே கவனமாக இருந்தான்.

ராஜுவின் மனத்தில் கேள்வி எழுந்தது. அந்தப் பையன் ஏன் இப்படி முள் செடியின் கிளைகளை அடுக்கிக் கொண்டு இருக்கிறான்?

ராஜு அவனிடமே சென்று, ''ஏன் வெட்டிப் போட்ட செடிகளையெல்லாம் எடுத்து அடுக்கிக் கொண்டிருக்கிறே?'' என்று கேட்டான்.

''வீட்டுக்கு எடுத்துச் செல்லப் போகிறேன்'' என்றான் சிறுவன் நிதானமாக.

''வீட்டுக்கு எடுத்துக்கிட்டுப் போய் என்ன செய்யப் போறே?''

''இதைக் காய வைச்சு அடுப்பு எரிப்போம்.'

'கையில் முள் குத்தி ஒரே ரத்தமா இருக்கே! நீ செய்யறது உங்கம்மாவுக்குத் தெரியுமா? ஏன் இந்த வேலைக்கெல்லாம் உங்கம்மா உன்னை அனுப்பறாங்க?' - சந்தேகத்துடன் கேட்டான் ராஜு.

'அவங்க அனுப்பறதில்லே நானாகத்தான் வர்றேன்.'

பா. ஜெயக்குமார்

''பள்ளிக்குப் படிக்கப் போறதில்லையா?''

''போறேனே. மாநகராட்சி பள்ளில படிக்கிறேன். அதோட எங்கம்மாவுக்கு உதவியாக இந்த வேலையெல்லாம் செய்யறேன். எங்கம்மா வீட்டு வேலை செய்யப் போறாங்க. சாயங்காலம்தான் திரும்பி வருவாங்க. வந்த பிறகு எனக்கும், தம்பிக்கும் கஞ்சியோ, கூழோ, சோறோ ஆக்கி ஊத்துவாங்க. அவங்க வருவதற்குள், இது போல் விறகு, சுள்ளி பொறுக்கிட்டுப் போய் வச்சா, எங்கம்மா அடுப்பு மூட்டிச் சீக்கிரம் கஞ்சி காய்ச்சி ஊத்தும்.''

''ஏன் உங்கம்மாவே இதெல்லாம் பொறுக்கிட்டுப் போய் அடுப்பு மூட்டி சோறு ஆக்க முடியாதா?''

''எப்படி முடியும்? வீட்டு வேலை செய்துட்டு வரும்போதே, பாவம் எங்கம்மா களைக்கப் போய் வருவாங்க. அவங்களுக்கு உதவியாய் என்னால் முடிஞ்ச இந்தச் சின்ன வேலையெல்லாம் செஞ்சா, அவுங்களுக்கு எத்தனை சௌகரியமாய் இருக்கும்? பள்ளி போற நேரம் போக மீதி நேரத்தில் சுள்ளி பொறுக்குவது, தம்பியைப் பார்த்துக்கிறது, ரேஷன் கடையில் அரிசி, எண்ணெய் வாங்கி வருவது இப்படிச் சின்ன சின்ன உதவிகளை செஞ்சா, எங்க அம்மா ரொம்ப சந்தோஷப்படுவாங்க'' என்று முடித்தான் அவன்.

செடிகளையெல்லாம் பொறுக்கி எல்லாவற்றையும் ஒன்றாகக் கட்டி, துணியை தலையில் வைத்து, அதன் மேல் கட்டைத் தூக்கி மேலே ஏற்றிக் கொண்டு, பிறகு ராஜுவைப் பார்த்து, சின்னதாக ஒரு புன்னகையை உதிர்த்து விட்டு, ''வாரேன்'' என்று கூறி விடை பெற்றான் சிறுவன்.

ராஜுவின் மனக்கண்முன் அவன் அம்மா வந்து நின்றாள். ரேஷன்ல மண்ணெண்ணெய் தராங்களாம். கொஞ்சம் போய் வா ராஜு. என்னால் முடியலைடா ராஜு என்று கெஞ்சுகிறாள். 'முடியாது போ' என்று தான் சொல்வதும் அவனுக்குத் தெரிகிறது. தலையைக் குலுக்கிக் கொண்டான் ராஜு. 'பாவம், எத்தனை முறை அம்மா கெஞ்சியிருக்கிறாள்? ஒரு முறையாவது நாம் உதவியிருக்கிறோமா? மறு பேச்சுப் பேசாமல், திட்டாமல், அடிக்காமல் வேகாத வெயிலிலும், கொட்டும் மழையிலும் அம்மா தானே கடைக்குப் போவாள். 'பாவம் அம்மா' - முதல் தடவையாக அவன் மனம் தாயாருக்காக வருந்தியது. அதற்கு மேல் அங்கு நிற்காமல், விரைவாக வீட்டை நோக்கி நடந்தான்.

அப்போதுதான் அம்மா கையில் எண்ணெய்த் தூக்கை எடுத்துக் கொண்டு, வீட்டைப் பூட்டி விட்டுத் தெருவில் இறங்கிக் கொண்டிருந்தாள்.

ராஜு, ஓடிப் போய், ''அம்மா கொடும்மா நானே வாங்கி வரேன்'' என்று அம்மாவின் கையில் இருந்த தூக்கு, பணம், ரேஷன் கார்டு, எல்லாவற்றையும் பறிக்காத குறையாய் வாங்கிக் கொண்டு, அம்மாவைப் பார்த்துச் சிரித்து விட்டு ரேஷன் கடைக்குச் சென்றான்.

இதுவரை எப்போதும் எது சொன்னாலும் தட்டிக் கழித்தே செல்லும் மகன், திடீரென்று முதல் தடவையாக கடைக்குச் செல்வதை ஆச்சரியத்துடனும், மகிழ்ச்சியுடனும் பார்த்துக் கொண்டே நின்றாள் அம்மா. ராஜுவுக்கு என்னாச்சு?




''அவர் யாரையும் திட்டவே மாட்டார்.''

''ஏன்?''

''அவர்தான் வையாபுரியாச்சே!''

- மணிவண்ணன்.


கருத்து: சிவா
பூமா யாருடன் பேசுகிறாள்?
பூமா
சலீம்
நம்பி
அலமு
முத்து




பிருந்தாவனக் கதையரங்கம்

மாடு முந்திக் கொண்டது!

குப்பன் என்ற விவசாயி ஒருவன் இருந்தான். அவன் ஒரு மாடு வளர்த்தான். அதற்கு உடம்பு சரியில்லாமல் போனது. உடனே அவன் மாட்டை அழைத்துக் கொண்டு கால்நடை வைத்தியரிடம் சென்றான்.

வைத்தியர் மாட்டைப் பார்த்து விட்டு குப்பனிடம் இரண்டு மாத்திரைகளைக் கொடுத்து மாட்டிற்குக் கொடுக்கச் சொன்னார். குப்பன் எப்படிக் கொடுப்பது என்பது தெரியாமல் விழித்தான். வைத்தியர் ''மாட்டு வாய்க்குள் ஒரு குழாயை வைத்து, அதில் இரண்டு மாத்திரைகளையும் போட்டு ஊதி விடு. உள்ளே ஓடி விடும்'' என்றார். ''சரி,'' என்று குப்பன் வீட்டிற்குச் சென்றான்.

சிறிது நேரம் கழித்து குப்பன் அழுது கொண்டே வைத்தியரிடம் வந்து



''ஐயா! நீங்கள் கூறியபடி மாட்டு வாயில் குழாயை வைத்து, மாத்திரைகளைப் போட்டு ஊதப் போனேன். அதற்குள் முந்திக் கொண்டு மாடு ஊதி விட்டது. மாத்திரைகள் என் வயிற்றுக்குள் சென்று விட்டன'' என்றான்!

- கப. சிவராஜா.

ஏன் முடியாது?

சங்கரன் ஒரு நாள் ஒரு கனவு கண்

டார். உலகத்தில் உள்ள எல்லாக் கொடிய நோய்களும் தனக்கு வந்து, பெரும் அவதிப்படுவதுபோல் கனவு இருந்தது. தூக்கம் கலைந்து எழுந்த சங்கரன், கனவை நினைத்து நடுங்கினார். உண்மையாகவே தனக்கு தூக்கத்தில் கண்ட கனவைப் போல் கொடிய வியாதிகள் எல்லாம் வந்து தன் உயிரைப் பறித்து விடப் போகிறது என்று அவர் அஞ்சினார். போதும் போதாததற்கு அவருடைய நண்பர்களும் சுற்றத்தினரும், ''அதிகாலையில் கண்ட கனவு கண்டிப்பாகப் பலிக்கும்'' என்று பீதியைக் கிளப்பிவிட்டனர். சங்கரன் அரண்டு போனார். பெரிய வைத்தியர்களிடம் அவரை சிகிச்சைக்கு அழைத்துக் கொண்டு போனார்கள். டாக்டர்கள் அவரைப் பரிசோதனை செய்து விட்டு, ''உடம்பில் எந்த நோயும் இல்லை'' என்றனர். ஆனாலும் சங்கரனின் மனத்தை மாற்ற யாராலும் முடியவில்லை. நாளடைவில் அவர் மன நோயால் மெலிந்து போனார். மனைவியும் பிள்ளைகளும் கவலைப் பட்டனர்.

கோடை விடுமுறையில் கிராமத்தைப் பார்க்க சங்கரனின் அண்ணன் மகள், சிறுமி பூமா வந்தாள். சித்தப்பாவைப் பார்த்ததும் அவள் கலங்கினாள். புத்திசாலியான அவள், சங்கரனின் மனக் கவலையைப் போக்க முடிவு செய்தாள்.


சங்கரன் தினமும் குளித்து விட்டுப் பூஜை செய்வார். சாமிக்குப் படைத்த சாதத்தில் சிறிது எடுத்து காகத்திற்குப் போடச் சொல்லுவார்! பிறகுதான் எல்லோரும் சாப்பிடுவார்கள்.

அன்றும் வழக்கப்படி பூஜை முடிந்ததும், பூமாவை அழைத்து சங்கரன், ''காக்காய்க்கு சாதம் போட்டுவிட்டு வாம்மா'' என்று பணித்தார்.

''ஐயையோ நான் மாட்டேன்'' என்று பூதத்தைக் கண்டவள் போல் அலறினாள் பூமா.

''ஏம்மா! என்னவாச்சு?'' என்றார் சங்கரன்.

''இனிமே நான் காகத்திற்கு சாதமே வைக்க மாட்டேன். நேற்று ஒரு கனவு கண்டேன். அதில் ஒரு காகம், திடீ



ரென்று பனைமர உயரத்திற்குப் பெரிதாகி என்னைக் கொத்தி ஒரே வாயில் விழுங்கிட்ட மாதிரி கனவு. அதிலும் விடியற்காலையில் கண்ட கனவு, பலிக்காம போகுமா? எனக்குப் பயமா இருக்கு?'' என்றாள் பூமா.

''என்னம்மா, படிக்கிற பொண்ணு! இப்படி வீணா பயப்படறே? கனவுல பார்க்கிறதெல்லாம் எங்கேயாவது உண்மையா நடக்குமா? காக்கா எங்கேயாவது பனைமர உயரத்திற்குப் பெரிதாகுமா?'' என்று கேட்டார் சங்கரன்.

''பெரியப்பா, எனக்குச் சொன்ன இதே பதிலை இன்னொரு தடவை நீங்களே உங்களுக்குச் சொல்லிப் பார்த்துக்குங்க. உலகத்துல இருக்கற எல்லாக் கொடிய நோயும் ஒரு மனிதனுக்கு வர முடியும்னு நீங்க பயப்படும் போது, ஒரு காகம் பனை மர உயரத்திற்குப் பெரிதாகி என்னை விழுங்கும்னு நான் பயப்படுவது நியாயம்தானே?'' என மடக்கினாள் பூமா.


பூமா மடக்கியது நல்ல பயனைத் தந்தது. சங்கரனின் மனநோய் ஒழிந்தது. நலம் பெற்றார்.

- சி.பூ. இனியவன்.

சுப்பிரமணியனார்!

குருவாடியில் சுப்பிரமணியம் என்ற இளைஞன் வாழ்ந்து வந்தான். கிராம மக்கள் அவனைச் சுருக்கமாக சுப்பு என்று அழைப்பார்கள். சுப்பு சின்னஞ் சிறு வயதிலேயே பெற்றோர்களை இழந்து அனாதையாகிவிட்டான். கிராம மக்களின் ஆடுமாடுகளை மேய்த்துக் கொண்டு காலத்தை ஓட்டினான்.

கிராம மக்கள் சுப்புவுக்கு முறை போட்டுக் கொண்டு அவனுக்கு ஆடு



மாடு மேய்ப்பதற்காக ஆளுக்குக் கொஞ்சம் பணமும் கொடுத்து வந்தனர். அதனால் சுப்பு ஒரு விதக் கவலையும் இன்றி மகிழ்ச்சியாகக் காலத்தை ஓட்டிக் கொண்டிருந்தான். சாப்பாடு போக அவனுக்கு அதிக செலவு இல்லாததால் ஊரார் கொடுக்கும் பணத்தை சேமித்து வந்தான். சேமித்த பணத்தை ஒரு பழைய துணியில் முடிந்து ஒரு மர பொந்துக்குள் வைத்திருந்தான்.

ஒரு நாள் சுப்பு தான் சேமித்து வைத்திருந்த பணத்தை எண்ணிப் பார்த்தான். அதில் ஐநூறு ரூபாய் இருந்தது. தான் பணக்காரனாகி விட்ட பூரிப்பும் மகிழ்ச்சியும் அவனுக்கு ஏற்பட்டது.

இன்னும் கொஞ்சம் பணம் சேர்த்து ஒரு நல்ல பெண்ணைப் பார்த்துத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்றெல்லாம் சுப்பு திட்டம் போட்டுக் கொண்டான்.

மறுநாள் ஆடு மாடுகளை மேய்த்துக் கொண்டு வந்து கட்டும் போது வீட்டுக்காரர் வழக்கம் போல் ''மாட்டுக் கார சுப்பு'' என்று அழைத்தார்.

தன்மான உணர்ச்சி காரணமாக சுப்புவுக்குக் கோபம் வந்து விட்டது. ''இப்படியெல்லாம் என்னை மரியாதைக் குறைவாகப் பேசக்கூடாது. இனி சுப்பிரமணியம் என்று முழுப்பெயரிட்டு அழைக்க வேண்டும்'' என்றான் சுப்பு. திடீரென்று அவனுக்கு என்னவந்து விட்டது என்று அவர்களுக்குத் தோன்றவில்லை. எனினும், அன்று முதல் அவனை எல்லோரும் சுப்பிரமணியம் என்றே அழைத்தார்கள்.

சில நாட்கள் கழிந்ததும் மறைவிடத்தில் வைத்திருந்த பணத்தை எண்ணிப் பார்த்தான். ஆயிரம் ரூபாய் சேர்ந்திருந் தது. மறுநாள் சுப்பு ஆடு மாடுகளை ஓட்டிச் சென்ற போது வழக்கப்படி வீட்டுக்காரர்கள் அவனை சுப்பிர மணியம் என்று அழைத்தார்கள். அதைக் கேட்டதும் சுப்புவுக்குக் கோபம் வந்து விட்டது.

''என்ன மொட்டையாக சுப்பிர மணியம் என்று கூப்பிடுகிறீர்கள். சுப்பிர மணியனார் என்று இனிமேல் என்னை மரியாதையுடன் கூப்பிட வேண்டும்'' என்று சொன்னான் சுப்பு. இவ்வாறு பணம் சேரச் சேர தனக்குத் தனி மதிப்பும் மரியாதையும் அந்தஸ்தும் வந்து விட்டதாக எண்ணி, கிராம மக்களிடம் நாளுக்கு நாள் அதிக மரியாதையை எதிர் பார்க்கத் தொடங்கினான் சுப்பு.

திடீர் திடீரென நாளுக்கு நாள் சுப்புவிடம் ஏற்படும் மாறுதல்களுக்கான காரணம் தெரியாமல் ஊர் மக்கள் திகைத்தார்கள். ஒருநாள் ஊர் மக்களில் ஒருவர் சுப்புவின் மனமாற்றங்களுக்கான காரணத்தைக் கண்டு பிடிக்கும் முயற்சியில் தீவிரமாக இறங்கினார். சுப்புவைத் தொடர்ந்து கண்காணித்தார்.

மரப் பொந்திற்குள்ளிருந்து அவன் ஏதோ ஒன்றை அடிக்கடி எடுத்துப் பார்ப்பதைக் கண்டு அவன் இல்லாத நேரத்தில் மரத்தை சோதனை செய்தார். பொந்துக்குள் பணமுடிப்பு இருந்தது. அதை அவனுக்குத் தெரியாமல் எடுத்துக் கொண்டு வந்துவிட்டார்.

அன்று மாலை மரப்பொந்தை வந்து பார்த்த சுப்பு அங்கே பணமுடிப்பு இல்லாததைக் கணடு அதிர்ச்சியடைந்தான். அவன் கட்டிய மனக்கோட்டை ஒரு கணத்தில் இடிந்து தரைமட்டமாகி விட்டது. பணக்கார அந்தஸ்தும் அதனால் ஏற்பட்ட மமதையும் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டன!

மறுநாள் சுப்பு ஆடுமாடுகளை ஓட்டுவதற்காக வீடுகளுக்குச் சென்றான். ஊர் மக்கள் வழக்கமாக ''என்ன சுப்பிரமணியனாரே! ஏன் சோகமாக இருக்கிறீர்கள்?'' என்று கேட்டனர்.

''இனிமேல் என்னைப் பழையபடி மாட்டுக்காரா என்றே கூப்பிட்டால் போதும்'' என்று அடக்கமாகச் சொன்னான் சுப்பு.

கப்பு மனமாற்றம் அடைந்ததும் அவன் பணத்தை எடுத்தவர் பணத்தைத் திருப்பி கப்புவிடம் கொடுத்து விட்டார். அன்று முதல் கப்பு அடக்கமாக நடந்து மகிழ்ச்சியாக வாழ்ந்தான்.

- ரெ. இராமாதேசிகன்.

அ.பு. அய்யாசாமி!

அண்டப்புளுகன் அய்யாசாமி யைச் சுற்றிலும் எப்பொழுதும் ஒரு கூட்டம் இருந்து கொண்டுதான் இருக்கும். அவரது புளுகுகளை கேட்பதற்காகவே அவர்கள் ஆவலுடன் கூடியிருப்பர். அன்றும் அப்படித்தான்! அய்யாசாமி பெருமிதத்தோடு 'என்னோட அக்கா புருஷன் ஒருத்தர் சிங்கப்பூர்ல பல எஸ்டேட்டுகளுக்கு அதிபதியாக்கும்!'' என்றார்.

அந்தச் சமயம் பார்த்து, அய்யாசாமியின் மனைவி கண்ணம்மா வெளியில் வந்து 'என்னங்க, உங்க அக்கா புருஷன் திருச்சியிலிருந்து அடுத்த வாரம் வரதா கடுதாசி போட்டிருக்கார்' என்றாள்.


கூட்டத்தினரில் ஒருவன் எழுந்து, 'என்னங்க ஐயாசாமி, உங்க அக்கா புருஷன் சிங்கப்பூர்ல இருக்கிறதா சொன்னீங்களே?' என்று கேட்டார். அய்யாசாமியென்ன சளைத்தவரா! சமாளிப்பதில் கில்லாடியாயிற்றே அவர்!



அய்யாசாமி சாவகாசமாக, 'வேறொண்ணுமில்லீங்க! சிங்கப்பூர்ல இருக்கிறது என்னோட பெரிய அக்கா புருஷன். இப்ப வரேன்னு கடுதாசி போட்டிருக்கிறது திருச்சியில இருக்கிற என்னோட சின்ன அக்கா புருஷன்' என்றார்.

அய்யாசாமியா கொக்கா!

- மு. பூபாலன்.



''உங்க சன் இங்கிலீஷ்லே ரொம்ப 'வீக்'கா இருக்கான்...''

''தமிழ்ல சொல்லுங்க?''

''தங்களது மகன் ஆங்கிலத்தில் மிகவும் வலுவிழந்து இருக்கிறான்!''

- வலங்கைமான் நூர்தீன்.

''மிருதங்கம் வாசிக்கறதை விட புல்லாங்குழல் வாசிக்கிறது கஷ்டம்.''


''எப்படி?''

''மிருதங்கத்திற்கு ஆறு எழுத்து தானே!''

- நெல்லை எஸ். அருணா.



திருட்டுத் தேங்காய்!



ராமுவுக்கு ஒரு மாதிரியாக இருந்தது. சோமுவுக்கு ஒரு வேளை விஷயம் தெரிந்திருக்குமோ?



ராமு, பயங்கர சந்தோஷத்தில் இருந்தான். அவன் வேண்டிக் கொண்டபடியே தேர்வில் பாஸ் ஆகி விட்டான்! எங்கே, கணக்குப் பரீட்சை காலை வாரிவிடுமோ என்று அவனுக்கு உள்ளுக்குள் கொஞ்சம் உதைப்புத்தான்! நல்லவேளை, பாஸ்!

உடனடியாக அவன் செய்ய வேண்டிய வேலை ஒன்று இருந்தது. தேர்வில் பாஸாகி விட்டால், தெருமுனையில் உள்ள பிள்ளையார் கோவிலுக்கு ஒரு தேங்காய் உடைப்பதாக வேண்டிக் கொண்டிருந்தான்! அவன் பாஸானதற்கு முழுக் காரணம் பிள்ளையார்தான் என்று அவனுக்குத் தெரியும். மரியாதையாக வேண்டிக் கொண்டபடி தேங்காய் உடைத்து விட வேண்டும்!

ராமு கடைத் தெருவுக்குப் போய் ஒரு தேங்காய் என்ன விலை என்று விசாரித்தான். ஆறு ரூபாய்!

அம்மாடியோவ்!

ஒரு ஏழாங்கிளாஸ் பையனுக்கு ஆறு ரூபாய் எப்படிக் கையில் இருக்கும்? ஆகவே, அப்பாவைக் கேட்கலாம் என்று வீட்டுக்கு வந்தான் ராமு.

அப்பா இன்னும் அலுவலகத்திலிருந்து வந்திருக்கவில்லை. ராமு முகம் கழுவ கொல்லைப்புறம் சென்றான்.

முகம் கழுவி முடித்து, அவன் திரும்பியதுதான் தாமதம் -

'தொபீர்' என்று ஒரு சத்தம்!

பக்கத்து வீட்டுத் தென்னை மரத்திலிருந்துதான் ஒரு காய் ராமுவின் வீட்டுப் பக்கம் விழுந்தது!

பக்கத்து வீட்டுக்காரர்கள் வேறு யாரும் அல்ல! ராமுவின் வகுப்புத் தோழன் சோமுவும், அவன் பெற்றோரும்தான்!

ராமு சுற்று முற்றும் பார்த்தான். அவன் கண்ணுக்கு யாரும் படவில்லை. சட்டென்று விழுந்த தேங்காயை எடுத்துக் கொண்டு வீட்டுக்குள் ஓடினான் அவன். 'நல்ல வேளை! யாரும் பார்க்கவில்லை' என்று அவன் நினைத்துக் கொண்டான்.

ஆனால் -



சோமுவின் அம்மா பார்த்து விட்டாள். தற்செயலாக, துணி உலர்த்துவதற்கு கொல்லைப்புறம் வந்த சோமுவின் தாயார், தேங்காயை எடுத்துக் கொண்டு ராமு ஓடுவதைப் பார்த்து விட்டாள்! அதை ராமு கவனிக்கவில்லை.



வீட்டுக்குள் விரைந்த சோமுவின் தாய் தன் கணவரிடம், ''இதென்ன அக்கிரமம் பாருங்கள்! நம் வீட்டுத் தென்னை மரத்திலிருந்து விழுந்த காயை, பக்கத்து வீட்டு ராமுப் பய எடுத்துக் கொண்டு போய் விட்டதை நானே என் கண்களால் பார்த்தேன்! இப்போது என்ன செய்வது? அவர்களிடம் ஏதாவது கேட்டு விட்டால் போதும், ராமுவின் அம்மா மொலுமொலுவென்று சண்டைக்கு வந்து விடுவாள்!'' என்று முறையிட்டாள்.

''சரி சரி! இப்போது என்ன செய்யச் சொல்கிறாய்?'' என்று கேட்டார் சோமுவின் அப்பா.

''இப்படி எத்தனை காய் போச்சோ? ஒரு தேங்காய் ஆறு ரூபாய்க்கு விற்கிறது. நீங்கள் உடனே தேங்காய் பறிப்பவனை அழைத்து வாருங்கள். நம் மரத்துக் காய்கள் அத்தனையையும் உடனே பறித்தாக வேண்டும்!'' என்றாள் சோமுவின் அம்மா முடிவாக.

தேதியூர் பாலு

ஒரு மணி நேரத்தில் சோமுவின் வீட்டு மரத்தில் இருந்த முற்றின காய்கள் எல்லாவற்றையும் பறித்து விட்டார்கள்!

உரித்த தேங்காய்களை, கடையில் போட்டு வருவதற்காக சோமு அவற்றை மூட்டை கட்டி எடுத்துச் சென்றான்.

இது இப்படி இருக்க, ஒரு பைசா செலவில்லாமலேயே பிள்ளையாருக்கு தேங்காய் உடைத்துத் தன் வேண்டுதலை நிறைவேற்றி விடலாமென்ற சந்தோஷத்தில் தேங்காயை எடுத்துக் கொண்டு ராமு கோவிலுக்கு வந்தான். வரும் வழியில் சோமுவைப் பார்த்தான்.

ராமுவுக்கு ஒரு மாதிரியாக இருந்தது. சோமுவுக்கு ஒரு வேளை விஷயம் தெரிந்திருக்குமோ? சே! தெரிந்தால் எத்தனை கேவலம்?

''என்ன ராமு! எங்கே கிளம்பி விட்டாய்?'' - சோமு கேட்டான்.

''வ.... வந்து... கோவிலுக்கு!''

''என்ன விஷயம்?''

''பரீட்சையில் பாஸ் பண்ணி விட்டேன் அல்லவா? பிள்ளையாருக்கு தேங்காய் வாங்கி உடைக்கப் போறேன்.''

''நல்லகாரியம். நானும் உன்னோடு வரேன். பரீட்சையில் நானும் தானே தேறியிருக்கிறேன்?'' என்றபடி சோமுவும் தன் தேங்காய் மூட்டையைச் சுமந்தபடி கோவிலுக்கு வந்தான்!

ராமுவுக்கு ரொம்ப தர்மசங்கடமாகி விட்டது! இருவரும் மௌனமாக நடந்தனர்.

ராமுவிடம் ''அர்ச்சனையா?'' என்று கேட்டார் அர்ச்சகர்.

''ஆமாம் ஐயா!''

ராமு, தான் கொண்டு வந்திருந்த தேங்காயை அர்ச்சகரிடம் கொடுத்தான்.

உள்ளே சென்று தேங்காயை உடைத்த அர்ச்சகர் முகம் சுளித்தார். ''தம்பி, உன் தேங்காய் அழுகல். இதை எப்படிப் படைப்பது?'' என்றார்.

ராமுவுக்கு அழுகையே வந்து விட்டது. கடவுளுக்கே அவன் செய்கை பிடிக்கவில்லையோ!

எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்த சோமு உடனே, ''கவலைப் படாதே ராமு! நான் உனக்கு நல்லதாக ஒரு தேங்காய் தருகிறேன். முதலில் அர்ச்சனையை முடிப்போம்!'' என்று தனக்கும், ராமுவுக்குமாக இரண்டு தேங்காய்களை, தன் மூட்டையிலிருந்து எடுத்து அர்ச்சகரிடம் தந்தான்!

ராமுவின் கண்கள் பனித்தன. என்னதான் பரீசையில் பாஸ் பண்ணிவிட்டாலும், எத்தனை ஈனமான காரியத்தை அவன் செய்திருக்கிறான்! சோமு கண்ணியமான நல்ல நண்பனாக இருக்கவே பெருந்தன்மையாக நடந்து கொண்டான்!

வேறு யாராவதாக இருந்திருந்தால்? கடவுளே!

கோவிலை விட்டு வெளியே வரும் போது ராமு புது மனிதனாக இருந்தான்.

''இது மிருதங்கம் சார்!''

''எந்த தங்கமா இருந்தாலும் சோதனை போட்டுத்தான் ஆகணும்.''





''டிரைவர்? இந்த ஆக்சிடெண்ட் எப்படி நடந்தது?''


''எனக்கு எதுவும் தெரியாது. நான் தூங்கிட்டேன் ஐயா!''

- எஸ். தட்சணாமூர்த்தி.


யார் கட்டினார்கள்? - போட்டி


இந்தியாவின் பெருமை கூறும் சில கட்டடங்கள், பூங்காவின் படங்கள் கீழே தரப்பட்டுள்ளன. இவை அமையக் காரணமாக இருந்தவர்களின் பெயர்களை நீங்கள் எழுதி அனுப்ப வேண்டும். பரிசு உண்டு. ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

அமிர்தசரஸ் பொற்கோவில்



தாஜ்மஹால்





தஞ்சை பெரிய கோவில்


ஜந்தர் மந்திர்






திருமலைநாயக்கர் மஹால்

மைசூர் பிருந்தாவனம்



சாஞ்சி ஸ்தூபி



யார் கட்டினார்கள்? - போட்டி

பெயர் : ....


வயது : ....


முகவரி : ....


பின்கோடு : ....

முடிவு தேதி : 15.10.93

பாண்டியனைத் திருத்திய பாட்டுப்போட்டி!





அன்றிரவு...
பாணபத்திரா! இந்த ஓலையுடன் சேர மன்னனைக் காணச் செல்!
காலையில்...
ஆ! கண்டது கனவல்ல! ஈசன் கட்டளை!
திருவஞ்சைக் களம் சென்றடைந்தார் பாணபத்திரர்...
சேரமன்னரைப் பார்க்கணும். கடவுள் ஓலை கொடுத்திருக்கிறார்.
தண்ணீர் பந்தல்
பெருசு! இவர் ஆண்டவன் தூதராம். அரசனைப் பார்க்கணுமாம்... ஹி...ஹி...
பேசாம ஒரு குவளை மோர் கொடுத்து அனுப்புய்யா!
சற்று நேரத்தில்...
ரொம்ப தாகம்; கொஞ்சம் மோர் கொடுங்க...
நெடுந்தூரப் பயணமோ? களைச்சிருக்கீங்களே?



அதை ஏன் கேக்கறீங்க? யாரோ பாணபத்திரனாம். பாண்டிநாட்டானாம். கண்டுபிடிச்சு அழைச்சு வான்னு மன்னர் உத்தரவு. எங்கேன்னு தேடறது!
அதோ போறானே, பாண்டி நாட்டான்தான். அரசரைப் பார்க்கணும்னும் சொன்னான். ஆனா சிவ பெருமானிடமிருந்து ஓலை கொண்டு வந்திருப்பதாகச் சொன்னதுதான் புரியலை!
வீரர்கள் பாணபத்திரரை நெருங்கி...
உன் பெயர் என்ன?
பாணபத்திரன். மதுரையிலிருந்து வருகிறேன்.
வீரர்கள் பாணபத்திரரை பல்லக்கில் ஏற்றிச் செல்ல, தலைநகர் எல்லையில்...
வரவேணும், பாணபத்திரரே!
மன்னவா! உங்களைப் போன்ற சிவனடியார்களைத் தரிசிப்பதே பாக்கியம்!
தங்களைப் பற்றி சோமசுந்தரர் என் கனவில் சொன்னார்.
இதோ ஈசனாரின் திருமுக ஓலை.



சேரமன்னர் பாணபத்திரருக்குப் பொன்முடிப்பு அளித்தார். யானை மீது நகர்வலம் வரச் செய்தார்.
பாணபத்திரர் வாழ்க!
ஈசனின் தூதர் வாழ்க!
பாணபத்திரர் மதுரை திரும்பி சில காலம் சென்று...
நடுநிசி; கொட்டும் மழையில் எங்கே புறப்பட்டீர்கள்?
ஈசன் சந்நிதியில் பாடத்தான்.
கோவிலில் மூன்று வேளை பாடினால் போதாதா? நள்ளிரவில் எதற்கு?
ஈசன் சந்நிதியில் பாடவே பிறந்தேன். வேறென்ன தொண்டு என்னால் செய்ய முடியும்?
கோயில் வெளிப்பிராகாரத்தில்...
தண்ணீரில் நின்று பாடுகிறீர்களே, இந்தப் பலகை மீது நில்லுங்கள்.
அப்பனே, நன்றி.
பாடிய பாணர் சீக்கிரமே பக்தி பரவசமானார்.


கண் திறந்த போது எதிரே அமர்ந்திருந்த சிறுவனைக் காணவில்லை, காலடியில்...
ஈசனே! உன்னைப் பாடி வரும் நான், நீரில் நிற்கக் கூடாது என்று பொற்பலகை இட்டாயோ?
வரகுண பாண்டியனுக்குப் பிறகு, ராஜராஜ பாண்டியனும் சிவநேசச் செல்வனாக விளங்கினான்.
இறைவா! என்றும் என் உடன் இருந்து என்னை நல்வழிப் படுத்து.
அந்தப்புரத்தில்...
ஆஹா... சரஸ்வதிதேவி போல், வீணை வாசிக்கிறீர்கள்... பாடுகிறீர்கள்... ஆனால்...
ஆனால் என்ன?
ஊரில் பேசிக் கொள்கிறார்கள், பாணபத்திரரின் மனைவியார் போல யாராலும் பாட முடியாது என்று...
அன்றிரவு...
தேவி! என்ன ஆயிற்று? ஏன் இப்படி கோபமாக...


பாணபத்திரரின் மனைவிக்குப் பாடம் கற்பிக்க வேண்டும். கர்வம் தலைக்கேறி விட்டது, அவளுக்கு.
ஐயோ பாவம்! அவளென்ன என்னிடம் போட்டிக்கா வந்தாள்...?
தெரியுமே! உங்களுக்குப் பாணபத்திரரிடம் தான் மதிப்பு. என்னைப் பற்றி என்ன...?
சரி சரி. உன் விருப்பப் படியே செய்யலாம்...
ஈழ நாட்டிலிருந்து ஒரு பாடினி (பாடகி) வருகிறாள்... ஒரு போட்டி வைத்து, பாணபத்திரரின் மனைவி தோற்றதாகத் தீர்ப்புச் சொல்லிவிடலாம்...
ஈழப் பாடினியைத் தருவித்த மன்னர்...
பாணபத்திரர் மனைவியைப் போட்டிக்கு நீ அழைக்கலாம்...
பாணபத்திரர் வீட்டில்...
என்னோடு போட்டியிட உனக்குத் தகுதி இருக்கிறதா?
நானும் என் கணவரும் இறைவனுக்காக அன்றி வேறு யாருக்காகவும் பாடுவதில்லை.


பாடினி தோழியரிடம்...
கேட்டீர்களா! தோற்றுவிடுவோமோ என்ற பயம்!
சொக்கேசா! இதுவும் உன் திருவிளையாடலா...?
சரியம்மா, பாடுகிறேன்.
நாளை... மன்னர் முன்னிலையில் போட்டி!
பாட்டுப் போட்டி நடந்தது... முடிவில்...
பாணபத்திரர் மனைவி நன்றாகத்தான் பாடுகிறார். ஆனால்...
ஈழத்துப் பாடினியின் இசை ஞானமே சிறப்பாக இருக்கிறது!
அப்போது பாணபத்திரர்
அரசே! எங்கள் இசை ஈசனுக்கே அர்ப்பணமாக வேண்டியது. நாளைய தினம் ஆலயத்தில் போட்டி வைத்துக் கொள்ளுங்கள்.


நாளைய தினம் அம்மையார் போட்டியில் வென்றால் நான் அவரை என் தோளில் சுமப்பேன்! தோற்றால்...?
அம்மையார் உங்களைச் சுமப்பார்!
இது என்ன அக்கிரமம்...!
சுவாமி, கவலைப் படாதீர்கள். இறைவன் சன்னிதியில் நடப்பதை ஏற்போம்.
பாணபத்திரர் வீட்டில்...
மன்னர் இவ்வாறு ஒரு வஞ்சனையுடன் நடப்பார் என்று நான் எதிர்பார்க்கவில்லை.
அரசியின் தூண்டுதலால்தான் இப்படி நடக்கிறதாம்
கோயிலில் போட்டி தொடங்கும் போது...
விலகுங்கள், வழி விடுங்கள்...
ஆ! யார் இவர்?
பெரிய பாடகர் போலிருக்கே!
பாடகர் சபையில் முன் வரிசையில் வந்து அமர்ந்தார். மன்னர் ரகசியமாக....
தேவி! பொன்னாடை அணிந்து வந்திருப்பவர், மகா வித்வான் போலத் தெரிகிறார். அவர் முன்னிலையில் எப்படி அநீதியாகத் தீர்ப்பு வழங்குவது?



போட்டி தொடங்கியது...
எனக்கு வாக்குக் கொடுத்திருக்கிறீர்கள். நினைவிருக்கட்டும்.
இருவரும் பாடி முடித்ததும்...
பெரிய வித்வான் போல் காணப்படுகிறீர்கள், நீங்களே தீர்ப்புச் சொல்லலாமே...?
மன்னவா! அரசர் தீர்ப்புச் சொல்வது தான் முறை. மேலும் தாங்களும் இசை நுணுக்கங்களை நன்கு அறிந்தவர். தங்களை விட நடு நிலையாளர் யார்?
அரசனால் மனச்சாட்சிக்கு விரோதமாகப் பேச முடியாது போயிற்று...
பாணபத்திரரின் மனைவியார் பாடலை ஈசனே மகிழ்ந்து கேட்டது போல் எனக்குத் தோன்றியது.
...இசைக்கு மேதை எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு பக்தியும் அவசியம். எனவே பாணபத்திரர் மனைவியே வென்றார் என்பது என் தீர்ப்பு!



முன் வரிசையில் இருந்த பாடகர் எழுந்து, கம்பீரமாக நடந்து, கோயில் கருவறைக்குள் சென்றார்...
...மறைந்தார்!
ஆகா!
ஈசனே நம்முடன் அமர்ந்திருந்தாரா!
அற்புதம்!
பாடினி தோள் தூக்க வர...
வேண்டாம் அம்மா! நீயும் நன்றாகத் தான் பாடினாய். உன் ஆற்றல் இனி பக்தியுடன் கலந்து சிறக்கட்டும்.
மன்னரும் அரசியும் பரிசுகள் வழங்கினர்.
என் கர்வம் அடங்கியது.
எல்லாம் சொக்கேசன் விளையாட்டு!
அந்தப்புரத்தில்...
என்னை மன்னியுங்கள்!
முடியாது! நாள் தவறாமல் பூஜை அறையில் நீ பாட வேண்டும் என்பது உனக்கு நான் வழங்கும் தண்டனை!



என்ன சாதிக்க முடியும்?

பரத்தும் ஜக்குவும் பார்த்துக் கொண்டிருக்கும்போதே அந்த முட்டாள் மனிதன் பழத்தைத் தின்று விட்டுத் தோலியை வீசி எறிந்தான். நட்டநடு நடைபாதையில் அது விழுவதற்கும் அதன் மீது ஒரு வயதான மனிதர் காலை வைப்பதற்கும் சரியாக இருந்தது.

அவர் சறுக்கி விழுந்ததைக் கூடக் கவனியாமல் அவன் வேகமாக நடந்தான். அருகே நின்று கொண்டிருந்த இரு பெரிய மனிதர்களுக்கு இதைக் கண்டதும் கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

ஓடிச் சென்று அவர்கள் அந்த மனிதனைத் தடுத்து நிறுத்தி அவனிடம், பெரிதாகச் சண்டை போடத் தொடங்கினர். ஆனால் யாருமே கிழவருக்கு உதவி செய்ய வேண்டும் என்பதை நினைத்துப் பார்க்கவில்லை.

பரத்தும் ஜக்குவும் மெல்லக் கைலாகு கொடுத்து, ''பார்த்துத் தாத்தா,'' என எச்சரித்தபடி அவரைத் தூக்கி விட்டனர்.

வாழைப் பழத் தோலியை எடுத்துக் கொண்டு போய்ச் சற்று எட்ட இருந்த குப்பைத் தொட்டியில் போட்டு விட்டு வந்தான் பரத்.

''உபகாரம் பண்ணா விட்டாலும் உபத்திரவப்படுத்துவாங்களே!'' என்றான் ஜக்கு.

''உபகாரமும் எப்படிப் பண்ணணும்னு தெரியாது,'' என அலுத்துக் கொண்டான் பரத்.

''எப்படித்தான் நம்முடைய நாடு முன்னுக்கு வருமோ?'' என்று இருவரும் வருத்தப்பட்டனர்.

''கண்டிப்பாக முன்னுக்கு வரும் தம்பிகளா,'' என்றார் அந்த முதியவர்.

''என்ன தாத்தா! இப்படிப் பொறுப்பில்லாத மக்கள் இருக்கிற நாடு எப்படி....'' என இழுத்தான் ஜக்கு.

''ஏன்! நீங்கள் இரண்டு பேர் எனக்கு உதவவில்லையா?'' என அவர் வினவினார்.

''இவ்வளவு பெரிய உலகத்தில் இரண்டு சின்னப் பசங்களாலே என்ன சாதிக்க முடியும்?'' என்று கேட்டான் பரத். உள்ளுக்குள் பெரியவர் அவர்களை உயர்த்திப் பேசியது அவனுக்கு உண்மையில் பெருமையாகத்தான் இருந்தது.

''ஏன்! என்னைத் தூக்கி விட்டது மட்டுமில்லாமே வாழைப் பழத் தோலை வேறு யாரும் விழுந்துடாமே இருக்க எடுத்தே இல்லே? வேறு யாரும் அதைப் பத்தி நினைக்காத போது சிறுவர்கள் நீங்கள் நல்லபடி செயலில் இறங்கியதால் எவ்வளவு கெடுதல்களைத் தவிர்த்திருக்கீங்க!''

ஜக்குவும் பரத்தும் நிமிர்ந்து நின்றனர்.

''இந்த உலகத்திலே போலீஸ்காரங்க கொஞ்சம் பேர்தானே? ஆனால், அவர்கள் இருப்பதாலேதானே எல்லாரும் பயமில்லாம இருக்கோம்?'' அவர் கேள்விக்கு ஆமெனத் தலையை ஆட்டினர் நண்பர்கள்.

''அதே போலச் சமுதாயச் சிந்தனை உள்ள உங்களை மாதிரிச் சிறுவர்களாலும் நாட்டைச் சரியான பாதையிலே கொண்டு செல்ல முடியும். மற்றவங்க செய்கிற தவறுகளைத் திருத்த முடியும் கற தன்னம்பிக்கையை நீங்கள் வளர்த்துக்கிட்டாலே போதும்,'' என்றார் பெரியவர்.

நற்செயல் ஒன்றைச் செய்ததோடு மட்டுமல்லாமல், அந்த நாளிலேயே தன்னம்பிக்கை ஊட்டக்கூடிய அறிவுரையையும் பெற்ற அந்த நண்பர்கள் நிமிர்ந்த நோக்கோடும் உறுதியான நடையோடும் பள்ளிக்கூடத்தை நோக்கி நடந்தனர்.

– கைலாஸ்



நண்பன்

அண்டி நாளும் மனிதர் காட்டும்
அன்பை நாடிப் பிழைக்கும்!
கண்ணில் பாசம், பணிவைக் காட்டிக்
கனிந்து வாலைக் குழைக்கும்!

சன்னமான ஒலியும் கேட்டுச்
சாய்ந்த காது விறைக்கும்!
உன்னிப் பாக எதையும் மோப்ப
உணர்வில் தேடிப் பிடிக்கும்!

அன்னி யரின் வருகை கண்டால்
அதிக மாகக் குரைக்கும்!
முன்னர் வந்த மனிதர் என்றால்
முனகிச் சேதி உரைக்கும்!

கண்டிப் பாக எதிரி தோற்றுக்
கதறி ஓடக் கடிக்கும்!
புண்கள் ஆறத் தினமும் நாக்குப்
போட்டு நீவித் துடைக்கும்!

தின்னப் போகும் உணவை உண்டு
திண்ணை ஓரம் முடங்கும்!
கன்னம் போடத் திருடன் வந்தால்
கவ்விப் பாய்ந்து மடக்கும்!

உண்ட வீடு தன்னைக் காக்க
உயிரைக் கூடக் கொடுக்கும்!
நன்றியுள்ள நண்பன் யார்க்கு
நாயைப் போலக் கிடைக்கும்!

– தளவை. இளங்குமரன்

சிரிப்...



வீட்டு வாசல்படியில உட்கார்ந்து என்ன படிக்கிறே?
என்ட்ரன்ஸ் எக்ஸாமுக்குப்பா!
ராஜா ஏன் சோகமா இருக்கிறார்..?
அவர் போரில் புறமுதுகிட்டு ஓடியதை யாரோ "போட்டோ" பிடிச்சுட்டாங்களாம்
டேய் ராசு! இந்தத் தடவையாவது நீ பாஸ் பண்ணனும். அப்பத்தான் எனக்கு உங்க அப்பா மூலம் பத்து தேங்காய் கிடைக்கும்...!
தலை நிறைய முடி வளர்த்திருக்கியே... உன் கிளாஸ் டீச்சர் உன்னைத் திட்டலையா?
பையன் படிக்கும் போது டி.வி. வைக்காதீங்கன்னு சொன்னேன் கேட்டீங்களா? பரீட்சையில் கேள்விக்கு விடை தெரியாத இடங்களில் தடங்கலுக்கு வருந்துகிறோம்னு எழுதியிருக்கானாம்!
ஊஹூம்... தலையில் இதுவாவது இருக்கேன்னு என்னைப் பாராட்டினார்!



கார்டு பிறந்த கதை!

உலகில் முதன் முதலில் அஞ்சல் அட்டையைப் பயன்படுத்தும் கருத்தை வெளியிட்டவர் அமெரிக்காவைச் சேர்ந்த சார்லட்டன். ஆனால் இந்தப் புதிய முயற்சியால் இவருக்கு எந்த இலாபமும் கிடைக்கவில்லை. காரணம், லிப்மேன் (LIPMAN) என்பவருக்கு இவர் தனக்குக் கிடைத்த போஸ்ட் கார்டு அடிக்கும் உரிமையை விற்று விட்டார். லிப்மேன் 'லிப்மேன் போஸ்ட் கார்டு' என்ற பெயரில் அமெரிக்காவின் பிலடெல்பியா மாகாணத்தில் தபால் கார்டு முறையை அறிமுகப்படுத்தி விற்பனையைத் துவக்கினார்.

அரசு பூர்வமான உரிமையுடன் முதன் முதலாக 1869-ல் ஆஸ்திரியா போஸ்ட் ஆபீஸ்தான் தபால் கார்டு விற்பனையை முறைப்படுத்தியது. இதற்கு உதவியவர் டாக்டர் எமானுவல் ஹெர்மான் என்ற பேராசிரியர். பழுப்பு நிறத்தில் வெளியிடப்பட்ட இந்தப் போஸ்ட் கார்டானது வெளியான முதல் மாதத்திலேயே பதினைந்து இலட்சம் விற்பனையை எட்டியது.

பிரான்சுக்கும் ரஷ்யாவுக்கும் போர் ஏற்பட்ட போது, பிரெஞ்சு வீரர்கள் தங்கள் குடும்பத்தாரோடு கடிதத் தொடர்பு கொள்ளக் கஷ்டப்பட்டனர். அப்போது லியோன் பெஸார்சானியோ என்பவர் இராணுவ வீரர்களின் உபயோகத்திற்காகத் தனியான போஸ்ட் கார்டை உருவாக்கினார். இதில் இராணுவ தளவாடங்களின் படங்கள் பொறிக்கப்பட்டிருந்தன. ஆகவே படங்களுடன் வெளிவந்த முதல் போஸ்ட் கார்டு என்ற பெருமைக்கு உரியது இதுதான்.

பாரிஸ் நகரில் 1889ல் ஈபிள் (Eiffel) டவர் உருவாக்கப்பட்டவுடன் அந்தக் கோபுரத்தின் படத்துடன் அழகிய போஸ்ட் கார்டு வெளிவந்தது.

1902ஆம் ஆண்டில் பிரிட்டனில்தான் நாம் தற்சமயம் உபயோகப்படுத்தும் போஸ்ட் கார்டு அதாவது ஒரு பக்கத்தில் செய்திகளை எழுதவும், மறு பாதியில் முகவரி எழுதவும் உருவாக்கப்பட்ட கார்டு உபயோகத்திற்குக் கொணரப்பட்டது. இம்முறையை பிரான்ஸ் 1904லிலும், ஜெர்மனி 1906லிலும் பின்பற்றியது. அமெரிக்கா 1907ஆம் ஆண்டில் இம்முறையைத் தனது நாட்டில் பழக்கத்திற்குக் கொண்டு வந்தது. அண்மையில் நமது இந்திய தபால்துறை ஊதா வண்ண தபால் கார்டை அறிமுகப்படுத்தியுள்ளது.

தொகுப்பு : ப. பாலமுருகன்



பிருந்தாவனக் கவியரங்கம்

காக்கையாரே!

கருமை நிறக் காக்கையாரே
கண்ணை உருட்டிக் கரைவதேன்?
விருந்து வரப் போகுதோ
விரைந்து வந்து சொல்லுங்கள்!

சண்டை போட வாய்ப்புகள்
சிறிது கூட இல்லையா?
மண்டை வெடிக்கக் கரைகிறீர்
மகிழ்ந்து உறவை அழைக்கிறீர்!




விட்டுக் கொடுக்கும் வரத்தினை
வேண்டி எங்கு பெற்றீரோ?
காட்டும் அந்த வழியினை
கருத்தாய் பழகி உயருவோம்!

- இரணியல் ராஜா.

இனிய நண்பன்!

சிவப்பு நிறப் பெட்டி
சிறிய வாய்ப் பெட்டி



எவரும் விரும்பும் பெட்டி
அழகு தபால் பெட்டி

வாழ்த்து துயரம் செய்தி
வகை வகையாக் கடிதம்
புத்தகம் கதைகள் கட்டுரை
போட்டால் ஏற்கும் பெட்டி

அத்தான் மாமன் அண்ணன்
அறிமுகம் இல்லா நண்பன்
இத்தனை பேரும் எழுதும்
எல்லாக் கடிதமும் ஏற்கும்.

சாதி மதமும் இதற்கில்லை
சமயச் சண்டை இதற்கில்லை
இத்தனை சிறப்புகள் இருப்பதனால்
இதுவே இனிய நண்பனாம்.

- ஏ. எல். சண்முகம்.

நட்பு


நல்ல நண்பனைத் தேடு
நலமே பயக்கும் பாரு
இல்லை தனிமை பாடு
இதுவே உயர்வாம் கூறு

படிப்பில் பண்பில் நட்பு
பள்ளி ஆட்டத்தில் நட்பு
கடமை ஆற்றிட நட்பு
கருத்தாய் பழகிட நட்பு



தவறைத் திருத்திட நட்பு
தன்னை உணர்ந்திட நட்பு
இடரைக் களைந்திட நட்பு
உலகை அடைந்திட நட்பு!

- இரா. பிரபாகரன்.




வாருங்கள்

வேண்டி வேண்டி அழைக்கிறேன்
வேலூர் நகருக்கு வாருங்கள்
கண்ணைக் கருத்தைக் கவர்ந்திடும்
கோட்டை கொத்தளம் பாருங்கள்.

வெல்ல மண்டியைப் பார்த்திடலாம்
வியக்கும் பாலாற்றில் நடந்திடலாம்
உண்மைத் தொண்டு ஆற்றிடும்
மருத்துவ மனையைக் கண்டிடலாம்
இரத்தின கிரிக்குச் சென்றிடலாம்
இறைவன் முருகனை வணங்கிடலாம்
வீர சுதந்திரப் போரினிலே
வேலூரின் பங்கை அறிந்திடலாம்!

- சுதா மணிமேகலை.



காந்தி மகான்

காந்தி மகான் தெரியுமா?
கருணை முகம் மறக்குமா?
இந்திய நாட்டின் தந்தையாம்
இவரைப் போல எவருண்டு?

சத்தியம் அன்பு ஆயுதம்
சரித்திரம் படைத்த மாயமாம்!
புத்தரைப் போல வாழ்ந்தவர்
போரி டாமல் வென்றவர்!

அந்நியர் ஆட்சி கலங்கிட
அகிம்சை வழியில் முயன்றவர்
இந்தியா இருக்கும் வரையிலே
இவரின் பெயரும் இருந்திடும்!

செய் வதையே சொன்னவர்
சொன்ன தையே செய்தவர்
வையம் உள்ள வரையிலே
வாழ்வார் மக்கள் மனதிலே!

- பெரு. இளங்கம்பன்.

பிருந்தாவனக் கவியரங்கம்

பிருந்தாவனக் கவியரங்கம்



இட்டிலி

மலர்ந்த மல்லிகை போலிருக்கும்
மல்லிகை மென்மை அதிலிருக்கும்
சொல்லும் போதே சுகமிருக்கும்
சுவைத்துத் தின்னப் பசி எடுக்கும்!


மிளகாய்ப் பொடியும் சேர்ந்தாலே
மிக்க சுவையும் கூடிடுமாம்
அளவாய் சட்டினி சேர்த்தாலே
அதுவும் ருசியைக் கூட்டிடுமாம்.

அம்மா செய்திடும் இட்டிலியை
அளவே இன்றித் தின்றிடலாம்
அம்மாடி நாங்கள் ஓடிடுவோம்
அக்கா இட்டிலி செய்தாலே!

- ஆர். புனிதா.

குவாக் மாமா!

குவாக் குவாக் மாமா
குட் மார்னிங் மாமா
கவாத் நடை போட
கற்ற தெங்கே சொல்லும்?



ஒற்றுமையாய் வாழ
யாரே சொல்லித் தந்தார்?
சற்றும் சோம்பல் இன்றி
சத்தம் செய்வ தேனோ?

குட்டைக் காலைத் தூக்கி
குனிந்து குனிந்து ஓட
தட்டை மூக்கை விரிக்க
தந்திரம் என்ன செய்தீர்?

- தேனி. முருகேசன்.

கடிகாரம்

சுறுசுறுப் பான கடிகாரம்
சுவரில் நிற்கும் கடிகாரம்
கருத்தாய் காலம் காட்டிடுமாம்
கண்ணைக் கவரும் கடிகாரம்.



சோர்வு களைப்பு ஏதுமின்றி
சுற்றி ஓடும் கடிகாரம்
உறக்கம் எதுவும் கொள்ளாது
ஒழுங்காய் ஓடும் கடிகாரம்.

வீட்டில் உள்ளோர் எல்லோரும்
விரும்பிப் பார்க்கும் கடிகாரம்
கடமை தவறா நண்பனைப்போல்
கண்ணியம் மிக்க கடிகாரம்!

- கே.எஸ். கோகுலன்.





வானவில் தொட்டேன்!

சிறகை அணிந்தேன்
சிலிர்த்து எழுந்தேன்
பறவை போல
பாடிப் பறந்தேன்

வானில் விரைந்தேன்
வளைந்து மிதந்தேன்
வானவில் பிடித்தேன்
வளைத்து அணிந்தேன்

சந்திரனைத் தொட்டேன்
சொக்குப் பொடி போட்டேன்
இந்திரன் உதைத்தான்
உறக்கம் தெளிந்தேன்!

- ரெ. காயத்ரி.

தொட்டில்

சின்ன சின்னத் தொட்டில்
தம்பிப் பாப்பா தொட்டில்

அன்னை ஆட்டும் தொட்டில்
அழகு கொஞ்சும் தொட்டில்

யானை கிளி மலர்கள்
அழகுத் தோரண வரிசை
சேனை தேர்கள் எல்லாம்
செதுக்கி வைத்த தொட்டில்

பள பளக்கும் வண்ணம்
பார்க்கப் பார்க்க மயக்கும்
கள்ளம் இல்லாத தம்பி
கண் உறங்கும் தொட்டில்

- வி. பரமசிவம்.


எங்கள் பூனை

புலியைப் போல உருவம்
பதுங்கிப் பதுங்கிப் பாயும்
எலியைப் பிடிக்கத் தாவும்
எங்கள் வீட்டுப் பூனை

பாலைக் கண்டால் குடிக்கும்
பார்த்து விட்டால் விரையும்!
வாலை வளைத்து உயர்த்தும்
வந்து உடலைத் தேய்க்கும்

கையைக் காலை நக்கும்
கண்ணை உருட்டி விழிக்கும்
வாயை வாயைத் திறக்கும்
வண்ண டீ.வி. பார்க்கும்!

- எஸ். கணேஷ்.



சீருடை வேண்டாம் போ!

கமுதி மு. ரியாசுல்லா

ராஜு பள்ளிச் சீருடை அணிவதே கிடையாது. சேர்ந்த புதிதில் ஏதோ பேருக்கு ஒரு நாள் சீருடையை அணிந்து வந்தான். அதன் பிறகு அதைத் தொடக்கூட இல்லை. தான் ஐந்தாம் வகுப்புவரை படித்த பள்ளியின் சீருடையை அணிந்து கொண்டு மாணவர்களிடையே வித்தியாசமாகக் காட்சியளிப்பான்.


ராஜுவின் நண்பன் பாலு, "டேய், நீ பழைய பள்ளியின் சீருடையை அணிவதைக் காட்டிலும் நம்ம பள்ளியின் சீருடையையே அணிந்து வரலாமே" என்று கூறிய போது, "அடப்போடா, அப்படி செஞ்சா எனக்கும் மற்ற மாணவர்களுக்கும் வித்தியாசம் இல்லாமல் போயிடும்" என்று அலட்சியமாகப் பதில் சொன்னான் ராஜு. ஆசிரியரும் ராஜுவை வகுப்பிலிருந்து வெளியேற்றி, வெளியேற்றி அலுத்துப் போய் விட்டார்.

ராஜுவும், பாலுவும் ஒரே பள்ளியில் ஐந்தாம் வகுப்பு வரை படித்தார்கள். பின்னர் இருவரும் இந்த வருடம்தான் ஆறாம் வகுப்பில் சேர்ந்தார்கள்.

பாலு படித்த பள்ளியில்தான் பாலுவின் தம்பியும் மூன்றாம் வகுப்பு படிக்கிறான்.

பாலுவும், ராஜுவும் ஒரே தெருவில்தான் வசித்தார்கள். பாலு சைக்கிளில் செல்வான். ராஜு நடந்தே போவான். பாலு சைக்கிளில் கூப்பிட்டாலும் போகாமல் தெருவில் வரும் வாகனங்களைக் கூட கவனிக்காமல் அலட்சியமாக நடந்து செல்வான் ராஜு.

பாலு, போகும் வழியிலேயே தன் தம்பியின் பள்ளிக்குச் சென்று அவனை





யும் சைக்கிளில் ஏற்றிக் கொண்டு செல்வான். இது தினசரி நடப்பது.

அன்று ஒருநாள் மாலை, போக்குவரத்து நெரிசலின் ஊடே வழக்கம் போல் ராஜு கவனமில்லாமல் தெருவைக் கடக்கும் போது வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் ஒன்று அவனை இடித்து விட்டுச் சென்று விட்டது!

ராஜுவைச் சுற்றிக்கூட்டம் கூடியது. கூட்டத்திலிருந்து பலவாறாகப் பேச்சுக் குரல்கள் எழுந்தன.

''இந்தப் பையன் ஜாக்கிரதையாகத் தெருவைக் கடந்திருக்கலாம்'' என்றார் ஒருவர்.

''பையன் எந்த ஸ்கூல்னு கூடத் தெரியவில்லையே?'' இது மற்றவர்.

கூட்டத்திலிருந்த ஒருவர் ராஜுவின் சீருடையைப் பார்த்து, ''இந்தப் பள்ளி எதுன்னு எனக்குத் தெரியும்'' என்றார்.

ராஜு அணிந்திருந்தது வழக்கம் போலப் பழைய பள்ளிச்சீருடை.

இருவர் ராஜுவைத் தூக்கிச் சென்று அவனது பழைய பள்ளியில் சேர்த்தார்கள்.

ராஜுவைப் பற்றிய விவரங்களை தலைமை ஆசிரியர் பிற ஆசிரியர்களிடம் விசாரித்துக் கொண்டிருந்தார்.

அதற்குள் பாலு தன் தம்பியை அழைத்துச் செல்வதற்காக அங்கு வந்து சேர்ந்தான். ராஜுவைப் பார்த்த பாலு விவரமறிந்து ராஜுவை அவன் வீட்டிற்குக் கொண்டு செல்ல உதவி செய்தான்.

ராஜு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டான்.

இரண்டு நாட்களுக்குப் பின் மருத்துவமனையிலிருந்து ராஜு வீட்டுக்கு வந்தான்.

ராஜுவைப் பார்க்க பாலு போனான்.

''வாடா, பாலு'' - வரவேற்றான் ராஜு. ''ரொம்ப நன்றிடா பாலு. நீ மட்டும் அங்கே வரவில்லையென்றால் என் கதி என்ன ஆகியிருக்குமோ...?'' என்று உணர்ச்சி ததும்பக் கூறினான் ராஜு.

''போகட்டும். இப்போதாவது சீருடையின் அவசியத்தைப் புரிந்து கொண்டாயா?''

''நன்றாகவே புரிந்து கொண்டேன். அதுமட்டுமல்ல, தெருவைக் கடக்கும் போது ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்பதையும் புரிந்து கொண்டேன்'' என்றான் ராஜு.

''இப்பதாண்டா எனக்கு சந்தோஷமா இருக்கு'' என்று மகிழ்ச்சி ததும்பக் கூறினான் பாலு.



"ஆடு ஏன் 'மே'ன்னு கத்துது?"
"அதுக்கு 'ஜூன்'னு கத்தத் தெரியாதே!"

– சிவ. சீனிவாசன்.



துருக்கியர்கள் 16-ஆம் நூற்றாண்டு வரை குதிரை வால்களைக் கொடிகளாகப் பயன்படுத்தினர்.


கொடிச் செய்திகள்


ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்டு மாதம் 15-ஆம் நாள் இந்திய சுதந்திர நாளில் கொடி ஏற்றுவார்கள். அப்போது எல்லோரும் எழுந்து நின்று அதற்கு மரியாதை செய்வோம். குடியரசு நாள் போன்ற விழாக்களைக் கொடி ஏற்றியும், கொடிகளால் தோரணங்கள் கட்டியும் நாம் கொண்டாடுகிறோம்.

ஒரு நாட்டு மக்களின் உயர்ந்த பண்புகள், குறிக்கோள்கள் இவற்றின் சின்னமாக விளங்குவது அந்நாட்டின் கொடியாகும். எனவே தேசிய விழாக்களின் போது கொடி ஏற்றியும் அதை வணங்கியும் சிறப்பிக்கிறோம்.

கொடி ஏந்தும் வழக்கம் பண்டைக் காலத்திலிருந்தே இருந்து வந்திருக்கிறது. 5,000 ஆண்டுகளுக்கு முன்னரே, தமிழ் மன்னர்கள் துணியாலும், பட்டாலும் செய்த கொடிகளைப் பயன்படுத்தினர். சேரர் கொடியில் வில், சோழர் கொடியில் புலி, பாண்டியர் கொடியில் மீன் ஆகிய சின்னங்கள் பொறிக்கப்பட்டிருந்தன.

மேனாடுகளில் ஆதியில் கொடிகள் துணியால் செய்யப்படவில்லை. ஈட்டி அல்லது கழி ஒன்றின் நுனியில் போர்ச் சின்னங்களைக் கட்டை, கல், உலோகங்கள் இவற்றால் செய்து அதைக் கொடியாகக் கொண்டனர். கி.பி. 300க்குப் பிறகுதான் கொடியைத் துணியிலும், பட்டிலும் செய்யும் வழக்கம் அங்கு உண்டாயிற்று. துருக்கியர்கள் 16-ஆம் நூற்றாண்டு





வரை குதிரை வால்களைக் கொடிகளாகப் பயன்படுத்தினர்.

இன்று ஒவ்வொரு நாட்டிற்கும் தனிக் கொடி உள்ளது. உலக நாடுகளின் கூட்டமைப்பான ஐக்கிய நாடுகள் சபைக்கும் அதன் கிளைகளுக்கும் தனித் தனிக் கொடி உண்டு. நாடுகளுக்கு மட்டுமின்றி, செஞ்சிலுவைச் சங்கம், சாரணர் இயக்கம் போன்ற அமைப்புகளுக்கும் கொடிகள் உள்ளன. இவை தவிர இன்று அரசியல் கட்சிகள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்களும் தமக்கே உரிய கொடிகளைக் கொண்டுள்ளன.

ஒவ்வொரு நாட்டின் கொடியும் தம் அளவிலும் வண்ணத்திலும் மாறுபடும். உதாரணமாக இந்திய தேசியக் கொடி காவி, வெள்ளை, பச்சை ஆகிய மூவண்ணப் பட்டைகளை உடையது. இப் பட்டைகள் சம அகலத்தில் இருக்கும். நடுவிலுள்ள வெண்ணிறப் பகுதியில் நீலநிறத்தில் அசோக சக்கரம் விளங்குகிறது. வீரம், தியாகம் இவற்றைக் காவி நிறம் குறிக்கும். உண்மையையும் சாந்தியையும் வெண்மை நிறம் காட்டும். நம்பிக்கை, நற்பண்பு இவற்றைப் பச்சை நிறம் குறிக்கிறது. நடுவில் இருக்கும் அசோக சக்கரமாகிய ''தரும சக்கரம்'' சத்தியம், தருமம், முன்னேற்றம் ஆகியவற்றைக் குறிக்கிறது. இக் கொடியின் நீளம் மூன்று பங்கு என்றால் அகலம் இரண்டு பங்காக இருக்க வேண்டும்.



இந்திய ராணுவத்திலுள்ள தரைப் படை, விமானப் படை, கடற்படை ஆகியவற்றிற்கும் தனித்தனியே கொடிகள் உள்ளன. கொடி வணக்கம் ராணுவத்தினரின் அன்றாடப் பணிகளில் ஒன்று.

கொடிகளை எப்படித் தயாரிக்க வேண்டும், எப்பொழுது எப்படிப் பறக்க விட வேண்டும், அதை எவ்வாறு வணங்க வேண்டும் என்பது பற்றி ஒவ்வொரு நாட்டிலும் விரிவான சட்டதிட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இச் சட்ட திட்டங்களை எல்லோரும் பின்பற்றி நடக்க வேண்டும். பொதுவாக அரசாங்கக் கட்டடங்களில் காலையில் கொடி ஏற்றப்பட்டு, சூரியன் மறைவதற்கு முன்பு இறக்கப்படும். தலைவர்கள் எவரேனும் மறைந்து விட்டால் துக்கத்திற்கு அறிகுறியாகக் கொடியை அரைக் கம்ப அளவில் பறக்க விடுவது வழக்கம்.

– ஓவியக் கவிஞன்

மாணவர்களின் ஏளனப் பார்வைக்கு இலக்காகி, தலை குனிந்து நின்றான் கணேசன். அவன் விழிகளில் இருந்து கண்ணீர் அருவி பெருகியது.

அவனை உற்றுப் பார்த்தார் வகுப்பாசிரியர் பிரம்ம ஞானம். அவன் மேல் கோபம் ஒருபுறம் ஏற்பட்டாலும், இவனை எப்படித் திருத்துவது என்று மனத்திற்குள் ஆராய்ந்தார்.

வகுப்பில் உள்ள எல்லா மாணவர்களும், கொடுத்திருந்த வீட்டுப் பாடங்களைச் செம்மையாய்ச் செய்து வந்திருக்க, இவன் மட்டும் விதி விலக்காய்....!

நேற்றும் இப்படித்தான்.

எல்லா மாணவர்களும் கட்டுரை நோட்டு வாங்கி வந்திருக்க, கணேசன் மட்டும் வாங்காமல் வந்திருந்தான்.

''ஏன் கட்டுரை நோட்டு வாங்கி வர

மறந்துட்டேன் சார்!



வில்லை, எல்லோருக்கும் ஒண்ணாத்தானே சொன்னேன்?'' உண்மையாகவே புரியாமல் கேட்டார் ஆசிரியர்.

தலை குனிந்து மௌனமாய் நின்றான் கணேசன். கட்டுரை நோட்டு வாங்கித் தர உங்க அப்பாவுக்கு வசதி இல்லையென்றால் என்னிடம் சொல். நான் வாங்கித் தரேன். அதை விட்டு இப்படித் திமிர் பிடித்தவனாய் பேசாமல் இருந்தால் என்னடா அர்த்தம்?''


அதட்டினார் ஆசிரியர்.

''சார் நீங்க கட்டுரை நோட்டு வாங்கி வரச் சொன்னதை நான் மறந்துட்டேன் சார்!''

அழுகையினூடே கூறினான் கணேசன்.

''அப்படியா? வகுப்பு வாசல்ல போய் முட்டிக்கால் போடு... இனிமேல் ஞாபக மறதியெல்லாம் வராது?''

ஆசிரியர் கொடுத்த தண்டனையை ஏற்றுக் கொண்டு வகுப்பு வாசலில் பள்ளி முடியும் வரை முட்டிக் காலிட்டு நின்றான் கணேசன்.



இன்றும் அதே கதை.

ஆனால் இன்று ஆசிரியர் உடனே தண்டனை தரவில்லை. இவனிடம் என்னவோ குறை இருக்கிறது. அதை அறிய வேண்டும் என்று எண்ணினார். அன்புடன் கேட்டார்.

''கணேசா, ஏன் வீட்டுப் பாடம் செய்யலே?''

''சார் எந்தப் பாடத்துல இருந்து வீட்டுப் பாடம் கொடுத்தீங்கன்னு எனக்கு மறந்துடுத்து சார்......''

சற்று அமைதி வயப்பட்ட ஆசிரியர். ''கணேசா வகுப்பில் நடத்தும் பாடங்கள் மாணவர்கள் மனத்தில் பதிய வேண்டும் என்பதற்காகத்தான். வீட்டுப் பாடம் கொடுப்பது. பாடத்தை ஆசிரியர் சொல்லிக் கேட்ட பின், எழுதிப் பார்க்கும் போது அவை ஆழமாய் மனத்தில்

அரு. ஐ. சிவபாரதி

பதியும். நீ மறதியினால் வீட்டுப் பாடம் போடாமல் வருவதால் உனக்கு எவ்வளவு பெரிய இழப்பு என்பதை உணர வேண்டும். இன்றைக்கு உன் மறதியால் படிப்பு கெடுகிறது. இதுவே தொடர்ந்தால் இந்த மறதியே உன் வாழ்க்கையைக் கெடுத்து விடும்! படிக்கும் கடமையில் இருந்து தவறினால், பெற்றோர்க்கும், ஆசிரியருக்கும், ஏன், நம் நாட்டிற்குமே கூட நீ செய்ய வேண்டிய கடமையில் இருந்து தவறி விடுவாய். அதற்கு உன் மறதி ஒரு காரணமாக இருக்க அனுமதிக்கக் கூடாது. மாலையில் என் வீட்டிற்கு வா! உன் மறதிக்கு நான் மருந்து தரேன்.''

மாலையில் வீட்டிற்கு வந்த கணேசனை அன்புடன் அழைத்தார் ஆசிரியர் பிரம்ம ஞானம்.

''வா கணேசா... உட்கார்....''

ஆசிரியர் தம் பையில் இருந்து சிறிய கல் ஒன்றை எடுத்தார்.



"ராமு, பசு பால் தரும். சரியா? தவறா?"

"தவறு சார்! அது தராது. நாமதான் கறந்துக்கணும்!"

- எஸ். தட்சணாமூர்த்தி.

"கணேசா இந்தக் கல்லை உன் சட்டைப் பையில் போட்டுக் கொள்...."

புரியாமல் கல்லை வாங்கித் தன் சட்டைப் பைக்குள் போட்டுக் கொண்டான் கணேசன்.

"கணேசா பார்வைக்குத்தான் உன் பையில் கிடப்பது கல்.... ஆனால் அது தான் உன் ஞாபக மறதிக்கு மருந்து. இனி உன் அன்றாட வேலைகளை ஒரு சிறு காகிதத்தில் குறித்து உன் சட்டைப் பையில் வைத்துக் கொள். நீ பையில் கையை வைக்கும் போதெல்லாம் இந்தக் கல் உன் கையில் தட்டுப்படும். உடனேயே காகிதமும் உன் நினைவுக்கு வரும்.

உடனே காகிதத்தை எடுத்து நீ செய்ய வேண்டிய வேலைகளைத் தவறாமல் செய்யலாம்... இதுதான் உன் மறதிக்கு மருந்து...."

ஆசிரியருக்கு நன்றி கூறிவிட்டுக் கிளம்பினான் கணேசன். அவர் கொடுத்த மருந்துக்கு நல்ல பலனும் கிடைத்தது. தன் வேலைகளை இப்போதெல்லாம் கணேசன் சரியாக நேரம் தவறாது செய்ததால், நன்கு படிக்கும் மாணவர்களுள் ஒருவனாகி விட்டான். கணேசனுக்கு மறதி என்பது இப்பொழுதெல்லாம் வருவதே இல்லை. தினமும் தன் ஆசிரியருக்கு மனத்திற்குள் நன்றி சொல்லிக் கொள்கிறான் கணேசன்.

படிபடி பாப்பா படிபடி!



படிபடி பாப்பா படிபடி
அதுவே வாழ்வின் ஏணிப்படி
துதிதுதி பாப்பா துதிதுதி
தமிழைப் போற்றித் துதி! துதி!

அறிவைத் திறக்கும் சாவி
அம்பாள் சரஸ்வதி தேவி
அறிந்து கொள்ளடி பாப்பா!
அறிவை வளர்த்திடு பாப்பா!

அமிழ்து எப்படி பாப்பா?
தென்றல் எப்படி பாப்பா?
தமிழும் அப்படி பாப்பா
தேடிப் படித்திடு பாப்பா.

கல்வியைப் போலொரு தெய்வம்
கண்ட தில்லை மெய்யில்
சொல்லியா புரிய வேண்டும்?
கல்வி வெல்லமடி பாப்பா.

– கதிரேசன்.



பீனிக்ஸ் பறவை

"மரணம் ஏற்படினும் பீனிக்ஸ் பறவை போல் மீண்டும் உயிர்த்தெழுவேன்...'' என்று கவிஞர்கள் எழுதுவதை நீங்கள் படித்திருப்பீர்கள்! பீனிக்ஸ் என்று உண்மையில் ஒரு பறவை இருந்ததா?

பீனிக்ஸ் இப்போது இல்லை. ஆனால் ஒரு காலத்தில் இப்படியொரு பறவை வாழ்ந்ததாக எகிப்திய மற்றும் அராபிய நாட்டிலும் புராணக் கதைகள் உள்ளன. இந்தக் கதைகள் சுவையானவை.


பீனிக்ஸ் பறவை அளவில் மிகப் பெரியது. தங்க நிறத்திலும் சிவப்பு நிறத்திலும் இதன் இறக்கைகள் இருந்தன. இதன் ஆயுள் நூற்றுக்கணக்கான ஆண்டுகள். இந்தப் பறவையின் சிறப்பு இது மட்டுமல்ல. தனக்கு மரணம் நெருங்குவதை இது முன் கூட்டியே அறிந்து கொள்ளுமாம்! அப்படி ஒரு சக்தி இதற்கு இருந்தது! தனது மரணத்தை அறிந்ததும் மரங்களில் வாசனைமிக்க மணம் வீசும் கூடு ஒன்றை இது கட்டும். பின்னர் இனிமையான சோகம் இழையும் ஒரு பாடலைப் பாடிக் கொண்டே தனது இறக்கைகளால் தனது கூட்டை விசிறும். இந்தக் காற்றின் சூட்டினால் கூடு தீப் பற்றிக் கொள்ளும்! பீனிக்ஸ் பறவை தான் மூட்டிய தீயிலே விழுந்து உயிரைப் போக்கிக் கொள்ளும். பின்பு அந்த தீச்சுவாலையிலிருந்து புதிய பீனிக்ஸ் பறவை தோன்றும். இப்படி ஒரு கதை.

இன்னுமொரு கதையும் உண்டு. பீனிக்ஸ் பறவை சூரியனை நோக்கி உயர உயரச் சென்று கொண்டே இருக்கும். பின்னர் வெப்பம் தாளாமல் எரிந்து சாம்பலாகி விடும். அந்தச் சாம்பலிலிருந்து 500 ஆண்டுகளுக்குப் பின்பு புதிய பறவை உருவாகும். இக்கதையை புராண கால எழுத்தாளர்கள் எழுதி வைத்துள்ளனர்.

பழங்கால எகிப்தியச் சின்னங்களில் உதயசூரியனின் சின்னமாகவும், மரணத்திற்குப் பின்னுள்ள வாழ்க்கையைக் குறிக்கும் சின்னமாகவும் பீனிக்ஸ் சித்தரிக்கப்பட்டுள்ளது.

மனிதர்கள் மரணத்தை வெல்வதற்கான மாற்றைக் கண்டுபிடிப்பதிலும், ரசவாதம், அதாவது ஈயம் முதலான உலோகங்களைத் தங்கமாக்கும் கலையிலும் ஈடுபட்ட ஆய்வாளர்கள் பீனிக்ஸ் பறவையைத் தங்கள் சின்னமாக வைத்துக் கொண்டார்கள்!

- எம். ஆர். எல்.



"அருண், பள்ளிக்கு நேரமாச்சு பார் டிபன் பாக்சை எடுத்துக்கோ. கிளம்பு" என்று அம்மாவின் குரல் உசுப்பியதும், அவசரமாய்த் தன் ஸ்கூல் பேக்கை எடுத்துக் கொண்டான்.

"டிபன் பாக்ஸ் எடுத்து வைச்சின்டியா?" - மீண்டும் அம்மாவின் குரல் ஞாபகப்படுத்தியது.

சமையலறை மேடையிலிருந்து டிபன் பாக்ஸை எடுத்துப் பைக்குள் வைக்கப் போனான் அருண். அடாடா! டிபன் பாக்ஸ் கை தவறிக் கீழே விழுந்து அதிலிருந்த தக்காளி சாதமும், உருளை சிப்ஸும் நாலாபுறமும் சிதறின!

"உனக்கு எதுலேயும் அலட்சியம் தான். எதை எடுத்தாலும் கீழே கொட்டி, மேலே கொட்டி... ப்ச், உனக்குப் பிடிக்குமேன்னு காலையிலே இவ்வளவு பரபரப்பிலும் தக்காளி சாதம் பண்ணி வைச்சேன்..." - அம்மா திட்டிக் கொண்டே போக அருண் திகைத்து நின்றான்.

"நான் என்னம்மா செய்வேன்? கை தவறி விழுந்துடுச்சு" என்றான் திட்டு வாங்கிய அவமானத்தில் முகம் சிவக்க.

"கவனமா செஞ்சா ஏன் கை தவறப் போகுது? எதிலுமே உனக்கு அக்கறை இல்லே. போன வாரம் செருப்பை வாசல்படியிலேயே போட்டே. என்ன ஆச்சு? நாய் கௌவிக் கிட்டுப் போச்சு. புது செருப்பு வாங்கும்படி ஆச்சு! நீ எப்பத்தான் மாறப் போறியோ? சரி, சரி, டிபன் பாக்சை எடு, நாலு இட்லியை வைச்சுத் தரேன். அது தான் உனக்கு இன்னிக்கு மதிய லஞ்ச்" என்று கடுகடுத்தாள்.

உன்னால் தான் தோற்றோம்!



அருண் வருத்தப் பட்டபடியே ஸ்கூலுக்குக் கிளம்பினான்.

"நான் என்ன, வேணும்னா செய்தேன்? தக்காளி சாதம் கீழே கொட்டினால் என்ன? என்ன பெரிய நஷ்டம் இதுனால? இந்த அம்மாவே இப்படித்தான்! எப்பப் பாரு திட்டும், வசவும் தான்."

மனசுக்குள் புலம்பியபடி ஸ்கூலை அடைந்தான்.

அருண் எட்டாம் வகுப்புப் படிக்கிறான். இன்று அவன் பள்ளிக்கும், மற்றொரு பள்ளிக்கும் கிரிக்கெட் போட்டி. அருணும் அவன் பள்ளி டீமில் இருந்தான்.



காலை பத்து மணிக்கு ஆட்டம் ஆரம்பமானது.

இவர்கள் அணி நன்கு விளையாடியும் கவனக்குறைவு காரணமாக ஜெயிக்க முடியவில்லை. எதிரணியில் இருந்த ஒரு பையன் நன்றாக விளையாடி நிறைய ரன் எடுத்ததும் முக்கிய காரணம்.

விளையாட்டுத் துறை ஆசிரியர் அருணை அனைவர் முன்னிலையிலும் அழைத்தார்.

''அருண், எளிதாய் வந்த ஒரு 'காட்ச்'சை கவனக்குறைவா இருந்து நீ பிடிக்க விட்டதுனாலேதானே எதிரணிப் பையன் நிறைய ரன் எடுத்தான்? விளையாடும் போது உன் கவனம் வேறு எங்கே இருந்தது? உன்னாலேதான் நாம் தோற்றோம்! அடுத்த 'மாட்ச்'சுக்கு நீ கிடையாது.''

அனைவர் மத்தியிலும் கோபமாய் ஆசிரியர் கண்டித்ததும் அவமானத்தில் முகம் குன்றிப் போனது அருணுக்கு. தலையைக் குனிந்தபடி நின்றான்.

தான் இருபத்தைந்து ரன் எடுத்ததை ஆசிரியர் பாராட்டாமல் ஒரே ஒரு காட்ச் பிடிக்காததைக் கண்டித்தது அவனுக்குப் பிடிக்கவில்லை,

மாலை வீட்டுக்குத் திரும்பிய பின்னும் அவன் மனம் சமாதானம் ஆகவில்லை.

கிருஷ்ணா

''என்னடா, முகம் வாடியிருக்கு?'' என்று கேட்ட அப்பாவிடம் தன் ஆற்றாமையைக் கொட்டித் தீர்த்தான்.

அவனையே ஒரு நிமிடம் பார்த்தபடி யோசித்தார் தந்தை.

''அருண், நல்ல தண்ணி குளம் வரைக்கும் போயிட்டு வரலாம் வா'' என்று அழைத்ததும் மறக்காது கிளம்பினான்.

குளத்தங்கரை அருணுக்குப் பிடித்த இடம். அங்கு பெரிய ஆலமரம் இருக்கும். ஐயனார் சிலையும் குதிரைகளும் பொம்மைகளாய் நிற்பதைப் பார்க்க அவனுக்கு மிகவும் பிடிக்கும். கலர், கலராய் வர்ணம் பூசியபடி நிற்கும் குதிரைகள் மேல் ஏற ஆசை உண்டு. ஆனால், 'சாமி சிலை அது, ஏறக் கூடாது' என்று அம்மா சொன்னதால் இதுவரை ஏற முயற்சித்ததில்லை.

குளத்தங்கரை இவன் வீட்டிலிருந்து ஐந்து நிமிட நடைதான். ஆலமரத்தின் இலைகள் சலசலக்க காற்று இதமாய் உடலை வருடிக் கொடுத்தது.

''இப்படி உட்கார்'' என்று அப்பா குளத்தின் படிக்கட்டில் அமர்ந்தார்.

''எவ்வளவு பெரிய ஆலமரம் பார்த்தியா? ஆல விருட்சம் இது'' என்றார் அவனிடம்.

கிளைகளை நாலாபுறமும் பரப்பி, மரத்தின் அடிப்பாகம் அருணைப் போல் ஆறேழு சிறுவர்கள் கைகோர்த்து சுற்றி நின்றால்தான் பிடிக்க முடியும் போன்ற அளவில் இருந்தது.

''ஆமாம்பா! பெரிய மரம்.''

''இவ்வளவு பெரிய விருட்சம், எதுலேயிருந்து தோன்றியது தெரியுமா?''

''சொல்லுங்கப்பா?''

''சின்ன விதையிலிருந்துதான். விதை முளைத்து செடியாகி, மரமாகி இப்போ இப்படிப் பெரிசா வளர்ந்திருக்கு.''

''அப்படியா?''

''எந்த ஒன்றையும் சின்ன விஷயம் தானே என்று அலட்சியப்படுத்தினால் அது ஆலமரமாகி இப்படித்தான் பிரும்மாண்டமாக வளர்ந்து விடும். இது ஆற்றங்கரை ஆலமரமாக இருப்பதால், எல்லோருக்கும் பயனளிக்கிறது. ஆனால் இதே ஆலமரம், வீட்டுக் கூரையில் வளர்ந்திருந்தால் வீடு என்ன கதி? நீ கவனக்குறைவாக இருந்து அலட்சியப் படுத்தும் சின்னச் சின்னக் குறைபாடுகள் இப்போ வீட்டுக் கூரை ஆலமரமாக வளர்ந்து உன்னையே பாதிக்கிறது. சிறிய விஷயங்கள்தானேன்னு எதுலேயும் அலட்சியமா இருக்கக் கூடாது. இன்னைக்குச் சின்ன விஷயமா இருக்கறதுதான் நாளைக்கு வீட்டுக் கூரை விருட்சமா மாறும். புரியுதா?''

தலையாட்டினான் அருண். ஆனாலும் முழுதும் புரியவில்லைதான்!

அருண் அப்பாவையும், ஆலமரத்தையும் மாறி, மாறிப் பார்த்தான். அவனுக்குள் ஒரு தெளிவு படர்வதை உணர்ந்தான்.

''சரி வா, வீட்டுக்குப் போகலாம். இருட்ட ஆரம்பிச்சுடுச்சு. நம்மைக் காணோமேன்னு அம்மா கவலைப் படுவா'' என்று எழுந்தார் அப்பா.

இருவரும் வீட்டை அடைந்தனர்.

''அருண், ஸ்கூலிலிருந்து வந்து எதுவுமே சாப்பிடாம போயிட்டியே அப்பாவோட'' என்று பரிவுடன் கூப்பிட்ட அம்மாவைப் பார்த்தான்.


''இருங்கம்மா, இந்த செருப்பை அதனோட இடத்துல எடுத்து வைச்சுட்டு, கை, காலை அலம்பிண்டு வந்துடறேன்'' என்று சொன்ன அருணை பிரமிப்புடனும் மகிழ்ச்சியுடனும் பார்த்தனர் அவன் பெற்றோர்.




''பரீட்சைக்குப் போகிற எல்லா மாணவர்களுமே அந்த பிச்சைக்காரனைக் கண்டு பயப்படறாங்களே, ஏன்?''

''அவன், 'கோவிந்தா... கோவிந்தா'ன்னுல்ல சொல்லி பிச்சை கேட்பான்...!''

- சீர்காழி வி. ரேவதி.




காட்டுக்கு ராஜா யார்?
படமும் கருத்தும்: மோகனரூபன் .
காட்டுக்கு ராஜா யார்? புலியா அல்லது சிங்கமா? இரண்டும் நேருக்குநேர் சண்டையிட்டுக் கொண்டால் எது ஜெயிக்கும்? இது ஒரு குழந்தைத்தன-மான கேள்வி என்கிறீர்களா? இல்லவே இல்லை! இந்திய வனவிலங்கு ஆராய்ச்சியாளர்-கள்தான் இந்த கேள்வியைக் கேட்கிறார்கள்! ஏன் தெரியுமா?
காரணம், உலகில் சிங்கம், புலி இரண்டும் வாழும் ஒரேநாடு இந்தியாதான்!
ஏய்! இந்த காட்டுக்கு ராஜா யார்?
இந்தியாவில் சிங்கங்கள் காணப்படும் ஒரே இடம் குஜராத்தில் உள்ள 'கிர்' சரணாலயம்தான்.
ஆனால், புலிகள் நாடுமுழுதும் பலகாடுகளில் உள்ளன.
'கிர் சரணாலயம்'
(குஜராத்)
பிரச்சினை இதுதான். வருங்காலத்-தில் இவற்றின் எண்ணிக்கை பெருகி-னால் இரண்டும் ஒரே காட்டில் வாழ நேரும். அப்படி நேரிட்டால் இரண்டில் ஒன்றுதான் உயிர்வாழ முடியுமாம்!



'தன்பார் பிரான்டைர்' என்ற ஆங்கிலேயர் மத்திய இந்தியக் காடுகளில் 21 ஆண்டுகள் காட்டிலாகா அதிகாரியாக பணிபுரிந்தவர். இவர் என்ன சொல்கிறார் கேளுங்கள்
பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் மத்திய இந்தியா முழுதும் நிறைய சிங்கங்கள் இருந்தன. இந்த சிங்கங்கள் அழியக் காரணமே புலிகள்தான்! ஹா ஹா ஹ!
தன்பாரின் கூற்றுப்படி ஒரே காட்டில் ஒரு புலியும், சிங்கமும் வாழ முடியாதாம். இரண்டும் ஒன்றுக்கொன்று சண்டையிடும் என்கிறார்.
என்னைக் கேட்டால் புலிதான் பலமுள்ள மிருகம் என்பேன் காட்டில் சிங்கத்தை சுதந்திர-மாக புலி நடமாட விடாது.
புலிகளின் உண்மையான தாயகம் 'சைபீரியா' (வடகிழக்கு ரஷ்யா). அங்-கிருந்து மங்கோலியா, சீனா வழியாக புலிகள் இந்தியாவுக்குள் நுழைந்தன. இந்தியாவில் இவை சிங்கங்களுடன் சண்டையிட்டு அவற்றை மேற்கு நோக்கி விரட்டியதாக ஐதீகம்.
OUT
IN
ஆனால் புலி எப்போதுமே தனியாய் வாழும் விலங்கு. சிங்கங்களோ ஒரு கூட்டமாக வாழ்பவை. ஆகவே ஒரு தனிப் போய் ஒரு சிங்கக்கூட்டத்துடன் மோதி அவை விரட்ட முடியுமா? ஹூஹூம்! இந்தக் கருத்தே தவறு என்கிறார்கள் சிலர்


உலகின் பலநாடுகளின் பண்பாடுகளில் புலி, சிங்கம் இரண்டுமே இடம் பிடித்துள்ளன.

ஒரு ஐரோப்பிய சின்னம்




ஸ்ரீலங்காவின் தேசியக் கொடி.






எகிப்தில் உள்ள சிங்கமுக சிலை (ஸ்பிங்ஸ்)




துரோணரின் மகன் அசுவத்தாமனின் கொடி.

சோழர் கால புலி நாணயம்



சிங்கங்கள் ஒருகாலத்தில் கிரீஸ், சிரியா, மெசபட்டோமியா, (ஈராக்), பெர்சியா (ஈரான்) போன்ற நாடுகளில் வாழ்ந்திருக்கின்றன. மகா அலெக்சாண்டரின் கிரேக்கப் படைகள் இந்தியாவை விட்டு திரும்பும்போது வழியெல்லாம் சிங்கங்களால் தாக்கப்பட்டதாக சரித்திரம் கூறுகிறது.

கி.மு. 323.




ஆனால் இன்றோ:

ஆசிய நாடுகளில் இந்தியா நீங்கலாக வேறு எங்குமே சிங்க இனம் இல்லை. மாறிவரும் தட்பவெப்பநிலை, போர், மன்னர்களின் வேட்டை இவற்றால் சிங்கங்கள் அழிந்து விட்டன. எகிப்து நாட்டில் கூட முன்பிருந்த சிங்கம் பிறகு ஆப்பிரிக்க சவானாபுல்வெளிகளுக்கு இடம்பெயர்ந்து விட்டது.


சிங்கங்கள் முன்புவாழ்ந்த எகிப்திலோ, மேற்கு ஆசியாவிலோ புலிகளே கிடையாது! ஆகவே புலிகளால்தான் இந்தியாவில் சிங்கஇனம் அழிந்ததாகக் கூறுவது தவறு என்கிறார்கள் பலர்.
எகிப்து
ஒரு இரகசியம் தெரியுமா? ஆப்பிரிக்காவில் பெருகிவந்த சகாரா பாலைவனம் தான் மேன்மை தங்கிய சிங்கராஜாவை சவானா புல்வெளிகளுக்கு துரத்தி விட்டது!
இந்தியாவின் குவாலியர் மகாராஜா "சிந்தியா" ஒருமுறை ஆப்பிரிக்காவிலிருந்து சிங்கக்குட்டிகளைக் கொணர்ந்தார். இவை நன்கு வளர்ந்த பிறகு குவாலியரில் உள்ள 'மோகனா' காட்டில் இவற்றை விட்டுவிட்டார். இந்த ஆப்பிரிக்கச் சிங்கங்களை புலிகள் சிதறடித்து விட்டதாகச் சொல்லப்படுகிறது.
குவாலியர் சமஸ்தானம்
மத்தியப் பிரதேசம்
வராதீங்க! பிளீஸ்!
தற்போது குஜராத்தில் உள்ள 'கிர்'சரணாலயத்தில் சிங்கங்கள் அதிகமாகி விட்டதால் அருகில் உள்ள வேறு காடுகளில் இவற்றை அறிமுகம் செய்யப் போகிறார்கள். அப்படிச் செய்தால் அங்குள்ள புலிகளுடன் மோதல் வரலாம். வந்தால் இரண்டில் ஏதோ ஒன்று அழியுமோ என உயிரியல் நிபுணர்கள் அஞ்சுகிறார்கள்.
நாங்க சண்டை போட மாட்டோம்! பயப்படாதீங்க!
இதுவரை சிங்கமும், புலியும் காட்டில் சண்டையிட்டு கொண்டதற்கு உறுதியான ஆதாரங்கள் எதுவுமில்லை. காரணம் இரண்டும் ஒரே நாட்டில் ஒரே காட்டில் மிக அபூர்வமாகத்தான் சேர்ந்து வாழ்ந்தன.

ஆனால், அரசகுடும்பத்தினரின் மகிழ்ச்சிக்காக பல சிங்கம்,புலி மோதல்-கள் நடந்திருக்கின்றன.


● ஆழ்வார் மகாராஜா நடத்திய ஒரு சண்டையில் புலி, சிங்கத்துடன் மோத மறுத்துவிட்டது!



● 1933ல் அலிப்பூர் மிருகக்காட்சிசாலையில் நடந்த ஒரு மோதலில் புலிதான் வென்றது!




● ஒரு குஜராத்திய இளவரசர் நடத்திய சண்டையில் புலிக்கு படுதோல்வி!



● 'கிங் சாலமன் மைன்ஸ்' என்ற ஆங்கிலப் படத்திற்காக நிஜமாகவே ஒரு சிங்கம், புலி மோதலை நடத்தி-னார்கள். பாவம் புலி! சண்டையின் முடிவில் அது இறந்து விட்டது!


இது மாதிரி சண்டைகளை அநாகரிகம் என்று கருதி அரசாங்கங்கள் தடைசெய்யப் போகின்றன. ஆனால் இயற்கையாக காட்டில் சண்டைகள் நடந்தால் அதை யாரால் தடுக்க முடியும்?

உண்மையில் சிங்கம், புலி இரண்டுமே சாதுவானவை. சிங்கம் யாரோடும் வலுச்சண்டைக்குப் போவதில்லை! புலியும் அப்படித்தான். சீண்டிவிட்டாலே தவிர புலி யாரையும் வீணாகத்தாக்காது. மனிதர்களின் குரூரமான குணத்தால்தான் இவைகளுக்குள் சண்டை நடந்திருக்கிறது.




புலிகள் ஒவ்வொன்றும் காட்டில் தங்களுக்கென்றே ஒரு தனி நிலப்பரப்பை வைத்து ஆள்வதாக நம்பப்பட்டாலும் அது இன்னும் நிரூபிக்கப்படவில்லை. ஆகவே இந்தியாவில் சிங்கங்களின் எதிர்காலம் கம்பீரமாகவே உள்ளது.

அண்மையில் கிர் காட்டில் இருந்து 3 சிங்கங்கள் சோதனைக்காக உத்தரபிரதேசத்தில் உள்ள 'சாக்கியா' காட்டில் விடப்பட்டன. அங்கே அவை குட்டி ஈன்று பெருகி விட்டதாகத் தெரிகிறது



இந்தியாவின் கலை, இலக்கியம், பண்பாடு புராணங்களில் எல்லாம் புலியும், சிங்கமும் இடம்பிடித்து உள்ளன. பரதன் சிங்கக் குட்டிகளுடன் விளையாடிய கதை உங்களுக்குத் தெரிந்திருக்குமே! அசோகரின் சாரநாத் சிம்மத்தூணைப் பற்றி யாருக்குத்தான் தெரியாது?



சாரநாத் சிம்மத்தூண்.



இந்தியாவில் புலியும், சிங்கமும் ஏறக்குறைய ஒரே தட்பவெப்ப நிலையில் வாழ்பவை. இரண்டுக்குமே பொதுவான உணவு, பழக்கவழக்கம் உள்ளன. வருங்கால இந்தியாவை இந்த காட்டுராஜாக்களில் ஒருவர்தான் ஆளப் போகிறாரா? யார் அவர்?

யார் கண்டது? ஒருவேளை இரண்டு பேரும் அமைதியாகக் கூட காட்டை ஆளலாம்!



காபி விஷமா?


எம்.கே. முத்துவேல், சேலம் - 10.

? நம் இதயத்தின் கனம் எவ்வளவு, டாக்டர்?

! ஒரு சராசரி மனிதனுக்கு இதயத் தின் கனம் 350 கிராம்.


ஆர். சத்தியன், அகரக்கடம்பனூர்.

? நம் கை விரல்களில் பெருவிரல் நகத்தில் அரை வட்டமாக வெள்ளை நிறத்தில் தெரிகிறதே! இதற்குக் கார ணம் என்ன?



! பெரு விரல் நகத்தில் மட்டுமல்ல, எல்லா விரல் நகங்களிலும் அரைவட்டமாக வெள்ளை நிறத்தில் ஒரு 'பிறை' தெரியும். அதற்குக் காரணம் இருக்கிறது, சத்தியன். நகத்தின் மற்ற பாகம் விரலோடு ஒட்டியிருக்கிறது. இதனால் விரலில் செல்லும் ரத்த ஓட்டம் அப்பகுதி நகத் தில் தெரிவதால் சிவப்பாகத் தோன்றுகிறது. நீங்கள் குறிப்பிடுகிற பிறை வடிவ நகம் விரலோடு ஒட்டாமல் சற்றே மேல் எழும்பி இருக்கிறது. இதன் காரணமாக விரலில் செல்லும் ரத்த ஓட்டம் அந்தப் பகுதியில் தெரிவதில்லை; வெறும் நகம் மட்டும் பிறை வடிவில் வெள்ளையாகத் தெரிகிறது.





எல் மணிகண்டன், புதுக்கோட்டை.

? நாம் அருந்தும் காப்பியிலும், தேநீரிலும் ஏதோ நஞ்சு கலந்து உள்ள தாமே? உண்மையா டாக்டர்?

! ஆம். உண்மைதான், மணிகண்டன். காப்பியில் 'காஃபீன்' என்ற நஞ்சும் தேநீரில் 'டானின்' என்ற நச்சுப் பொருளும் உள்ளது. இவை இரண்டும் ரத்தக் குழாய்களையும், நரம்புகளையும் பாதிக்கவல்லவை.



சி. அருள்மணி, மொரப்பூர்.

? மாற்று மூளை சிகிச்சை செய்தால் யாருடைய நினைவுகள் தொடரும்? இறந்த பின்பு விஞ்ஞானிகளின் மூளையை மாற்ற முடியாதா டாக்டர்?

! முடியாது தம்பி. மாற்று மூளை சிகிச்சை முறை இன்னும் ஆராய்ச்சி நிலைகளில்தான் உள்ளன. தெளி

டாக்டர் கு. கணேசன்





✱ பூவண்ணன்

பாராட்டுகிறோம்!



✱ தங்கமணி

குழந்தைக் கவிஞர் அமரர் அழ. வள்ளியப்பா அவர்களின் நினைவாக ஆண்டுதோறும் ரூபாய் மூவாயிரத்தை இந்தியன் வங்கி, ''குழந்தைக் கவிஞர் நினைவு விருதாக'' வழங்கி வருகிறது. இந்த ஆண்டு இந்த விருது குழந்தை எழுத்தாளர் திரு. தங்கமணிக்குக் கிடைத்துள்ளது. குழந்தை எழுத்தாளர் சங்கம் நடத்திய ஒரு விழாவில் இந்த விருது திரு. தங்கமணிக்கு வழங்கப்பட்டது. இந்த விருதை ஏற்படுத்த முயற்சிகள் செய்த குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் தலைவர் திரு. நெ. சி. தெய்வசிகாமணியையும், ஏற்படுத்தி குழந்தை எழுத்தாளர்களுக்கு ஏற்றமளித்துள்ள இந்தியன் வங்கித் தலைவர் திரு கோபால கிருஷ்ணன் அவர்களையும் எத்தனை பாராட்டினாலும் தகும். நூற்றுக்கணக்கான சிறுவர் நூல்களை எழுதியுள்ள பழம்பெரும் எழுத்தாளர் திரு தங்கமணியைப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

சென்னையைச் சேர்ந்த பிரபல வழக்கறிஞர் எழுத்தாளர் திரு. என். சி. அனந்தாச்சாரி அவர்கள் ''அனந்தாச்சாரி அறக்கட்டளை'' என்ற ஓர் அமைப்பை ஏற்படுத்தி சிறந்த தமிழ் நூல்களுக்கும், அவற்றைப் பதிப்பித்த பதிப்பாளர்களுக்கும் ஆண்டுதோறும் பரிசளித்து வருகிறார். இதில் சிறுவர் இலக்கியத்திற்கும் பரிசு தரப்படுகிறது என்பது பெருமைப்படக்கூடிய செய்தி. இவ்வாண்டு, இந்தப் பரிசை டாக்டர் பூவண்ணன் எழுதிய ''இதோ ஓர் ஹீரோ'' பரிசு பெற்றுள்ளது. இதை வெளியிட்டவர்கள் வானதி பதிப்பகம். இதில் உள்ள கதைகளில் பல ஏற்கெனவே கோகுலத்தில் வெளியானவை என்பது சிறப்பு. அறக்கட்டளையில் சிறுவர் இலக்கியத்தையும் சேர்த்துள்ள திரு. அனந்தாச்சாரி அவர்களையும், பரிசு பெற்ற பூவண்ணனையும் பாராட்டுகிறோம்.

வி. மஞ்சுளா, சிவ கங்கை.

? கண் பார்வை இல்லாதவர்களுக்கு ஆடு, மாடு, பூனை, யானை போன்ற பிராணிகளின் கண்களைப் பொருத்த முடியுமா? கண்ணாடி அணிந்து இறப்போர் கண்தானம் செய்தால், தானம் பெற்றவர்களும் கண்ணாடி அணிய வேண்டி வருமா? விளக்கம் தேவை, டாக்டர்!

! மனிதர்களுக்கு விலங்குகளின் கண்களைப் பொருத்த முடியாது. கண்ணாடி அணிந்து இறப்போர் கண்தானம் செய்தால், தானம் பெற்ற வர்கள் கண்ணாடி அணிய வேண்டிய அவசியமில்லை. ஏனென்றால் கண் தானத்தில், இறந்தவரின் கண்களி லிருந்து 'கரு விழி' (Cornea) யை மட் டுமே தனியாக எடுத்துப் பார்வை இழந் தவருக்குப் பொருத்துகிறார்கள்; விழி லென்சை அல்ல!



இந்திய மண்ணின் இளைய இனிய மாணவர்களுக்கு, பக். 28, விலை குறிப்பிடப்பட வில்லை, பா. வேலன், 27, லைட் ஹவுஸ் தெரு, கோவை - 1.

தலைப்பைப் பார்த்ததும் 'இது சிறுவர் நூல்தானா?' என்று நமக்கு ஏற்படுகின்ற குழப்பம், உள்ளடக்கத்தைப் பார்த்ததும் தெளிவு பெறு கிறது. எல்லாப் பாடல்களும் சிறுவர்களுக்கானவையே. தேசிய ஒருமைப்பாட்டின் விளக்கத்தையும், அவசியத் தையும் வலியுறுத்தும் பாடல் கள் அதிகம். நல்லொழுக்கம் பேண வைக்கும் பாடல்களும், வழக்கமான தலைப்புகளுக்கும் பஞ்சமில்லை. பாடல் களில் கருத்து ஆழமும், சந்தமும் காணப்படு கின்றன. பல பாடல்கள் சேர்ந்து பாடத் தூண்டுபவை.

இரண்டொரு படங்களும் இருந் திருந் தால் மகிழ்ச்சியாக இருக்கும். பாராட்டத் தக்க முயற்சி.

பாமரர் கதைகள் பாகம் 1 மணிமேகலை ஆசிரியர் குழு, பக். 112, ரூ. 15.50, மணி மேகலைப் பிரசுரம், 4,தணிகாசலம் சாலை, தி. நகர், சென்னை - 17.

குப்பை கூளத்திற்கு எடைக்கு எடை கிராட்சை தருவதாக ஒருவன் கிராமத்திற்கு வந்து புதிய, அதிசய வியாபாரம் ஒன்றை ஆரம்பிக்கிறான். எல்லோரும் எள்ளி நகை யாடி, மூட்டை மூட்டையாகத் தங்கள் வீடு களில் இருந்து குப்பை கூளத்தைத் திரட்டிக் கொடுத்து கிராட்சை பெறுகிறார்கள். இப் படியும் ஒரு பைத்தியக்கார வியாபாரி இருப் பானா என்று எள்ளி நகையாடுகிறார்கள். அந்தக் கிராமத்தில் ஒரு பெண். தன் வீட்டில் ஒரு குப்பைக் கூளம் கூட இல்லையே என்று வருந்துகிறாள். அப்படிப்பட்ட சுத்தமான பெண்தான் தனக்கு மருமகளாக வரவேண் டும் என்று இப்படித் தந்திரம் செய்ததாகக் கூறுகிறான் கிராட்சை வியாபாரி. இப்படிப் பட்ட சுவையான 17 கர்ண பரம்பரைக் கதை களைத் திரட்டித் தந்திருக்கிறார்கள் இந்தத் தொகுப்பில். எளியநடை. பெரிய எழுத்து. சிறுவரோடு பெரியவர்களும் படித்துச் சுவைக்கலாம்.

கூடு திரும்பிய குயில், பூவண்ணன் கலைச் செழியன், பக். 112, ரூ. 19/-, விற்பனை உரிமை, குழந்தை இலக்கியக் கழகம், 72, கிருஷ்ணாநகர், (மூவரசம்பட்டு அருகே), சென்னை - 600 091.

தான் ஒரு வளர்ப்பு மகள் என்பதை அறி யாத சிறுமி மங்கம்மா, வளர்ப்புத்தாயின் கொடுமை தாங்காது வீட்டைவிட்டுக் கிளம்பி விடுகிறாள். புத்தி வந்து வளர்ப்புத் தாயும், தந்தையும் தேடக் கிளம்புகிறார்கள். மங்கம்மாவுக்கு அடைக்கலமளித்து ஆதரவு தருபவர்களே தன்னுடைய பெற்றோர் என்ற உண்மையை இறுதியில் மங்கம்மா அறிகிறாள். இதுதான் நாவலின் சுருக்கம். கிராமத்து மணம் வீசும் வர்ணனைகள், நிகழ்ச்சிகள், கதை அலுப்பின்றி ஓடுகிறது. கோகுலம் வாசகர்களுக்கு நன்கு அறி முகமான ஆசிரியரின் மணியான படைப்பு.

சிந்தை மகிழ சிறுவர் கதைகள், திருநின்ற ஊர் வெ. பாண்டுரங்கன், பக். 72, ரூ. 10/-, கணேஷ் பப்ளிகேஷன்ஸ், 14, மைனர் டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம், சென்னை - 94.

சிறுவர்களுக்கென்று எழுதப்பட்ட மணி யான எட்டுச் சிறுகதைகளின் தொகுப்பு இது. கவனக்குறைவாக ஆசிரியர் கூடுதலாக மதிப்பெண் போட்டு வருவதைக் காட்டி முதல் மாணவனாகும் வாய்ப்பை இழக்கும் ராஜுவேலு (நேர்மையின் பரிசு), செருக் குடன் இருந்து சீரழியும் பேருந்தின் கதை; கையெழுத்தில் பரிசு வாங்கும் இலட்சியத் துடன் உள்ள ராமச்சந்திரன், அம்மா கேட் கும் உதவிகளைச் செய்ய மறுப்பது (அம்மா வின் ஆச்சர்யம்) போன்று எல்லாக் கதை களும் புதுமை களங்களையும் கொண் டவை. கதைகள் எளிய நடையில் தெளி வாக, சுவையாக உள்ளன. உள்ளே இரண் டொரு படங்களும் இருந்திருந்தால் இன் னும் நன்றாக இருந்திருக்கும். நல்ல முயற்சி.

மதிப்புரைப் பகுதிக்குப் புத்தகங் களை அனுப்புவோர், இரண்டு பிரதிகளை ஆசிரியர், கோகுலம், 47, ஜவஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 97, என்ற விலாசத்துக்கு அனுப்பவும். சிறுவர் நூல்களும் பொது அறிவியல் நூல் களும் மட்டுமே மதிப்புரைக்கு ஏற்கப் படும்.

மேடை ஏறிப் பேசினேன்!

மேடை ஏறி, கேட்பவர் மனம் கவரப் பேசுவது என்பது தனிக்கலை. மேல்நாடுகளில் மேடையேறிப் பேச பள்ளிகளில் தனிப் பயிற்சி வகுப்பு உண்டு. நம் நாட்டில் இப்படி இல்லை என்றாலும், பள்ளிகளில் சிறுவர் சிறுமியர்க்குப் பேச வாய்ப்பளிக்க விழாக்கள், போட்டிகள் நடக்கின்றன. முதல் மேடை அனுபவம் எல்லோருக்குமே சுவையானதாக இருக்கும். அதோடு, பேச வேண்டும் என்ற துடிப்புள்ளவர்களுக்கு இது வழிகாட்டவும் பயன்படும். முத்துராமலிங்கபுரம் கோகுலம் சிறுவர் சங்கத்தைச் சேர்ந்த பிள்ளைகள் தங்கள் முதல் மேடை அனுபவத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறார்கள் :

ஜி.கே. கண்ணன் :

மாதம் ஒரு தடவை எங்கள் பள்ளியில் மாணவர்கள் கூட்டம் நடக்கும். ஆனா எனக்குப் பேசணும்னு ஆசை ஒரு தடவை கூட வந்ததே இல்லை. ஒரு முறை பேசுவதற்குத் தேர்வு செய்யப்பட்ட மாணவன் பள்ளிக்கு மட்டம். ஆசிரியர், ''கண்ணா... நீதான் பேச வேண்டும்'' என்று சொல்லி விட்டார். எனக்கு ஒரே பரபரப்பு. என் தாத்தா, ''கூட்டத்தில் நீ என்ன பேச வேண்டும்?'' - என்று கேட்டார். ''குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா பற்றி...'' என்றேன். ''உனக்குப் பிடித்தவர்தானே?'' என்று கேட்டு என்னை நூலகத்திற்கு அழைத்துச் சென்றார்.



''கண்ணா... நீதான் பேச வேண்டும்'' என்று சொல்லி விட்டார். எனக்கு ஒரே பரபரப்பு.

* ஜி. கே. கண்ணன்

மாலை மூன்று மணிக்குக் கூட்டம். இடைப்பட்ட நேரம் இரண்டு மணி நேரம்தான். ஒருமுறை கவிஞரின் கவிதைகளையும் அவரது வாழ்க்கைக் குறிப்புகளையும் வாசித்தேன். குறிப்புகளையும் எடுத்துக் கொண்டேன். ஓரளவு தெம்பு வந்தது.

மேடை ஏறினேன். தாத்தாவும் எதிரே உட்கார்ந்திருந்தார். எவ்வளவோ தைரியமாக இருந்தும், கூட்டத்தைப் பார்த்ததும், படித்த எல்லாமே மறந்து விட்டது! என் நிலையைப் பார்த்த என் தாத்தா என் எதிரே வந்து உட்கார்ந்தார். ''கண்ணா... குழந்தைக் கவிஞர் பற்றி நீ என்ன படிச்சே? அவரது பாடல்களில் பிடித்ததா ஏதாவது சொல்லு. தன்னால தைரியம் வரும்னு சொன்னார். உடனே, ''ஏடுதூக்கிப் பள்ளியில்'' பாடினேன். தைரியம் வந்தது. அதை நான் விரும்பறேன்னு சொன்னேன். அடுத்து இன்னொரு பாடல். அதற்கு விளக்கம். இப்படி சொல்லிச் சொல்லி அபாரமா பேசிட்டேன். அதற்குப் பிறகு பல தடவை மேடை ஏறிப் பரிசுகள் வாங்கி இருக்கிறேன்.

ஸ்ரீ. புனிதா :

என் முதல் மேடைப் பேச்சை இப்போ நினைத்தாலும் வியப்பாக இருக்கிறது. புளியம்பட்டியில் ஓர் இலக்கிய விழா. தலைமைதாங்கிப் பேச என் அப்பாவை அழைத்திருந்தார்கள்.

''இப்போது 'தமிழ்' எனும் தலைப்பில் சிறுமி புனிதா பேசுவாள்'' என்று நிகழ்ச்சி பொறுப்பாளர் அறிவிப்புச் செய்து விட்டார்.
எனக்குக் கையும் ஓடவில்லை, காலும் ஓடவில்லை.

* ஸ்ரீ புனிதா



நல்ல கூட்டம். அப்பா பேசத் தொடங்குமுன் திடீரென்று முன் அறிவிப்பே இல்லாமல், ''இப்போது 'தமிழ்' எனும் தலைப்பில் சிறுமி புனிதா பேசுவாள்'' என்று நிகழ்ச்சி பொறுப்பாளர் அறிவிப்புச் செய்து விட்டார்.

எனக்குக் கையும் ஓடவில்லை, காலும் ஓடவில்லை.

''மீன் குஞ்சுக்கு நீந்தக் கற்றுத் தரவா வேணும்? சும்மா தைரியமாகப் பேசு'' என்று என் காதோடு அப்பா ஊக்கப் படுத்தினார்.

எழுந்தேன். ஏதோ ஒரு வேகத்தில் ஏற்கெனவே நான் கட்டுரையாக முன்னர் எழுதியிருந்ததை மடமடவென்று பேசினேன்.

''தமிழ் என் தாய்மொழி. வல்லினம், மெல்லினம், இடையினம் மூன்றும் கலந்த மொழி தமிழ். த - வல்லினம், மி-மெல்லினம், ழ் - இடையினம். தமிழ் என்னும் சொல்லிலேயே இந்த மூன்று இனங்களும் கலந்திருக்கின்றன. தமிழை நான் மதிக்கிறேன். நேசிக்கிறேன். அதற்காகப் பிறமொழிகளை நான் வெறுக்க மாட்டேன். தமிழைத் தாயாக மதிப்பேன் என்றால், மற்ற மொழிகளை நான் சிறிய தாயாக, சகோதரியாக மதிப்பேன்'' - என்று பேசி முடித்தேன்.

புளியம்பட்டி தெலுங்கு மக்கள் அதிகம் வாழும் ஊர். அவர்கள் கைதட்டி தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

அப்பா மெதுவாக, 'பெயரைக் காப்பாற்றி விட்டாய்' என்று பாராட்டி மகிழ்ந்தார். நானும் மகிழ்ந்தேன்.

மு. மோகன சுந்தரி :

''திடீரென்று உன்னை ஒருநாள் மேடையில் ஏற்றிப் பேசச் சொன்னால் என்ன செய்வாய்?'' என்று அம்மா ஒரு நாள் கேட்டார்கள்.

''பேசுவேன்.''

''பயப்பட மாட்டியா?''

போர்க்களத்தில் எதிரிகளின் நடுவே புகுந்து சண்டையிடுகிறார்களே அவர்களுக்கு எங்கிருந்து தைரியம் வருகிறது? அவர்களுக்கு உள்ளிருந்துதானே? இங்கே எதிரில் இருப்பவர்கள் என் எதிரிகள் இல்லையே? நண்பர்கள்தானே?



* மு. மோகன சுந்தரி

கரடிக்காரன் இடறி விழுந்தால் கூட வித்தைதான்! சின்னப் பிள்ளைகள் அப்படித் தப்பாப் பேசினாலும் நல்லாத்தான் இருக்கும்



* கோமதி லட்சுமி



முதலில் கூச்சம் இருக்கும். வாய் குழறும். கை நடுங்கும். முதன் முதலில் அப்படித்தான். போகப் போக தானே சரியாகி விடும்.

❋ ஏ. வி. பாரதி

''எதுக்குப் பயப்படணும்?''

நான் சொன்னதைச் செயல்படுத்திக் காட்டவோ என்னவோ அந்த மாத பள்ளி இலக்கிய மன்றக் கூட்டத்தில் பேச என் பெயரைச் சேர்த்து விட்டார்கள் அம்மா.

முதல் மேடை அனுபவம் என்பது கூச்சம் தருவதுதான். பயத்தை உண்டாக்குவதுதான். ஆனால் போர்க்களத்தில் எதிரிகளின் நடுவே புகுந்து சண்டையிடுகிறார்களே அவர்களுக்கு எங்கிருந்து தைரியம் வருகிறது? அவர்களுக்கு உள் விருந்துதானே? இங்கே எதிரில் இருப்பவர்கள் என் எதிரிகள் இல்லையே? - நண்பர்கள்தானே? பேச்சு அவர்கள் எதிர்பார்த்தபடி இல்லை என்றால் சிரித்து விட்டுப் போகட்டும். அவ்வளவு தானே? அடுத்த முறை திருத்திக் கொண்டால் போச்சு.

இப்படி என்னை தைரியப்படுத்திக் கொண்டேன்.

சொல்ல வேண்டிய செய்தியைச் சுருக்கமாக, குழப்பமில்லாமல் அழகாகச் சொல்லி முடித்தேன். நல்ல வரவேற்பு!

முதன் முதலில் மேடை ஏறிப் பேச விரும்புபவர்களுக்கு என் சொந்த அனுபவத்திலிருந்து நான் சொல்ல விரும்புவது இதுதான்.

முதலில், சொல்ல வேண்டிய செய்திகளைத் தொகுத்து எழுதிக் கொள்ள வேண்டும். பின் அவற்றை முறைப் படுத்திக் கொண்டு தனியே பேசிப் பழக வேண்டும். பிறகு மேடையில் சென்று பேசினால் பேச்சு சரளமாக ஆற்றோட்டம் போல அமையும். இது நான் அனுபவத்தில் அறிந்த உண்மை.

கோமதி லட்சுமி :

எங்கள் பள்ளி இலக்கிய மன்றக் கூட்டம். ''நாட்டு முன்னேற்றத்தில் இன்றைய மாணவர்களின் பங்கு'' -என்னும் தலைப்பில் பேச வேண்டும். ''நீ பேசியே ஆக வேண்டும்'' - என்று எனக்கு ஆசிரியர் கட்டளை இட்டு விட்டார். அப்பாவிடம் போனேன். நான், ''பள்ளிக்கூடம் போக மாட்டேன்'' என்றேன். அப்பா காரணம் கேட்டார். நான் இலக்கிய மன்றம் பற்றிச் சொன்னேன். அப்பா சிரித்து விட்டார்.

''இப்போ இங்கே வீட்டில் நீ என்ன பேசுகிறாயோ அதை அப்படியே அங்கே வகுப்புக் கூட்டத்தில் பேச வேண்டியது தானே?''

''சொல்றது சுலபம். அங்கே கூட்டத்தில் போய்ப் பேசறதுதான் கஷ்டம்'' என்று சிணுங்கினேன்.

''அங்கே உங்கள் வகுப்பில் எங்காவது கல் குவியல் இருக்கா?''

''இல்லை.''

''கம்பு - தடி எதுவும் இருக்கா?''

''இருக்காது.''

''பின் ஏன் பயப்படணும்? கரடிக் காரன் இடறி விழுந்தால் கூட வித்தை தான்! சின்னப் பிள்ளைகள் அப்படித் தப்பாப் பேசினாலும் நல்லாத்தான் இருக்கும்'' - என்றார் அப்பா.

அப்பா சொல்லச் சொல்ல கொஞ்சம் கொஞ்சமாகத் தைரியம் வந்தது.

அன்று இலக்கியக் கூட்டத்தில் நான் பேசியே விட்டேன்.

முதன் முதலில் நான் பேசியது அப்படி ஒன்றும் பிரமாதமாக அமையவில்லைதான். ஆனாலும் இப்போது நான் கூச்சமில்லாமல் சரளமாக பேசுவதற்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்தது அந்த முதல் இலக்கியக் கூட்டப் பேச்சுத்தான்.

ஏ.வி. பாரதி :

பள்ளியில் பாரதி விழா. விழாவில் பேசும் வாய்ப்பு எனக்கு. பாரதி பற்றிக்

கட்டுரை எழுதியிருக்கிறேன். பாரதி பாடல்கள் சில படித்திருக்கிறேன். ஆனாலும் பாரதி பற்றி என்ன பேசுவது, எப்படிப் பேசுவது என்றுதான் புரிய வில்லை.

எங்கள் ஊரில் ஓய்வு பெற்ற ஆசிரியர் ஒருவர் இருக்கிறார். பாரதி பக்தர். அவரிடம் போனேன்.

''தண்ணீரில் இறங்கியதுமே நீச்ச லடித்தவர் யாரேனும் உண்டா?'' அவர் கேட்டார்.

''இல்லை'' என்றேன்.

''சைக்கிளில் ஏறினதுமே எவராவது ஓட்டிக் கொண்டு சென்றது உண்டா?''

''இல்லை.''

''அதே போலத்தான் மேடைப் பேச்சும். முதலில் கூச்சம் இருக்கும். வாய் குழறும். கை நடுங்கும். முதன் முதலில் அப்படித்தான். போகப் போக தானே சரியாகி விடும். எதிரே இருப்ப வர்கள் நம்மவர்கள் என்னும் நம்பிக் கையை முதலில் ஏற்படுத்திக் கொள். எதைப் பேச வேண்டுமோ அதைக் குறிப்புகளாக எழுதிக் கொள். எப்படிப் பேசவேண்டும் என்பதை உனக்கே உரிய விதத்தில் நான்கு ஐந்து முறை பேசிப் பார்'' - என்று அறிவுரை சொன்னார்.

அவர் சொன்னபடியே செய்தேன். பாரதியிடமிருந்த பக்தி, எப்படியும் அவரைப் பற்றிப் பேசியே ஆக வேண் டும் என்னும் துடிப்பு, அந்த ஆசிரியர் கொடுத்த ஊக்கம், எல்லாமாகச் சேர்ந்து என் பேச்சை வெற்றி பெறச் செய்து விட்டது.

என். எஸ். சேதுமாதவன்

முத்துராமலிங்கபுரம் கோகுலம் சிறுவர் சங்கத்தைப் பற்றி எங்கள் பகுதி யில் அநேகமாக எல்லாருக்கும் தெரி யும். ஒவ்வொரு மாதமும் முதல் ஞாயிறு பிற்பகல் எங்கள் சங்கத்தில் கூட்டம் நடக்கும். கூட்டத்தில் கடந்த மாதத்தில் வெளிவந்த சிறுவர் இலக்கியப் படைப் புக்களைப் பற்றிக் கலந்து பேசி கருத்து களைப் பரிமாறிக் கொள்வோம். 93 ஏப்ரல் 18-ல் எங்கள் சங்க ஆண்டு விழா. பூவண்ணன், செல்ல கணபதி போன்ற பெரும் குழந்தை எழுத்தாளர்கள் பங்கு கொண்டார்கள். எங்கள் அருப்புக் கோட்டை வட்டத்தின் பெரும் தொழில் அதிபர் முன்னிலை வகிக்க, குன்றக்குடி பெரிய பெருமாள் அவர்கள் தலைமை யில் விழா.

விழாவில் வரவேற்புரை வழங்க வேண்டிய பொறுப்பு எனக்கு! எப்படி வரவேற்பது - யாரை முதலில் வரவேற் பது என்று எனக்குப் புரியவில்லை.

என்ன பேச வேண்டுமோ, அதை கிடுகிடுவென ஒரு தாளில் எழுதிக் கொண்டேன். அப்படியே மனப்பாடம் பண்ணினேன்.

மேடைக்குப் போகும் போது கை நடுங்கியது. முகத்தில் வியர்வை அரும் பியது.

இருந்தாலும் தைரியத்தை வர வழைத்துக் கொண்டு ஏற்கெனவே மனப்பாடம் செய்து வைத்திருந்ததை, மனப்பாடம் செய்ததாகத் தோன்றாமல் இருக்கும்படி கிடுகிடுவெனப் பேசி விட்டு ஓடி வந்து விட்டேன்.

'பரவாயில்லையே. நடுக்கம் வெளியே தெரியாமல் சமாளித்து விட் டாயே' என்று விழா நடத்தப் பொறுப் பேற்றிருந்த பெரியவர் பாராட்டினார்!

விழாவில் வரவேற்புரை வழங்க வேண்டிய பொறுப்பு எனக்கு! எப்படி வரவேற்பது – யாரை முதலில் வரவேற்பது என்று எனக்குப் புரியவில்லை.

❖ என். எஸ். சேதுமாதவன்





காக்கைக்கு கறுப்பு பெயின்ட்

ஆதி காலத்தில் காக்கையும், ஆந்தையும் பனிக்கட்டி மாதிரி வெள்ளை வெளேர் என்றிருந்தன என்றால் நம்புவது கஷ்டம்தான். பிறகு எப்படி அவை கறுப்பாயின என்றுதானே கேட்கிறீர்கள்?

அது ஒரு கதை.

தூந்திர வெளியிலே ஒரு காக்கையும் ஆந்தையும் சந்தித்துக் கொண்டன. தூந்திர வெளி என்றால் பனிக்கண்டம். வெள்ளை நிறத்தில் கண்ணுக்கெட்டிய தூரம் பனிமூடிய பிரதேசம்தான் தூந்திர வெளி!

''ஆந்தையே! வெள்ளை நிறம் எனக்கு அலுத்து விட்டது. உனக்கும் அலுத்துப் போயிருக்குமே! நாம் ஒருவருக்கொருவர் ஏதாவது வேறு வர்ணத்தைப் பூசிக் கொள்வோமா?'' என்று கேட்டது காக்கை.

''உன் யோசனை பிரமாதம்! அப்படியே செய்யலாம்!'' என்றது ஆந்தை.

காக்கை எங்கேயோ பறந்து போய் சட்டி நிறைய கறுப்புச் சாயத்தைக் கொண்டு வந்தது. ''ஆரம்பிக்கலாமா? முதலில் எனக்குப் பூசி விடு'' என்று உற்சாகத்துடன் சிறகை அடித்துக் கேட்டது காகம். ''அதெல்லாம் முடியாது; இந்த யோசனையைச் சொன்னது நீதான்; ஆகவே நீயே எனக்குப் பூசி விடு'' என்றது ஆந்தை.

காக்கை தன் வாலில் இருந்து ஒரு சிறகை ஒடித்து, ''பிரஷ்'' ஆக்கிக் கொண்டு கறுப்புச் சாயத்தில் நனைத்து வேலையைத் தொடங்கிற்று.

முதலில் ஆந்தையின் பெரிய சிறகுகளில் அங்குமிங்குமாய் கறுப்புச் சாயத்தைத் தீட்டி விட்டது. வயிற்றிலும், முதுகிலும் சின்னச் சின்னக் கரும்புள்ளிகளை வைத்தது. சற்றே விலகி நின்று தலையைச் சாய்த்துப் பார்த்து விட்டு, ''பிரமாதம்! எவ்வளவு அழகாயிட்டே தெரியுமா? நீயே பாரு'' என்று தன்னையே பாராட்டிக் கொண்டது.

ஆந்தை கண்ணை விழித்து தன்னையே ஒருமுறை பார்த்துக் கொண்டது. ''பார்க்கவே சகிக்க முடியவில்லை; அகோரமாய் ஆக்கி விட்டானே இந்த முட்டாள்!'' என்று கலங்கியது. ஆத்திரப்பட்டது. ஆனாலும் ஆந்தை கோபத்தை வெளியில் காட்டாது காக்கையிடம், ''உண்மைதான்! ரொம்ப அழகு! இப்போ நான் ஆரம்பிக்கட்டுமா? பாரேன்... உன்னையே உனக்கு அடையாளம் தெரியாது'' என்று சொல்லியபடி நெருங்கிற்று.

காகம் கண்களை மூடிக் கொண்டு நின்றது. ஆந்தை சட்டென்று கறுப்புச் சாயம் வைத்திருந்த சட்டியை அப்படியே காக்கையின் தலைமுடி மீது கவிழ்த்து விட்டுப் பறந்தோடி விட்டது!

காக்கை கண்களைக் கசக்கிக் கொண்டது. ''ஆந்தை சொன்னது நிஜம்தான்; என்னையே எனக்கு அடையாளம் தெரியலியே!''

காக்கையின் உடம்பெல்லாம் ஒரு இடம் பாக்கியில்லாமல் கறுப்பாகி விட்டது.

''ஏ, ஆந்தைப் பயலே! என்னை இருட்டை விடக் கறுப்பாக்கி விட்டாயே! அட்டைக் கறுப்பனாகி விட்டேனே!'' என்று அழுதபடியே பறந்து போயிற்று. அன்று முதல் வெள்ளைக் காகங்களே இல்லாமல் போய் விட்டன.

– அ. முஸ்தபா.



யார் எதைக் கண்டு பிடித்தார்கள்?

போட்டி முடிவு

முதல் பரிசாக ரூபாய் இருபத்தைந்து பெறுவோர் :

1. ரா. பூரணி, திருச்சி - 17
2. வி. ஆர். ஹரிணி, சென்னை - 63
3. ஜி. ராஜா, நெல்லிக்குப்பம்

இரண்டு தவறுகள் செய்து ரூபாய் பத்து ஆறுதல் பரிசு பெறுவோர் :

1. கே. சரவண குமார், ஒரத்தநாடு, தஞ்சை
2. எம். மோகன், சென்னை - 15

சரியான விடை :

- ஆஸ்பிரின் மாத்திரை - ஹெர்மென் டிரஸ்ஸர்
- லிஃப்ட் - எலிஷா ஓட்டிஸ்
- சேஃப்டி பின் - வால்டர் ஹண்ட்
- ஸ்டீம் போட் - ராபர்ட் ஃபல்டன்
- தொலைபேசி - கிரகாம் பெல்
- தொலைக்காட்சி - ஜான் லோகி பெய்ர்ட்
- பற்பசை (டியுபுடன்) - ஜான் ராண்ட்
- குடிக்கும் ஸ்ட்ரா - மார்வின் ஸ்டோன்
- பேண்ட் எய்டு - ஏர்ல் டிக்சன்
- மின்சார பல்ப் - தாமஸ் எடிசன்

அடுத்த இதழில்...



- ஜப்பானுக்குப் போன சின்னப் பையன்!
  - பயண அனுபவங்கள்



- வாங்க, போலீஸ் ஆகலாம்!
  - சிறப்புக் கட்டுரை



எங்கே எ.ஊ.ந.?

★ 'வேதாளம் கொடுத்த வரங்கள்' படக்கதை மிக வும் அருமை. புதிர்ப் போட்டியும், பிருந்தாவனக் கவியரங்கமும் வெகு சுவாரஸ்யமாக அமைந் திருந்தது. அது சரி, எங்கே எங்கள் ஊரில் நடந் தது? - சேலம் பெரு. இளங்கவி, குருணிகுளத்துப் பட்டி குத்புதீன் அலி அகமது, கும்பகோணம் எஸ்.கே. மூர்த்தி.

முதலை ஜோர்!

★ முதலை கட்டுரை மிக அருமை. முதலையின் பரிணாம வளர்ச்சியை அழகாகப் படம் பிடித்துக் காட்டிய தங்களுக்கு எங்கள் பாராட்டு. - சிறு புலியூர் க. ஜெயா, மோகனா, சாந்தா, சுதாகர், மாரியப்பன்.

வயிற்று வலி!

★ இந்த இதழ் 'சிரிப்' பகுதியில் வந்த அத்தனை சிரிப்புகளும் வயிற்றைப் பதம் பார்த்து விட்டன! - திருவொற்றியூர் ப. கோகுலகிருஷ்ணன், வேலூர் வி. சரவணன்.

தரம், நிரந்தரம்!

★ 'எனக்குத்தானே பதக்கம்' சிறுகதை நல்ல தர மான படைப்பு. வெளியிட்ட கோகுலத்திற்கு நன்றி! - வலங்கைமான் பி. சிவகுமார், போளூர் கே. சிவா.

குட்டிகளுக்குப் பாராட்டு!

★ இந்த இதழ் பிருந்தாவனக் கவியரங்கத்தில் அத் தனை கவிதைகளும் மிக அருமை. குட்டிக் கவி ஞர்களுக்குப் பாராட்டுக்கள்! - தஞ்சாவூர் சிவா.

எறும்பு மட்டும் ஏன்?

★ மிருகங்கள் அது அது அந்தந்த இடத்தில் இருக் கும் போது எறும்பு மட்டும் எல்லா இடங்களி லும் இருக்கிறதே இது ஏன் என்று இது நாள் வரை குழம்பிக் கொண்டிருந்தேன். கதையரங்கத்தில் அ. முஸ்தபா எழுதியிருந்த 'எறும்பும் சிங்கமும்' படித்து விடை தெரிந்து கொண்டேன். கங்கி ராட்ஸ் முஸ்தபா! - தக்கோலம் எஸ். தாஜுக்.

இருமுறை வாராயோ!

★ 'அபிராமியின் அட்டிகை' படிக்கும் போதெல் லாம் கோகுலம், மாதம் இருமுறை வராதா என்று ஏங்குகிறேன்! - பரங்கிப் பேட்டை காசி. நடராஜன்.

பாதுகாக்க... எலி!

★ எலியின் கதை அருமை. அதை விட அறிவியல் உண்மைகள் பாதுகாக்க வேண்டியவையாகும்! - போலீஸ் லயன் நடராஜன்.

பரவசம்!

★ செப்டம்பர் இதழ் படித்தேன். அட்டையில் முதலைக் குட்டியை வைத்திருக்கும் சிறுவனின் முகத்தில் காணப்படும் மகிழ்ச்சி, பெருமிதம், பிரமிப்பு என்னைப் பரவசப்படுத்தியது! பாராட் டுக்கள். - திருவள்ளூர் என். பாலசுப்ரமணியம்.

பளிச் படம்!

★ இந்த இதழில் ஈஃபல் கோபுரம் பற்றிப் பல புதிய விவரங்கள் அறிந்து கொண்டோம். மேலும் அட்டைப்படம் பளிச்சென்று கண்ணில் ஒற்றிக் கொள்ளும்படி இருந்தது. கோபிநாத்துக்குப் பாராட்டுக்கள்! - நைனார்குளம் இரா. பாஸ்கரன்.

உதவும் மனப்பான்மை

★ அனைத்துக் கதைகளும் மிக அருமையாக வந் துள்ளன. குறிப்பாக 'டேய், தபால் பெட்டி!' - உத வும் மனப்பான்மையை வளர்க்கத் தூண்டும்படி யான சிறுகதை - கொட்டிச்செவியூர் கே. பழனிச்சாமி.

நாணயக்கதை


★ 'எங்கேடா குடை?' கதை, தனி மனிதனின் நாணயத்தைப் பற்றிச் சிறப்புற எடுத்துரைத்தது. - திருச்சி திவ்யா, செந்தில் வேல், விஜயானந்த், கந்தவேல், புன்செய் புளியம்பட்டி கிரிஜா, இஞ்சிக்கொல்லை குருநாதன், தாம்பரநாதன், ஆத்தூர் சி. மாதேஸ்வரன்.

மாறிப் போச்சே சார்!

★ 'எப்பப்பா மாறினே' - என்ற தலைப்பில் எனது சிறுகதையை வெளியிட்ட தங்களுக்கு நன்றி. ஆனால் என் பெயரை ஆண்பாலுக்கு மாற்றி விட்டீர்களே, 'அமுதன்' என்று? - மன்னார்குடி எல். அமுதா.

(தவறுக்கு வருந்துகிறோம் - ஆசிரியர்.)

பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிடுபவர் : வி. முரளி.
ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097, தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 36/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 140/-; விமானத் தபால் ரூ. 360/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 18/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 70/-; விமானத் தபால் ரூ. 180/-.


உருவாக்குங்கள் புதுமுகங்களை 'எக்கோ' வினால்!
"எக்கோ" ஸ்கெட்ச் பேனாக்களால் முகமூடிகளை உருவாக்குவது எளிதானது மட்டுமல்ல.
அது மிகவும் மகிழ்ச்சி அளிக்கக் கூடியது!
"எக்கோ" பளிச்சிடும் பல வண்ணங்களில் 12, 24 மற்றும் 30 பேனாக்கள் கொண்ட பேக்குகளில் கிடைக்கின்றது.
அனைத்திலும் மேலான சிறப்பு, "எக்கோ" நீர் அடிப்படையிலானது, நச்சுத் தன்மையற்றது...
ஆகவே, நீங்கள் உபயோகிக்க முற்றிலும் பாதுகாப்பானது.
சற்று நினைத்துப் பாருங்கள், எவ்வளவு தாய்மார்கள் அதை விரும்புகிறார்கள்!
ஆயிரக்கணக்கான பரிசுகளை வென்றிடுவீர்!
"எக்கோ" என்றாலே எல்லையற்ற களிப்பு!
Ekco

Registered as Newspaper in Srilanka

